கோகுலம்

GOKULAM

டிசம்பர் '90 விலை ரூ. 3/—





இது கிடைககாவிட்டால்
நான் அலறுவேன்
கொத்தித் தின்னா!
திதிப்பு ஏராளம்.
மகுடி போல
மயக்குதே...
என்ன ரகசியம்?
உஸ்ஸ்ஸ்!
வாய்க்குள்ளே இதுவும்
துள்ளிக் குதிக்குது!
ஆஹா! என்ன அருமை
என்ன சுவை!
Lacto King
மறக்க முடியாத சுவை.
மறுக்க முடியாத சுவை.
இதைப் பார்த்தாலே
நாக்கிலே நீர்
அருவியாக் கொட்டும்!
இது பிடிக்காவிட்டால்
உங்களுக்கு
எதுவுமே பிடிக்காது.
HTA 7604
பாரீஸ் லாக்ட்டோ கிங் - என்ன சுவை! எனவேதான்
எல்லோரும் இதைப் புகழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்!
Parry's
The King Of Sweets

கோகுலம்

1990 டிசம்பர் மாத இதழ்
மலர் 8 ○○ இதழ் 11



அருமைச் சிறுவர் சிறுமியரே,



கிருஸ்துமஸ் கொண்டாடும் குழந்தைகளுக்கு கோகுலத்தின் இனிமையான வாழ்த்துக்கள். இது டிசம்பர் மாதமாயிற்றே? அரையாண்டுத் தேர்வு நெருங்கிக் கொண்டிருக்குமே. திட்டம் போட்டுப் படிக்க ஆரம்பித்து விடுங்கள். முயன்றால் உங்களால் முடியாதது எதுவுமே இல்லை.

டிசம்பர் மாதம் ராஜாஜியின் பிறந்த நாளாயிற்றே! நாட்டுப்பற்று, தியாகம், எளிமை, தெய்வ நம்பிக்கை, திறமை, தொண்டுள்ளம் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய ராஜாஜி, தீண்டாமை மதுவிலக்கு ஒழிப்புக்கு இந்தியாவுக்கே வழிகாட்டினார். உலகம் போற்றும் மாமேதையாகத் திகழ்ந்த அவர், குழந்தைகளுக்காகவும் கதைகள் கூறியும் எழுதியும் வந்து குழந்தை இலக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பலரும் உணரும்படி செய்தார். ராஜாஜி அவர்கள் குழந்தை இலக்கியத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டை விளக்கும் கட்டுரை ஒன்றை டாக்டர் பூவண்ணன் வழங்கியிருக்கிறார்.




ராஜாஜியின் கதை ஒன்று இந்த இதழில் வெளியாகிறது. சான்றோர் படைத்த குழந்தை இலக்கியம் என்னும் இத் தொடரில், ராஜாஜி போன்ற அறிஞர் பெருமக்கள் குழந்தைகளுக்காக எழுதிய படைப்புகள் இனி ஒவ்வொரு இதழிலும் வெளியாகும்.

கோகுலத்தில் இன்னும் என்னவெல்லாம் புதுப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்று எழுதியனுப்புங்கள். இது உங்கள் கோகுலம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.



இந்த இதழில்...



அங்கே என்ன பார்க்கிறாய்?
யார் உன்னை அழைக்கிறார்?
தங்கக் கிளியும் கூண்டிலே
தங்கை உன்னை அழைத்ததோ?

வண்ணப்படம்: எம். பார்வதீசம்.

ராஜாஜியிடம் பரிசு வாங்கினேன்!

1955 ஆம் ஆண்டு.

அப்போது நான் பச்சையப்பன் கல்லூரி மாணவன். குழந்தை எழுத்தாளர் சங்கம் முதன் முதலாக சிறுவருக்கேற்ற ஒரு மணி நேர நாடகப் போட்டியை அறிவித்தது. அப் போட்டியில் முதலில் நான் கலந்து கொள்ள விரும்பவில்லை. என் நண்பர் ஜெ. எத்திராஜன் அதில் கலந்து கொள்ள ஒரு நாடகம் எழுதிக் கொண்டிருந்தார். அவரே, என்னையும் கட்டாயப் படுத்தி ஒரு நாடகம் எழுதச் சொன்னார். அதனால், அவசர அவசரமாகச் சிந்தனை செய்து, அதே அவசரத்துடன் ஒரு நாடகம் எழுதிப் போட்டிக்கு அனுப்பி விட்டேன். நான் எழுதிய முதல் நாடகமும் அதுதான்.

அந்த ஆண்டு சென்னை தியாகராயநகரில் உள்ள இராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியில் குழந்தை எழுத்தாளர் சங்கம் குழந்தைப் புத்தகக் காட்சியை நடத்தத் திட்டமிட்டது. திறப்பு விழாவில் ராஜாஜி கலந்து கொள்கிறார் என்பதையும் அவரே நாடகப் போட்டியில் வெற்றி பெறுபவருக்குப் பரிசளிக்கப் போகிறார் என்பதையும் அறிந்தேன். உடனே, "அடடா, நமக்குப் பரிசு கிடைக்கக் கூடாதா? கிடைத்தால் ராஜாஜியிடம் பரிசு பெறும் பாக்கியம் கிடைக்குமே!" என்று எண்ணிப் பரிசு பெற ஏங்கியது என் மனம்.

புத்தகக் காட்சிக்கு முந்திய நாள். புத்தகங்களைக் காட்சிக்கேற்ப அடுக்கி வைக்கும் பணியில் தலைவர் வள்ளியப்பா, செயலாளர் தம்பி சீனிவாசன் முதலியோர் ஈடுபட்டிருந்தனர். நானும் வள்ளியப்பாவின் அருகிலேயே இருந்தேன். இருவரில் யாராவது ஒருவர் "நீ பரிசு பெற்றிருக்கிறாய்" என்று அறிவிக்க மாட்டார்களா என்று ஏங்கினேன்.

மணி இரவு ஏழாயிற்று.

போட்டியின் முடிவு தெரியவில்லை.

'காலையில் புத்தகக் காட்சியின் திறப்பு விழாவுக்கு வந்து விடுகிறேன்' என்று கூறி விடைபெற்றுக் கிளம்பிய என்னைத் தடுத்து நிறுத்தினார், தலைவர். 'நாளைக்குப் பரிசளிக்க ஒரு வெள்ளித் தட்டு வாங்க வேண்டும். நீயும் வா' என்று அழைத்தார்.

யாரோ பரிசு பெறப் போகிறார். அவருக்குப் பரிசுப் பொருள் வாங்க நான் செல்வதா? எனக்கு விருப்பம் இல்லை. என்றாலும், என் குருநாதர் குழந்தைக் கவிஞர் அழைத்த பிறகு மறுத்துப் பேச முடியுமா?

மறுநாள்.

விழா தொடங்கு முன்பே விழா அரங்கத்துக்கு வந்து விட்டேன்.

குறித்த நேரத்தில் ராஜாஜி வந்தார். தலைவர் செயலாளருடன் அவரை நானும் வரவேற்ற போது, "இந்தத் தமிழ் வியாசரிடமிருந்து பரிசு பெறும் பேற்றைத் தவற விட்டு விட்டோமே" என்று உள்ளம் வருந்தியது.

டாக்டர் பூவண்ணன்

ராஜாஜி பேசி முடித்தார். வள்ளியப்பா ஒலிபெருக்கிக்கு முன்னே நின்று சங்கம் நடத்திய நாடகப் போட்டியைப் பற்றி விளக்கினார்.

"போட்டிக்கு வந்த நாடகங்களை ஔவை. டி. கே. சண்முகம் அவர்களும் மீ. ப. சோமு அவர்களும் பரிசிலனை செய்து பரிசுக்குரிய நாடகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்கள் தேர்ந்தெடுத்த நாடகம் 'உப்பில்லாத பண்டம்'. எழுதியவர் பூவண்ணன்."

நான் அதிர்ச்சியால் சிலையாக நின்றேன். 'போங்க', என்று தம்பி என்னை முன்னே தள்ளிவிட, மேடையில் ஏறினேன்.


நேற்று என் முன்னிலையில் தேர்ந்தெடுத்த அதே தட்டினைக் கவிஞர் ராஜாஜியிடம் கொடுத்தார். அவர் என்னை வாழ்த்தித் தம் திருக்கரத்தால் அப் பரிசினை எனக்கு வழங்கினார். நான் பெருமகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டேன்.

போட்டியில் நான் பரிசு பெற்றதை அறிந்தும், அதை முன்னரே அறிவிக்காமல் விழா மேடையில் அறிவித்து ஓர் இன்ப அதிர்ச்சியைத் தர வேண்டும் என்று கவிஞரும் தம்பியும் திட்டம் போட்டதைப் பின்பு அறிந்தேன்.

பரிசு பெற்ற 'உப்பில்லாத பண்டம்' நூலாக வந்தது. அதே நாடகம் சென்னை, அரியூர், தஞ்சை, புதுக்கோட்டை, பாண்டிச்சேரி முதலிய நகர்களில் பலமுறை நடிக்கப் பட்டது.

ராஜாஜி அவர்களை முதன் முதலாக இப்படித்தான் சந்தித்தேன். அதே பரிசளிப்பு விழாவில் பேசிய போது ராஜாஜி அவர்கள் ஓர் அறிவிப்புச் செய்தார். "குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 107 என்று வள்ளியப்பா சொன்னார். சங்கத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ளட்டும். என்னோடு சேர்ந்து சங்க உறுப்பினர் எண்ணிக்கை 108 என்னும் நல்ல எண்ணைப் பெறும்" என்று கூறினார்.

ஆற்றலின் சிகரமான; அனுபவத்தின் களஞ்சியமான ஓர் உலக எழுத்தாளர், குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராகி, எங்கள் மதிப்பையும் சங்க மதிப்பையும் உயர்த்தி விட்டார். ஆம்! ராஜாஜி ஒரு குழந்தை எழுத்தாளர்! ராஜாஜி



யைப் பற்றி எழுதுபவரும் பேசுபவரும் இந்த உண்மையை உணர வேண்டும்.

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் பல உண்டு. ஒவ்வொரு கட்சியிலும் புகழ் பூத்த தலைவர்கள் உண்டு. ஆனால், குழந்தைகள் நலனில் அக்கறை கொண்ட, குழந்தை இலக்கியத்தில் அனுபவம் பெற்ற, குழந்தை எழுத்தாளர் சங்கத்தை அரவணைத்துக் கொண்ட ஒரே தலைவர் ராஜாஜி அவர்களே!

ராஜாஜி அவர்கள் குழந்தை எழுத்தாளர் சங்க உறுப்பினர் ஆனார். அந்தச் சங்கத்தின் செயல் முறைகளை அறிந்தார். அதன் தலைவர் குழந்தைக் கவிஞர் அணுகிய போதெல்லாம் ஆலோசனை வழங்கினார்.

ஒருமுறை குழந்தை எழுத்தாளர் சங்கம் சென்னை உட்லாண்ட்ஸ் ஓட்டலில் அமெரிக்க நாட்டுக் குழந்தை எழுத்தாளர் மன்றோ லீஃப் **(Munro Leaf)** அவர்களுக்கு ஒரு வரவேற்பு வழங்கியது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ராஜாஜி அவர்கள் பெயர் இல்லை. ஆனால், முடியுமானால் நிகழ்ச்சிக்கு வருமாறு குழந்தைக் கவிஞர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அப்போது குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர், நான். எனவே, விழா தொடங்கும் முன் அரங்கின் வாயிலில் நானும் தலைவர் குழந்தைக் கவிஞரும் வருபவர்களை வரவேற்கக் காத்திருந்தோம். என்ன ஆச்சர்யம்! ராஜாஜி அவர்கள் காரிலிருந்து இறங்கி எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். அதுவும், விழா தொடங்குவதற்குக் குறிப்பிட்ட நேரத்துக்கு அரை மணி முன்னதாகவே வந்து கொண்டிருந்தார்.

ராஜாஜி அவர்களை அளவு கடந்த மகிழ்ச்சியோடு வரவேற்றோம். மன்றோ லீஃபுக்கு அறிமுகப் படுத்தினோம். இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகத் திகழ்ந்த ஒரு மாமேதை — உலகம் போற்றும் சான்றோர் எவ்வளவு எளிமையாக இருக்கிறார் என்பதையும், காந்தியடிகள் நேரு போன்றோர் போற்றும் எழுத்தாற்றல் பெற்றவர் குழந்தை எழுத்தாளர்களின் நிகழ்ச்சியில் உறவோடும் உரிமையோடும் கலந்து கொண்டார் என்பதையும் கண்டு வியந்து நின்றார், மன்றோ லீஃப். அவர் தமது நூல்களில் மிகவும் புகழ் பெற்ற, "பெர்டினான் என்னும் காளை" **(Ferdinan the Bull)** என்னும் நூலை ராஜாஜி அவர்களிடம் காட்டி விளக்கினார். ராஜாஜி அவரது எழுத்தாற்றலையும் ஓவிய ஆற்றலையும் பாராட்டிய போது, மன்றோ லீஃப் "இதுவே பெறற்கரும் பரிசு" என்று மகிழ்ந்தார்.

நான் முதன் முதலில் பரிசு பெற்றது, ராஜாஜியிடமிருந்துதான்! அவரது கைராசியான கை என்பதை அனுபவத்தால் உணர்கிறேன். அவர் பரிசு வழங்கிய 1955 ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது பரிசுகள் பெற்று வருகிறேன். இந்த ஆண்டு ஜனவரியில் இந்திய சிறுவர் கல்விக் கழகத்தின் மிகப் பெரிய பரிசைப் பெற்றேன். அப்போதும் நான் முதன் முதலில் ராஜாஜியின் பொற்கரத்தால் பரிசு பெற்றதை நினைத்துப் பெருமையுற்றேன்! அது கிடைத்தற்கரிய பெரும்பேறு என்பதில் ஐயமேது?




"சர்க்கரையைத் தின்னா விக்கல் நிக்கும்னு நம்ப பையன்கிட்ட சொல்லித் தொலைச்சீங்களா?"

"ஏன்?"

"பாருங்க, ஒரு கிலோ சர்க்கரையையும் அவனே முழுங்கிட்டானே!"

— ஷோபனா வெங்கட்ராமன்.

வேம்பின் ஆசை



ஒரு பழைய வேப்பமரம். அதன் பக்கத்தில் ஒரு சிறு வேப்பஞ் செடியும் நன்றாகத் தளதளவென்று வளர்ந்து கொண்டிருந்தது.

''அம்மா! நானும் உன்னைப் போலவே கசப்பாகத்தான் வளரு வேனா?'', என்றது செடி.

''வேறு எப்படி வளர்வாய்? அப் படித்தான் வளர்வாய். அது உனக்குச் சம்மதமில்லையா?'', என்றது கிழ வேம்பு.

''மருந்துக்கும் மந்திரத்துக்கும்தான் உன்னிடம் எல்லாரும் வருகிறார்கள். ருசித்து வந்தவர்கள் யாரையும் நான் காணவில்லையே!'', என்றது செடி.

''மருந்தும் மந்திரமும் தானே துக்கத்தைத் தீர்க்கும்? தித்திக்கும் பழம் என்ன தரும்? நிலையான சுகத் தைத் தராது. நான் இருக்கும் நிலை எனக்குத் திருப்தி. நீயும் அப்படியே இருப்பாய், குழந்தாய்!'', என்றது தாய் மரம்.

''எனக்கு ஆசையாக இருக்கிறது. நல்ல கறிவேப்பஞ் செடியாகத்தான் ஆகவேண்டும் என்று ஆசைப்படு கிறேன்'' என்றது செடி.

''குழந்தாய்! வேண்டாம். என்னைப்போல் நீயும் நீண்ட ஆயுள் இருந்து சுகமாக இருப்பாய். பிறரு டைய சுகம் நமக்கு வேண்டாம். அதைக் கண்டு ஆசைப்படுவதால் கேடு விளையும்'' என்று மரம் சாஸ் திரம் சொல்லிற்று.

குழந்தைச் செடி கேட்கவில்லை. 'நான் வேப்பமரம் ஆகமாட் டேன்' என்று தீர்மானித்தது! கணே சனைத் துதி செய்து வரம் பெற்று விட்டது! வேப்பஞ் செடி கறிவேப் பஞ்செடியாக வளர்ந்தது!

மூன்று அடி வளருவதற்குள், பக்கத்திலுள்ள வீட்டாரெல்லாம் செடியிலிருந்து சமையலுக்குக் கறி வேப்பிலை பறித்துக் கொண்டு போக ஆரம்பித்தார்கள். சிலர்

ராஜாஜி

கொஞ்சம் இரக்கத்துடன் முற்றிய இலையாகப் பறித்துக் கொண்டு போனார்கள். கிளை கிளையாகவே பறித்தார்கள் சிலர்.

சிலர் தேடி இளங் கொழுந்து களையே பறித்துக் கொண்டு போனார்கள். அதுதான் சமையலுக்கு ருசி என்று இப்படிச் செய்தார்கள். மீதியிருந்த செடியை ஒரு நாள் ஆடு ஒன்று வந்து மேய்ந்து விட்டது!

மண்ணுக்குள் வேப்பம் வேர் இன்னும் இருந்தது. கணேச பகவானுடைய வரம் வேர்வரையில் போகவில்லை. கணேசனுக்கு இன்னது ஆகும் என்று முந்தியே தெரியுமல்லவா?


''அம்மா! நான் புத்தியடைந்தேன்'' என்றது வேர், தாய் மரத்தைப் பார்த்து, தீன சுவரத்தில்.

''இன்னும் இருக்கிறாயா, குழந்தாய்?'' என்றது தாய் மரம்.

''அம்மா போதும். நான் ஆசைப் பட்டது மடமை. கசப்பு மரமாக இருப்பதே மேல் என்பதைத் தெரிந்து கொண்டேன். எனக்குப் பிழைக்கும் வழி சொல்லித் தா'', என்றது அந்த வேர்.

''மறுபடியும் கணேசனைத் துதி செய்!'' என்றது மரம். ''நானும் உனக்காகக் கேட்டுக் கொள்ளுகிறேன்''– இவ்வாறு சொல்லிவிட்டு, வேப்பமரம் தன் முழு பக்தியையும் செலுத்திக் குழந்தைக்காகப் பிரார்த்தனை செய்தது.

வேர் துளிர்த்தது. வேப்பஞ் செடியாக நன்றாக வளர்ந்தது. ஊரார் கறிவேப்பிலைக்காக மறுபடியும் வந்தார்கள். சுத்தக்கசப்பாக இருந்ததைப் பார்த்து விட்டுத் திரும்பிச் சென்றார்கள். செடியை வளர விட்டு விட்டார்கள். ஊர்க்கோழிகள் வந்து செடியின் கீழ் தரையைக் கீறியும் கொத்தியும் கொடுத்தன. அவை புழுக்கள் தேடிக்கிறின. ஆனால், அது செடிக்கு நல்லதாயிற்று. வேகமாக வளர்ந்தது. கொழுந்துகளைப் பிடுங்கிப் போவார் யாருமில்லை. தாய் மரத்தின் பூவும் அதன்மேல் சந்தோஷமாக உதிர்ந்தது.



• 1958 இல் கல்கியில் வெளியானது.

அசர வைத்தது!

* 'குழந்தைகளின் உணர்வுகளைக் குழந்தை உள்ளம் கொண்டவர்களால் மட்டுமே உணர முடியும். அந்த வகையில் வள்ளியப்பாவுக்கு நிகர் வள்ளியப்பாவே!' என்பதை திரு. தெ. முருகுசாமி அவர்கள் ஆணித்தரமாய் விளக்கிச் சொல்லியிருந்த விதம், என்னைப் பெருமிதம் கொள்ளச் செய்தது.

சங்கமங்கலம். ரு. சம்பந்தம்.

* 'தவளையாரின் தீ பாவளிப் பயணம்' சிறுகதையை படித்த அன்று இரவே, ராம்ஜியின் கனவில் வந்தது போல என் கனவிலும் ஒரு தவளை... மந்திர சாகஸம் புரிவது போல்... ஒரு பயங்கரமான கனவு!

* தேரு மாமா கவிதையும் கட்டுரையும் ரொம்ப அருமை. இது போல் மாதம் ஒரு தலைவரை எங்களுக்கு அறிமுகப்படுத்துவீங்களா சார்?

தஞ்சாவூர் — 6 கே. ரவி.

* அடுத்த ஆசியப் போட்டி ஜப்பானின் ஹிரோஷியாமாவில்தானே? பாங்காக்கில் என்று குண்டுமணி எழுதியிருக்கிறாரே!

மடிப்பாக்கம். பி. ஸ்ரீராம் பாபு.

(தவறை எடுத்துக் காட்டிய கணக்கற்ற வாசகர்களுக்கு நன்றி! இவ்வளவு உஷாரா! குண்டுமணி சார் நான்கு வருஷம் முந்திக் கொண்டார். அவ்வளவுதான். 1998 ஆம் ஆண்டு ஆசியப் போட்டிதான் பாங்காக்கில்... ஆசிரியர்.)

* "திருடினால் அடிக்காதே" சிறுகதை இன்றைய சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கையை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. இதுபோன்ற கதைகளைப் படித்தாலாவது பிள்ளைகளைப் பெற்றவர்கள் திருந்த மாட்டார்களா?

தக்கோலம். அ. முஸ்தபா.

* வரத்தின் மகிமை உள்ளது என்று கர்வம் கொண்டு வாழ்ந்தால் அதன் விளைவு என்னவாகும் என்பதை விளக்கியது, "உஷா கல்யாணம்" வண்ணப் படக்கதை.

புன்செய்புளியம்பட்டி. பி. எல். கிரிஜா.

* வாய்ப் புண்ணுக்கு வைத்தியம் தெரியாமல் இருந்த எனக்கு கோகுலம் நல்ல சமயத்தில் உதவியது.

மொரப்பூர். என். முரளி.

* புலியை கண்டால் பயந்து ஓடுபவர் எத்தனையோ பேர் இருக்க, தேரு அதனிடம் மிக்க அன்பு காட்டுவதாக அமைந்த புகைப்படம் மிக அருமை.

லெட்சுமாங்குடி ரமேஷ் பாபு.

* 'விந்தை மிக்க ர்ாடார்' பகுதி மிக அருமை. பயனுள்ளதாக இருந்தது.

கூத்தாநல்லூர். டி. எஸ். ரமேஷ்.

* நான்கு வயது ஸ்ரீவித்யாவின் அற்புதத் திறன் அசர வைத்து விட்டது. ஸ்ரீவித்யாவின் எதிர்கால ஆசை அயரவைத்து விட்டது.

சேலம் — 1. ரவி பாலாஜி.

* "சிறுமியைக் கொடு" கதையைப் படித்து விட்டு குழந்தை ரோஸியின் தியாக உணர்வைக் கண்டு மெய்சிலிர்த்து போனேன்.

சாணடோரியம். மீ. முரளி.

* முதலை சிந்துவது கண்ணீரா?—அறிவியல் உண்மைகளை அழகிய நடையில் கதை போல் சொன்ன ரேவதி அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

கடலூர். துரை வேணுகோபால்.

* சிறுமி ஸ்ரீவித்யா கேள்வியில் பம்பாய் கடல்ல கரைப்பாங்களே (பிள்ளையாரை) அது எந்தக் கடல்? என்று அத்தையின் கணவர் திரு. கே. எச். கிருஷ்ணனின் கேள்விக்கு "பே ஆப் பெங்கால்" என்று பளிச் சென்று கட்டிக்காட்டினாள் என்று இருக்கிறது. இது தவறு.


(தவறுதான். அரபிக்கடல் என்று இருக்க வேண்டும். ஆசிரியர்.)

* நவம்பர் மாதத்திற்குப் பல சிறப்புகள் உண்டு. இப்போது இன்னொரு சிறப்பும் கூடியிருக்கிறது. ரேவதி அவர்கள் கோகுலம் இதழின் கௌரவ ஆசிரியராகப் பொறுப் பேற்றிருப்பதும் இந்த மாதத்தில்தான்.

குழந்தை இலக்கியம் என்னும் இன்ப உலகிற்கு நம்மை எல்லாம் அன்புடன் அழைத்துச் செல்ல இருக்கும் ரேவதி அவர்கட்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சென்னை — 40. எச். கிருஷ்ணமூர்த்தி.

பார்த்தா பறக்கிறது வெளவால்?



கிழக்குக் கோபுர வாசலில் பொன்னுசாமி தன்னுடைய கடையைப் பரப்பி விட்டார். துணி விரிக்கப்பட்டு அதில் சிறிதும் பெரிதுமாக தைலம் நிரப்பப்பட்ட புட்டிகளை வைத்தார்.

''பழம் தின்னி வெளவால் தைலம். எல்லாப் பார்வைக் குறைபாடுகளையும் போக்கவல்ல சஞ்சீவித் தைலம். பத்தியம் இல்லே; எதுவும் இல்லே. நாற்பது நாளில் பலன் தரும்.''

துண்டுக்காரர் சிறுவனோடு அருகில் வந்து நின்றார்.

''என்னங்க பையனுக்கு?''

''பள்ளிக்கூடத்துல வாத்தியார் போர்டுல எழுதிப் போடறது தெரியலையாம். அதான் கண்ணாஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன்.''

''ஆஸ்பத்திரி டாக்டர், கண்ணுல சொட்டு மருந்து விடுவார். எரியும். மறுபடி நாளைக்கு வரச் சொல்லுவார். கண்ணை டெஸ்ட் பண்ணி, சீட்டு எழுதிக் கொடுத்து கண்ணாடி போட்டுக்கச் சொல்லுவார். நூறு ரூபாய் பழுத்துடும்.''

''அப்பா, ஆஸ்பத்திரி வேண்டாம்பா. சொட்டு மருந்து போட்டால் கண் தெரியும். இவர்கிட்டேயே தைலம் வாங்கிக்கலாம்பா,'' என்று சிறுவன் தந்தையிடம் கெஞ்சினான்.

''இது நம்பிக்கையான மருந்துதாங்களா?''

''பதினைந்து வருஷமா இதே இடத்துல கடை போட்டு விற்கறேங்க.''

கழுத்தில் தாயத்துக் கட்டிய சிறுவன் ஒருவன் பொன்னுசாமியிடம் வந்து, ''ஐயா, எண்பது நாள் புட்டி ஒன்று கொடுங்க'' என்று ஒரு ஐம்பது ரூபாய் நோட்டைக் கொடுத்தான். புட்டியை வாங்கிக் கொண்டு போனான்.

மிச்சம் இருந்த கொஞ்ச நஞ்ச தயக்கமும் துண்டுக்காரருக்குப் போய் விட்டது.

''எவ்வளவு இருட்டா இருந்தாலும், எவ்வளவு தடைகள் இருந்தாலும் வெளவாலுங்க வழி கண்டுபிடிச்சுப் பறக்குதுங்களே... அந்த மாதிரி, 'கும்' மிருட்டிலும் கூடப் பார்க்கும் சக்தியை இந்தப் பழந்தின்னி வெளவால் தைலம் தருங்க.''

கோபுரத்தின் முதல் நிலையில் இருண்ட மூலையில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த உளுந்துக் கண்ணன் 'ரிச்', 'ரிச்' சென்று குரல் கொடுத்து ஆடியது. கோபுரத்தின் இரண்டாவது மாடத்தில் மார்பில் குட்டியோடு தொங்கிக் கொண்டிருந்த கொக்கிக்காலி, இறகு போன்ற தன் தோல் படலத்தை விரித்துப் பறந்து உளுந்துக் கண்ணனிடம் வந்தது.

உளுந்துக் கண்ணன் ஆண் வெளவால். அதன் கண்மணிகள் சிறிதாக உளுந்துப் பயிரைப் போல் இருக்கும். கொக்கிக்காலி அதன் மனைவி. இதன் பின்கால்களில் கொக்கி போன்ற வளைந்த நகம் இருந்தது. அதனால் அப் பெயர்.

ரேவதி



இரண்டுமே பழந்தின்னி வெளவால்கள். கோபுரத்தில் இருந்த நூற்றுக் கணக்கான வெளவால்களோடு அவை வசித்து வந்தன.

"எதுக்காகக் கூப்பிட்டீங்க? இந்த சிவப்பனையும் பார்பில் சுமந்து கொண்டு பறப்பது எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா?" என்று அலுத்துக் கொண்டே, கணவனுக்கு அருகே வந்து தலைகீழாகத் தொங்கியது கொக்கி. மற்ற வெளவால்களெல்லாம் பெரும்பாலும் கறுப்பாக இருக்க, கொக்கியின் மகன் மட்டும் கருஞ்சிவப்பாக இருந்தது. அதனால் அப் பெயர்.

"இந்தப் பொன்னுசாமிக்கு இன்னிக்கி நல்ல வியாபாரம். இது வரை பத்துப் புட்டி தைலம் வித்துட்டார். பழந்தின்னி வெளவால் தைலத்தைத் தினமும் தேய்ச்சுக் குளிச்சால், நமக்கு இருட்டில் கண் தெரிவது போல், பார்வைக் கோளாறு உள்ளவர்களுக்குக் கண் பார்வை திரும்பும்னு இவர் அளக்கிறார்! அதை நம்பி எவ்வளவு பேர் தைலத்தை வாங்கிக்கிட்டுப் போயிருக்காங்க தெரியுமா?" என்றது உருந்து.

"ஐய...! இவன் கதிரேசனுங்க. பொன்னுசாமியோட சொந்தப் பையன்!" என்றது கொக்கி.

"ஒரே குழப்பமா இருக்கே!"

"குழப்பமே இல்லை. ஊரை ஏமாத்த, இப்படி சொந்தக்காரங்க நாலைந்து பேரை பொன்னுசாமி ஏற்பாடு பண்ணி வைச்சிருக்கார்!

கோபுரவாசலில் ஏதோ சத்தம் கேட்டது. பாவாடை சட்டை அணிந்த ஏழைச் சிறுமி ஒருத்தி கோபுரத்தைப் பார்த்து இரு கைகளையும் உயர்த்தி,

"வெளவால் மாமா வாவா!
வேப்பங் கொட்டை தாதா!
வெளவால் மாமா வந்திடுங்க!
வேப்பங் கொட்டை தந்திடுங்க!" —

என்று பாடினாள்!

"இந்தப் பொண்ணு, நாட்டு வைத்தியர் மகள் சின்னி. வைத்தியத்துக்காக அடிக்கடி வேப்பங்கொட்டையைப் போட்டு வேப்பெண்ணெய் காய்ச்சுவாங்க. ஏராளமா வேப்பங் கொட்டை தேவை இவங்களுக்கு. நாம, ராத்திரில பழ வேட்டைக்குக் கிளம்பினால், நூற்றுக்கணக்கில் பழம் சாப்பிடறோமே! நாம்ப துப்பற கொட்டையெல்லாம் இந்தப் பொண்ணு சின்னிதான் திரட்டிக்கிட்டுப் போகும். இப்போ எண்ணெய் காய்ச்ச வேப்பங்கொட்டை தேவைப்படுது போல் இருக்கு. அதான் வந்து பாட்டுப் பாடி நினைவுபடுத்திட்டுப் போறது. நல்ல பொண்ணு" என்றது உருந்து.

"நேற்றே கொய்யாத் தோப்பில் பழ வேட்டைக்குப் போன போது.

தோட்டக்காரன் மூட்டம் (புகை) போடணும்னு பேசிக்கிட்டான். அதனால, இன்னிக்கு வேம்பம்பழ வேட்டையை வைச்சுப்போமே?'' என்றது கொக்கி.

''நம்ம கூட்டத்தார்களுக்குச் சொல்லிடு'' என்று மனைவியை அனுப்பியது உளுந்து.

அடுத்து வந்த பௌர்ணமி தினத்தன்று வழக்கப்படி வௌவால் கூட்டம் பழவேட்டைக்கு நள்ளிரவில் கிளம்பியது. சபோட்டா தோப்பை நூற்றுக்கணக்கில் முற்றுகையிட்டன!

தோப்புக்கு அருகே ஒரு ஓட்டு வீடு. அதன் வாசலில் யாரோ நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

''என்னங்க!'' என்று கணவனை அழைத்த கொக்கி, ''அதோ பாருங்க... புளுகு பொன்னுசாமி, அவர் பையன் கதிரேசன்! கையில ஏதோ பயணத்துக்குப் போற மாதிரி பெட்டி...! வீட்டு வாசல்ல சரக, ஒரு பெரியவரு... அவர் யாருங்க? இவங்க எதுக்காக இவ்வளவு தூரம் வந்திருக்காங்க?'' என்று கேள்வி மேல் கேள்விகளை அடுக்கியது கொக்கி.

''இது, பொன்னுசாமியோட மாமனார் வீடுன்னு நினைக்கிறேன். அந்தப் பெரியவர்தான் அவர் மாமனாரா இருக்கும்'', என்றது உளுந்து.

''பார்வை பாதித்த அப்பாவி கிராம மக்களை, டாக்டரிடம் போகாது தடுத்து போலித் தைலத்தைக் கொடுத்து நம்ப வைத்து அவர்கள் பார்வ்வையை மேலும் மோசமடைய வைத்ததற்கு தண்டனை கிடைத்து விட்டது. ஊர்ப் பிள்ளைகளுக்கெல்லாம் நான் தயாரித்த தைலத்தைக் கொடுத்து விட்டு, என் பிள்ளை பாதிக்கப்பட்ட போது வைத்தியம் பார்க்க சென்னைக்குக் கூட்டிக் கொண்டு போனால் ஊரார் விடுவார்களா? அதுதான் இங்கே வந்து இருந்து விட்டு. இங்கிருந்து சென்னைக்குக் கூட்டிக் கொண்டு போகிறேன். கதிரேசனுக்குப் பார்வை திரும்பினால் போதும். இனிமே, இப்படித் தைலம் செய்து ஊரை ஏமாற்ற மாட்டேன். இது சத்தியம்'' என்று மாமனாரிடம் விம்மினார் பொன்னுசாமி.

''அப்பா, சத்தியத்தை மீறக் கூடாது!'' என்று எச்சரித்த கதிரேசன், ''எனக்குப் பார்வைக் கோளாறு எதுவும் இல்லை. உங்களை மாற்ற வேண்டும் என்று நானும் அம்மாவும் போட்ட திட்டம்'' என்று சிரித்தான்.

''எப்படியோ, பொன்னுசாமி திருந்தினால் சரி'' என்று மனைவியிடம் கூறியது உளுந்து.



அறிவியல் உண்மைகள்

வௌவால்கள் தடைகளில் முட்டி மோதிக் கொள்ளாது பறப்பதற்கு அவற்றின் காதுகளே பயன்படுகின்றன. வாயால் ஓசை எழுப்பி அனுப்பி விட்டு, அவற்றின் எதிரொலியைக் கேட்டு, வழிகாட்டியாகக் கொண்டே அவை பறக்கின்றன.

பழந்தின்னி வௌவால் தைலத்தால் பார்வைக் கோளாறு குணமடையாது. வௌவால்கள் குட்டியைத் தூக்கிக் கொண்டு பறக்கும். வௌவால்கள் வேப்பங் கொட்டைகளை நூற்றுக்கணக்கில் தின்று கொட்டைகளை மரத்தில் குவித்துச் செல்லும். வௌவால்கள் பழங்களுக்குச் சேதம் விளைவித்து தோட்டக்காரர்களைக் கலங்க வைக்கும்.

மறுபடியும் பீஜிங்கில்

○ இந்தியா கபாடிப் போட்டியில் தங்கம் பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடும் நேரத்தில், அடுத்த ஹிரோஷிமா ஆசியப் போட்டியில் கபாடிக்கு இடமில்லையென்பதுவருத்தத்துக்குரிய தாகும்!

○ இந்தியத் தோல்விக்குக் காரணம் பற்றித் தேசியப் பயிற்சியாளர் சைனி கூறுவது: "இப்பொழுது போட்டிகளுக்குத் தேர்வு நடத்துவது ஒரு மாயை. தேர்வுப் போட்டிகளில் விளையாட்டுக் கலைஞர்கள் சிறப்பாகச் செய்து பீஜிங்குங்கு நுழைவுச் சீட்டு பெற்றார்கள்! ஆனால் போட்டிகளில் அவர்கள் அக்கறை செலுத்தாமல் மெத்தனமாக இருந்தார்கள்! அதன் விளைவுதான் படுதோல்வி!"

○ பீஜிங்கில் பதினைந்து நாள் போட்டிகளுக்குப் பிறகு நடைபெற்ற வழியனுப்பு விருந்தில் சீனச் சின்னம் பான்பானுக்கு உயிர் கொடுத்தாற் போல் ஹாங்காங்கையிலுள்ள சர்க்கஸ் குழுவிலிருந்து நிஜமான 'பண்டா' வலம்வந்து அனைவரையும்மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைத்தது.

○ ஆசியப் போட்டியில் மூன்று

* பொம்மை அல்ல. உண்மையான பண்டாவேதான்! * குக்குவும் பொப்புவும் — ஹிரோஷிமா ஒலிம்பிக்கின் சின்



குண்டுமணி

தங்கப்பதக்கங்களைப்பெற்றுக்கொரியாவுக்குப் பெருமை தேடியவர் சுன் இன்சிக். இருபத்திரண்டு வயதானவர் சுன் இன்சிக். ஆறு வருஷங்களுக்குமுன் படகுப் போட்டியில் பயிற்சி பெற்ற இவர் ஜெர்மனிக்கும், யுகோஸ்லாவியாவுக்கும் சென்று தம் திறமையை வளர்த்துக் கொண்டவர்!

* சீனாவின் திறமைமிக்க நீச்சல் வீரர் ஷென் ஜியங்குபங் ஐந்து தங்கப் பதக்கங்களை வென்று சீனாவுக்குப் பெருமை சேர்த்தார். இந்தியா இதைக் கண்டு பெருமூச்சு விடத்தான் முடியும்!

* இந்திய காப்டன் பர்கத்சிங் ஹாக்கிப் பந்தயத்தில் ஹாங்காங்கோடு ஆடும்போது அவரது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது! இந்தியக் குழுவுக்கு பர்கத்சிங்கின் ஆட்டம் தேவைப்பட்டதால், அவரது பலத்த காயம் பற்றி அவருக்கு மூடி மறைக்கப்பட்டது! டாக்டர், பாகிஸ்தானோடு இறுதி ஆட்டம் முடிந்த பிறகே அவருக்கு 'விஷயத்தை' விளக்கியிருக்கிறார்! பர்கத்சிங்கும் வலிபொறுக்கும் ஊசிகளைப் போட்டுக்கொண்டு ஆட்டத்தில் இறங்கியிருக்கிறார்! இந்தவேளையிலும்பர்கத்சிங் ஆடியது பாராட்டுக்குரியது! தங்கம் பறி போனாலும் பர்கத்சிங் தீவிர கவனத்துடன் ஆடியது, அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது! தம் கால் முறிவைப் பிறகு டாக்டர் அவரிடம் தெரிவித்த போது, அவருக்கே மலைப்பாக இருந்தது!

* சீன விளையாட்டு வீரரின் மன உறுதி போற்றுதற்குரியது. சீனாவின் 'டிஸ்கஸ் த்ரோ' சாம்பியன் ஜாங் ஜிங் லாங் வாலிபால் ஆட்டக் கலைஞர் ஷென் குன் குரியியை இரண்டு ஆண்டுகளுக்குமுன் மணந்து கொண்டார்! தமக்குப் பந்தயத்தில் பதக்கம் கிடைத்த பிறகே குடித்தனம் என்று மனைவியிடம் உறுதியாகச் சொல்லி விட்டாராம்! சீனாவுக்குத் தங்கப்பதக்கங்களும், வெள்ளி வெண்கலப் பதக்கங்களும் குவிந்ததில் வியப்பென்ன?

* "ஹிந்து" நாளிதழ் நிருபர் ஆனந்திடம் பீஜிங்கில் நடைபெற்ற ஆசியப் போட்டிகளைப் பற்றி வினவிய போது, "சீன விளையாட்டுக் கலைஞர்கள் நாட்டின் பெருமையை உயர்த்துவதில் முழு மூச்சுடன் ஈடுபட்

* நிறைவு விழாவில் மயில் நடன அலங்காரத் தேர்.



டனர். பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் தீவிரக் கவனம் செலுத்தி வெற்றி பெறுவதற்கான கடும் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் இளைஞர்கள் பெரும்பாலும் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதலிடம் கண்டது அந்நாட்டின் தனிச் சிறப்பு. நாங்கள் ஒரு ஸ்டேடியத்திலிருந்து மற்றொரு ஸ்டேடியத்துக்குப் போவதிலும், பந்தயங்களைப் பார்வையிடுவதிலும் கழித்தோம். எங்களுக்குச் சீன மக்களோடு பழகுவதற்கு வாய்ப்புத் தரவில்லை! ஆசியப் போட்டிகளைச் சிறப்பாக நடத்தியதோடு வெற்றிகளையும் சீனர்கள் பெற்றால் ஆசிய நாடுகளின் விளையாட்டுத் தலைமைப் பதவி அவர்களுக்கே கிட்டிவிட்டது!'' என்று விளக்கினார்!

* தமிழகத் தலைநகரில் பீஜிங்கில் 'தங்கம்' பெற்று வந்த கபாடி உதவி காப்டன் ராஜரத்தினத்தை மாலை அணிவித்து விசிறிகள் மகிழ்வித்ததோடு, அவரைத் தலைக்கு மேல் தூக்கி வைத்து வலம் வந்தனர்! ஒரே தங்கம் பெற்ற செல்வனுக்கு இந்த அரச மரியாதை கிடைத்ததில் வியப்பில்லை. தமிழக முதல்வர் கலைஞரும் அவரைப் பாராட்டிச் சிறப்பித்தார்!

* குத்துச் சண்டைக் கலைஞர் ரமிமான்பூந்தம் அரங்குக்குள் நுழைந்தபோது புத்த பகவானைத் தொழுதுவிட்டே தம் போட்டியில் கலந்துகொண்டார். வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் அவர் கூறியது: ''எனது வெற்றிக்குப் புத்தபகவானின் அருளே காரணம். தாய்லாந்திலுள்ள செங்கியர்ன் கோவிலுக்கு மூவாயிரம் பணமும் நூறு பூக்களும் காணிக்கையாகச் செலுத்துவேன்!'' இந்த இளைஞர் இருபத்துநான்கு வயதான ராணுவ வீரர்! அவரது கடவுள் நம்பிக்கை வீண்போகவில்லை!

* மற்றொரு தென்கொரியக் குத்துச் சண்டைக் கலைஞருக்கு ஏசுபிரான் அருள் புரிந்திருக்கிறார்! அவர் ஒரு போக்குவரத்து விபத்தில் அடிபட்டு இரண்டு மாதங்கள் படுத்திருந்தபோது குத்துச் சண்டையையே மறக்கும்படியாகி விடுமோ என்று கலங்கினார். ஆனால், அவரது சகோதரியின் கடவுள் நம்பிக்கையும் அவருடைய தெய்வநம்பிக்கையும் குணமடைந்து அவரைப் பங்கேற்க வைத்தன!

* அதைவிட அதிசயம் சீனப் போட்டி நிர்வாகிகள் விளையாட்டுக் கலைஞர்களின் மத நம்பிக்கைகளுக்கேற்ப, மசூதி, மாதா கோவில், புத்த ஆலயங்களில் வழிபட வசதி செய்து கொடுத்திருந்தது!

ஸ்போர்ட்ஸ் — 2

டுரோண்ட் கோப்பை

''அரசியல் பரபரப்புகளுக்கு இடையே புதுதில்லி அம்பேத்கர் ஸ்டேடியத்தில் கால்பந்து டுராண்ட் கோப்பை 'யாருக்கு?' என்பதில் கடுமையான போட்டியிருந்தது! பதினோரு முறை டுராண்ட் கோப்பையைப் பெற்ற கிழக்கு வங்கக் கால்பந்துக் குழுவும், பம்பாயைச் சேர்ந்த மகிந்திரா கால்பந்துக் குழுவும் முதல் முறையாக இறுதி ஆட்டத்தில் கலந்துகொண்டன! கிழக்கு வங்க அணி மகேந்திராவின் 'டிபன்ஸ்' கோட்டையை முறியடித்து வெற்றி வாகை சூடியது!

கால்பந்தாட்டம் பதினொன்றாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றியது. 1016 — 1042 ஆம் ஆண்டு வரை டேனியர் (Danes) இங்கிலாந்தை முற்றுகையிட்டுக் கைவசப்



* டூரண்ட் கோப்பையைக் குடியரசுத் துணைத் தலைவர் கல்கத்தா அணியினருக்கு வழங்குகிறார்.

படுத்தினர். ஆங்கிலேயருக்கும் டேனியருக்கும் உறவு எலியும் பூனையும் போலத்தான். ஒருநாள் சில ஆங்கிலத் தொழிலாளிகள் புதிய வீட்டுக்கு அஸ்திவாரமிடும் பணியில் தோண்டிய பொழுது ஒரு டேனியரின் மண்டையோடு கிடைத்தது. தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொள்வதற்காக அதைப் பல திசைகளில் காலால் உதைத்தனர். ஒருசில இளைஞர்களும் இதில் சேர்ந்து கொண்டனர். மண்டையோட்டை உதைப்பதில் கால் வலிக்கவே, அந்த இளைஞர்களில் புத்திசாலியொருவன் பசுத்தோலில் காற்றடைத்து அதை உதைத்து ஆடத் தொடங்கினான்.

இப்படித் தொடங்கிய கால் பந்தாட்டம நகரத்துக்கு நகரம் பரவியது. ஒரு அணிக்கு நூறு பேர் ஆடினர்! பந்தை எதிர்த்த அணி அதை நகரத்தின் மத்திக்குக் கொண்டு சென்றது! வழியில் இருந்த வீடுகளுக்கும் கடைகளுக்கும் பலத்த சேதம்! அதோடு, இதை ஆடுவதில் ஆர்வம் காட்டிய மக்களில் பலர், இங்கிலாந்தின் பெருமைக்குரிய வில் விளையாட்டை மறக்கத் தொடங்கினர். எனவே, பாதிக்கப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்கள், வியாபாரிகளின் வற்புறுத்தலுக்கிணங்க இந்த ஆட்டத்தைத் தடுக்கும் சட்டம் ஒன்றை மன்னர் இரண்டாம் ஹென்றி பிறப்பித்தார். இச் சட்டம் ஹென்றி மன்னர் இறந்து நானூறு ஆண்டுகள் வரை அமுலில் இருந்தது. அப்படியும் பலர் இரகசியமாக ஆடியிருக்கின்றனர்! சில இடங்களில் சட்டங்கள் தளர்த்தப்பட்டுப் பொதுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. பதினாறாம் நூற்றாண்டில் வில்லும் அம்பும் போர் முறைகளுக்குப் பயன்படாமல் போய் விடவே, விற் பயிற்சிச் சட்டம் மதிப்பிழந்தது. கால்பந்தாட்ட ஆர்வம் தீவிரமாகியது. 17 ஆம் நூற்றாண்டில் முதலாம் ஜேம்ஸ் மன்னர் கால்பந்தாட்டத்துக்கு வெளிப்படையாகவே அனுமதி அளித்தார். 19 ஆம் நூற்றாண்டு வரை கால்களால்தான் பந்தை உதைத்து ஆடினர். பிறகுதான் ஆட்டத்திலே மாற்றம் ஏற்பட்டது. ரக்பி ஆட்டமும் அறிமுகமாயிற்று. வில்லியம் எல்லிஸ் என்ற மாணவன் தன்னால் கால்களால் பந்தை உதைக்க முடியாமல் போகவே அதைக் கையில் ஏந்திக் கொண்டே 'கோல்' எல்லையைக் கடந்தான். அதிலிருந்து ரக்பி ஆட்டமும், கால்பந்தாட்டத்தைப் போலவே இங்கிலாந்து முழுவதும் பரவி விட்டது.

கிறிஸ்து பிறப்பதற்கு இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் சீனாவில் ஹான் வம்சம் ஆண்டு

வந்தது. கலைகளை வளர்ப்பதில் இது முன்நின்றது. அரசரது பிறந்த நாள் விழாவில் இரண்டு நீண்ட மூங்கில் தடிகளை அலங்காரங்களுடன் நிறுத்தி வைத்து, இவைகளுக்கு இடையே ஒரு வண்ணப்பட்டு வலையை இணைப்பார்கள். அதன் நடுவே ஓர் அடி சுற்றளவுள்ள ஒரு ஓட்டை இருக்கும். இரு அணிகளிலுமுள்ள திறமைமிக்க ஆட்டக்காரர்கள் பந்தை அந்த ஓட்டையின் வழியாக அடிக்க முயல்வார்கள். அந்த முயற்சிக்கு விருவிருப்பையூட்டப் பல பரிசுகளும் உண்டு. வெள்ளிக் கோப்பைகளில் பழ வகைகளும், மதுவும் வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்படும்! ஆனால், தோல்வியுற்றவர்களைச் சும்மா விட மாட்டார்கள். அவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும். இந்த விளையாட்டுக்கு (TSUCHU) ட்ஸிசூ என்று பெயர். அதாவது உதை பந்து என்று பொருள்.

பழங்காலத்தில் ஜப்பானியர்களும் கூடக் கால்பந்தாட்டம் மாதிரியே ஓர் ஆட்டத்தை ஆடி வந்துள்ளனர். கி. மு. 5 — ஆம் நூற்றாண்டுக்கு முன் ஒரு சதுரமான மைதானத்தில் எட்டுப் பேர்கள் ஒவ்வொருக்கொருவர் பந்தை அடித்து கெமாரி (Kemari) என்னும் ஆட்டத்தை ஆடினார். மைதானத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு வகை மரத்தை நிறுத்தி வைத்திருப்பார்கள். இது மதம் தொடர்பான ஆட்டமாக இருந்தது.

கிரேக்கர்கள் கூடத் தங்கள் விளையாட்டை மத கட்டுப்பாடுகளுடன் பேணி வந்ததைக் காணலாம். ஹோமர் என்ற மகாகவி,பந்தாட்டம் கிரேக்கர்களின் வாழ்வோடு இணைந்துள்ளது என்று கூறியுள்ளார். ஆனால், கால்பந்தாட்டம் மாதிரி ஆட்டத்தைக் கிறிஸ்து பிறப்பதற்கு நான்காவது நூற்றாண்டிலேயே கிரேக்கர்கள் ஆடி வந்திருக்கின்றனர். இந்த ஆட்டம் தற்போது ஆடும் ரக்பி ஆட்டத்தைப் போல் இருந்தது.

ரோம சாம்ராஜ்யத்திலே ஹார்பஸ்டம் (Harpastum) என்னும் விளையாட்டு முன்னணி வகித்தது. சிடோனியஸ் அப்பல்லோ நேரியார், கிறிஸ்து பிறப்பதற்கு முன் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

அவர் படைத்த இலக்கியத்திலே, கடித இலக்கியப் பகுதி சுவைமிக்கது. அதில் ஹார்பஸ்டம் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

ஹார்பஸ்டம் என்ற விளையாட்டை இரண்டு அணியினர் நீண்ட சதுர மைதானத்தில் விளையாடினர். இந்த மைதானத்தின் இரு கோடிகளிலும் கோடுகளும், நடுவில் நடுக்கோடும் வரையப்பட்டிருந்தன. இந்த விளையாட்டிலே ஒவ்வோர் ஆட்டக்காரரும் முந்தியுள்ள ஆட்டக்காரரிடம் பந்தை விசி யெறிவார். இப்படி முன்னேறிய பந்தை எதிர் அணியினர் 'கோல்' கோட்டைத் தாண்டியெறிய வேண்டும். எதிர் அணியினர் பந்தை முன்னேறாமல் தடுத்து நிறுத்துவார்கள். இது உடலில் எல்லாத் தசைகளுக்கும் சிறந்த பயிற்சியாக இருக்கும் என்று டாக்டர் காலன் கூறியுள்ளார். இதை ராணுவப் பயிற்சிக்கு முன்னோடியாக அமைத்துக் கொண்டனர் ரோமர்கள். இந்த ஆட்டத்துக்குப் பலவித அளவுள்ள பந்துகள் பயன்பட்டன. உரோமம், இறகுகள், அத்திப்பழக் கொட்டை, (Figseeds) இவற்றின் மீது, தோலால் மூடியோ அல்லது வண்ணத்துணியை மூடியோ பந்துகள் தயாரிக்கப்பட்டன. இதில் பெரியது காற்றுள்ளடைத்த பிளாடராக இருக்கும். இதற்கு ஃபாலிஸ் (follis) என்று பெயர். இதுவே நவீன கால்பந்தின் உருவத்தோற்றத்தைப் பெற்றது.

இன்று உலகெங்கிலும் கால்பந்தாட்ட ஆர்வம் பல்கிப் பெருகியுள்ளது. உலகக் கால்பந்தாட்டப் போட்டியை நடுநிசியிலும் டீ.வி.யில் பார்த்து மகிழ விசிறிகள் உண்டு! இந்தியாவில் 'டூராண்ட் கோப்பை' கால்பந்தாட்டத் திறமையைச் சோதிக்க உள்ள மிகச் சிறந்த போட்டியாகும்.

நன்றி: புகைப்படங்கள்: ஹிந்து நாளிதழ்.

பழியைக் கோட்டை விடாதே!



ஜானகி மணாளன்

'ஜில் ஜில்' — இது ஒரு குழந்தைகள் பத்திரிகை. 1950 ஆம் ஆண்டுகளில் நமது தமிழகத்தில் வெற்றி நடை போட்டு வந்தது.

ஒருநாள் அதன் ஆசிரியர் தனது அலுவலகத்தில் ஏதோ வேலையாக இருந்தார். அப்போது ஒரு பணியாள் வந்து, அன்று வந்த தபால்களை மேஜை மீது வைத்து விட்டுச் சென்றார். ஆசிரியர் ஒவ்வொரு கடிதமாகப் பிரித்துப் படித்துப் பார்த்தார். அன்று ஏராளமான கதைகள் வந்திருந்தன. அவற்றில் ஒன்று அந்த ஆசிரியரைக் கவர்ந்தது. ஒரே மூச்சில் அதைப் படித்துப் பார்த்தார். மனதுக்குப் பிடித்திருந்ததோடு, அதை 'ஜில் ஜில்'லில் வெளியிட்டால் குழந்தைகள் நன்கு ரசித்துப் படிப்பார்கள் என்பதைப் புரிந்து கொண்டார். உடனே அதைத் தேர்ந்தெடுத்து விட்டார். கதையில் தலைப்பு 'பாலுவின் பிரயாணம்' என்பது. அதை 'ஜில் ஜில்'லின் அடுத்த இதழிலேயே வெளியிட்டு விட்டார். அத்துடன் நில்லாது, அந்தக் கதையின் உயர்வு பற்றி ஒரு முன்னுரையையும் எழுதினார். அதில், அந்தக் கதையை எழுதிய எழுத்தாளரின் திறமையைப் புகழ்ந்திருந்தார்.

அதில் ஒரு வேடிக்கை! என்ன தெரியுமா? அக் கதையின் ஆசிரியர் ஒரு பள்ளிச் சிறுவன். அது மட்டுமல்ல. அச் சிறுவனின் தந்தை ஒரு பெரும் எழுத்தாளர். கதையுடன் எழுதப்பட்டிருந்த விலாசத்திலிருந்து 'ஜில் ஜில்' ஆசிரியர் இந்த விவரங்களைப் புரிந்து கொண்டு விட்டார். கதையின் முன்னுரையில், எழுத்தாளச் சிறுவனைப் புகழ்ந்ததோடு கூட, 'மீன் குஞ்சுக்கு நீந்தவா சொல்லிக் கொடுக்க வேண்டும்? தந்தையின் உயர்வான தமிழ் நடை மகனுடைய எழுத்தில் இயல்பாகப் பளிச்சிட்டு மின்னுகிறது' என்றும் எழுதி அச்சிட்டு விட்டார்.

பிற்பாடு அந்த ஆசிரியருக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது. ஒரு சகோதர பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில், அந்த எழுத்தாளச் சிறுவனின் தந்தையைச் சந்தித்து விஷயத்தைக் கூறி, வளரும் எழுத்தாளரான அவரது மகனையும் வாழ்த்தி விட்டு வர வேண்டும் என்று எண்ணினார்.

ஆசிரியர் அந்த எழுத்தாளச் சிறுவனின் வீட்டை அடைந்தார். அச் சிறுவனின் தந்தை ஒரு நாற்காலியில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தார். 'ஜில் ஜில்' ஆசிரியர் தன்னை அறமுகம் செய்து கொண்டதும், அவரை வரவேற்று உபசரித்து உட்காரச் சொன்னார். இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது, 'பாலுவின் பயணம்' சிறுவர் கதையை எழுதிய சிறுவன் அங்கு வந்தான். 'ஜில் ஜில் ஆசிரியர்



எங்கே தான் கதை எழுதி 'ஜில் ஜில்'லுக்கு அனுப்பியதைத் தன் தந்தையிடம் கூறி விடுவாரோ என்று பயந்து விட்டான். எனவே, 'ஜில்ஜில்' ஆசிரியரைப் பார்த்து ஜாடையாக விரலை வாயில் பொத்திக் காட்டி, 'நான் கதை எழுதி அனுப்பியதை அப்பாவிடம் சொல்லி விடாதீர்கள்' என்று ஜாடை காட்டினான்! அதில் எச்சரிக்கையை விட வேண்டுகோளே அதிகமிருந்தது!

அச் சிறுவனின் கதை அச்சேறி விட்ட நிலையில், எப்படி ஜில்ஜில் ஆசிரியரால் உண்மையை மறைக்க முடியும்? தவிரவும், அச் சிறுவனின் திறமையை, அவன் அப்பாவிடமே கூறிப் பாராட்டி விட்டுப் போகத் தானே அவர் நேரில் அங்கு வந்திருந்தார். எனவே, இலேசாகப் புன்முறுவல் பூத்தவாறு, அச் சிறுவனின் தந்தையிடம் தான் கொண்டு வந்திருந்த 'ஜில் ஜில்'லின் பிரதி ஒன்றைக் கொடுத்து விட்டார்.

அவ்வளவுதான்! பயந்து போன அச் சிறுவன் அங்கிருந்து சிட்டாய்ப் பறந்து எங்கோ ஓடி மறைந்து விட்டான்.

தன் மகன் எழுதி அச்சேறிய அக் கதையைப் படித்துப் பார்த்தார் அந்தப் பெரிய எழுத்தாளர். மகிழ்ந்தார்; வியந்தார்! இருந்தாலும் ஜில்ஜில் ஆசிரியரிடம், எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை!

'ஜில்ஜில்' ஆசிரியர் கொண்டு சென்றிருந்த சில பழைய 'ஜில்ஜில்' பிரதிகளை வாங்கிப் பார்த்து விட்டுப் புகழ்ந்தார். "மேல்நாட்டில் குழந்தைகளுக்கென்று நிறையப் புத்தகங்கள் போடுகிறார்கள். நம் நாட்டில் ரொம்பக் குறைவு... குழந்தைப் பத்திரிகைகளும், நூல்களும் நிறையத் தேவை. உங்கள் 'ஜில்ஜில்' நன்றாக இருக்கிறது. பேஷ்.... தொடர்ந்து சிறப்பாக நடத்துங்கள்," என்று வாழ்த்தி விடை கொடுத்தார்.

அவர் போன பிறகு தம் மகனை அழைத்தார். பயந்து கொண்டே வந்த அவனைக் கோபித்துக் கொண்டாரா? இல்லை! "நன்றாகத்தான் எழுதியிருக்கிறாய். எனக்கும் சந்தோஷம்தான். ஆனால், படிப்பிலே கவனம் இருக்கட்டும். கதை எழுதுவதில் கவனம் அதிகரித்து விட படிப்பில் அசிரத்தையாக இருந்து விடாதே" என்று எச்சரித்தார். மகனும் தந்தையின் எச்சரிக்கையை ஏற்றான். அப்புறம் ரொம்ப காலத்துக்கு அவன் கதை ஏதும் எழுதவேயில்லை!

"எல்லாம் சரி, அந்த 'ஜில்ஜில்' ஆசிரியர் யார் தெரியுமா? அவர்தான் தற்போது உங்களுக்காகப் பல குழந்தை நூல்களைச் சிறப்பாக வெளியிட்டு வருகிறாரே 'வானதி திருநாவுக்கரசு... அவரேதான்! அன்று 'ஜில்ஜில்'லிற்கு 'பாலுவின் பிரயாணம்' கதையை எழுதியவர் யார் தெரியுமா? அவர்தான் இன்றைய 'கோகுலம்' ஆசிரியர் திரு. கி. ராஜேந்திரன் அவர்கள்.

அந்தப் புகழ்பெற்ற எழுத்தாளர் யாரென்று கூறவில்லையே! அவர் வேறு யாருமல்ல. 'கல்கி' என்று அனைவராலும் அழைக்கப்படும் பேராசிரியர் அமரர். கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களேதான்!

கல்கியின் பிரபல நாவலான பொன்னியின் செல்வனின் ஒரு கதாபாத்திரம்தான் வானதி என்பது. அந்தப் பெயரைத்தான் திரு. ஏ. திருநாவுக்கரசு தன் பதிப்பகத்துக்கு 'வானதி பதிப்பகம்' என்று பெயர் சூட்டிக் கொண்டார்!



அமெரிக்காவில் சக்கை போடு போட்டு விற்பனை ஆகி வரும் ஓர் இசைத்தட்டின் பெயர் 'ஜங்கிள் பெல்ஸ்' என்பது. ஐந்து நாய்களும், ஒரு பூனையும், இரண்டு ஆடுகளும் சேர்ந்து குரல் கொடுத்துள்ளன. இந்த இசைத் தட்டில் மனிதக் குரலே கிடையாது! இதுவரையில் இந்த இசைத் தட்டுக்கள் நாலரை லட்சம் விற்பனை ஆகியுள்ளன!

— எம். ஆனந்தன், வந்தவாசி.



கொரியாவில் பைன் மரக் கொட்டைகளை பொறுக்குவதற்கு, குரங்குகள் ஈடுபடுத்தப்படுகின்றன. இவை மனிதர்களைப் போல் ஐந்து மடங்கு வேலை செய்கின்றன. அதனால் அந் நாட்டுக் குரங்குகளுக்கு பயிற்சி அளிப்பது பற்றி அரசு யோசித்து வருகிறது.

— இலக்மன், கல்லிடைக்குறிச்சி.



குதிரை லாடத்தை வீட்டின் முன்புறம் தொங்க விட்டால் பேய், பிசாசு அண்டாது என்னும் நம்பிக்கை இன்றும் இங்கிலாந்தில் காணப்படுகிறது. என்ன செய்வது? முன்னேறிய நாடுகளிலும் மூடநம்பிக்கை!

— நாகை கே. ரவி.

ஏற்றமுற நடக்குமோ?

அல்லா சாமி கோயில் முன்னே
அழகு ராமர் பாரடா!
எல்லாக் கோயில் சாமிக்குமே
இல்லை வேறுபாடடா!


அன்னை கன்னி மேரியோடு
அருளும் மாரி அமர்கிறாள்;
புன்னை மரக் கிருஷ்ணனோடு
புனிதக் கிறிஸ்து பொலிகிறார்!

குருவிக்காரர் பக்கத்திலே
குருக்களய்யா நிற்கிறார்;
குடிசை வீட்டுக் காரரோடு
குபேரன்கை குலுக்குறார்!

காவல்நிலையச் சிறையிலே
கள்ளர் யாரும் இல்லையே;
கடையில் அரிசி, எண்ணெய்க்குக்
கூட்டமெதுவும் இல்லையே!

எங்க வீட்டுக் கொலுவிலே
இங்கு நீங்கள் காண்பது
என்று இந்த நாட்டிலே
ஏற்றமுற நடக்குமோ?

— ரா. பா. சாரதி, சென்னை — 44.



விளங்கவில்லை அன்னையே!

வான வில்லை வளைத்துப் பார்க்க
வானில் ஏற நினைக்கிறேன்!
தேனைப் போல நீலக் கடலைச்
செய்து பார்க்க நினைக்கிறேன்!

யானை ஒன்றைப் பானைக் குள்ளே
அடைத்து வைக்க நினைக்கிறேன்!
மானும் புலியும் ஒன்றாய் வீட்டில்
வளர்த்து மகிழ நினைக்கிறேன்!

மணலை எண்ணிக் கணக்குப் பார்த்து
மாலை ஆக்க நினைக்கிறேன்!
அணிலின் வாலில் மலையைக் கட்டி
அழகு பார்க்க நினைக்கிறேன்!

குருவி யோடு குருவி யாகிக்
கொஞ்சிப் பேச நினைக்கிறேன்!
அருவி யோடு அருவி யாகி
ஆடிப் பாட நினைக்கிறேன்!

சிறுவன் நினைப்ப தெல்லாம் சொன்னால்
சிரிக்க வேண்டாம் அன்னையே!
வெறுப்புக் கொள்வ தெங்கே என்று
விளங்க வில்லை அன்னையே!

— ஆலந்தூர் கோ. மோகனரங்கம்.





சிக்கிய சிங்கம்

ஜீப் போய்க் கொண்டிருந்தது. அடர்ந்த காடு. சூரிய வெளிச்சம் பட்டப் பகலில் கூடக் கீழே படாமல் மரங்கள் கூடாரமாம் அமைந்திருந்தன.

சங்கர் கேட்டான், "ஒரு வாரமாக நாம் சிங்கத்திற்காக அலைகிறோம். ஒன்று கூடக் கண்ணில் படவில்லை. இன்றாவது கிடைக்குமா?"

சித்தப்பா சொன்னார், "அதனால் தான் காட்டில் இவ்வளவு தொலைவு முப்பது மைல்களுக்கும் மேலாக உள்ளே வந்திருக்கிறோம். எப்படியும் இன்று சிங்கத்தோடு தான் திரும்பிப் போவோம்." என்றார் உறுதியாக.

"சிங்கங்கள் இரை தேட இரவில் புறப்படுமா? அல்லது பகலிலா?" என்றான் சங்கர்.

"சிங்கம் பகலில் ஓய்வாக இருந்து. இரவில் வேட்டை ஆடும். இது தனது பார்வைத்திறன், மோப்ப சக்தி, கேட்கும் ஆற்றல் ஆகியவற்றை இரவில் மிக நன்றாக வெளிப்படுத்தி வேட்டையாடும்."

"புலியைப் போல சிங்கமும் இரையைத் துரத்திச் சென்றுதான் தாக்கிக் கொல்லுமா?"

"ஒரே மூச்சில் நீண்ட தூரம் ஓடும் திறன் சிங்கத்திற்கு இல்லை. எனவே, திடீர்த் தாக்குதலின் மூலமே அது தன் இரையைக் கொல்லும்."

"எப்படி

"வரிக் குதிரையின் உடலைச் சிங்கம் மிகவும் விரும்பிச் சாப்பிடும். வரிக்குதிரை மணிக்கு நாற்பது கி.மீ. வேகத்தில் ஓடும். சிங்கம் அதைத் துரத்தினால் நாற்பது கி.மீட்டருக்கும் அதிகமான வேகத்தில் ஓடினால் தான் வரிக்குதிரையை மடக்கிப் பிடிக்க முடியும் இல்லையா?"

"ஆமாம்!"

"ஆனால், சிங்கத்தால் வெகு தூரம் ஓட முடியாது. அதனால் சிங்கம், பிராணிகள் நீர் குடிக்க வரும் குளம், ஆறு போன்ற இடங்களில் மறைந்து இருந்து வரிக்குதிரைகளைத் திடீரென்று தாக்கும்!"


"அவ்வளவு பெரிய வரிக்குதிரையை சிங்கம் எப்படிக் கொல்லுகிறது? அது வரிக்குதிரையை விட உயரம் குறைவாகத்தானே இருக்கிறது!"

"உயரம் குறைவாக இருந்தால் என்ன? சிங்கம் எடுத்த எடுப்பிலேயே வரிக்குதிரையின் குரல் வளையைக் கவ்விக் குதறித் துண்டித்துவிடும். அதன் நோக்கமே எதிரியின் உயிர் மூச்சை அடக்குவதுதான். மூச்சு அடங்கிய பின், யானையாக இருந்தாலும்; எலியாக இருந்தாலும் ஒன்றுதானே?"

"ஒரு சிங்கம் மற்றதுடன் இரைக்காக சண்டை போடுமா?"

"சிங்கங்கள் குடும்பமாக வாழும் இயல்புடையவை. பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்று சகோதரச் சிங்கங்கள் ஒன்றாகவே வேட்டையாடச் செல்லும். வேட்டையில் கிடைத்த இரையை, ஒரு சிங்கம் தின்னும் போது, மற்றொன்று உட்கார்ந்து கொண்டு எதிர்த்திசையைப் பார்த்துக் கொண்டு இருக்கும். பாதிப் பங்கை

வேணு சீனிவாசன்



உண்டதும் அந்தச் சிங்கம் தன் சகோதரன் அருகில் போய், அதைத் தலையால் தொட்டு, 'போ, உன் பங்கை சாப்பிடு,'என்று சொல்வது போல் ஜாடை செய்யும்!''

''அப்படியா! அவ்வளவு பாசம் மிக்கதா சிங்கம்?'' என்றான் சங்கர் ஆச்சரியத்தோடு!

அப்போது இரத்தத்தை உறைய வைக்கும் சிங்கத்தின் கர்ஜனை கேட்டது.

''சித்தப்பா! சிங்கம் பக்கத்தில் தான் எங்கேயோ இருக்கிறது. எதற்காக கர்ஜிக்கிறது?''

''சிங்கத்தின் கர்ஜனையைக் காட்டில் நான்கு கிலோ மீட்டர் வரை நன்றாகக் கேட்கலாம். ஒரு சிறிய, காட்டின் பகுதியை என்னுடையது என்று கர்ஜனை மூலம் ஒரு சிங்கம் மற்ற சிங்கங்களுக்குத் தெரிவிக்கிறது. அதே நேரத்தில் இரையை அதாவது மானையோ, பன்றியையோ பயமுறுத்தி, பெண் சிங்கத்தை நோக்கி விரட்டவும் கர்ஜனை பயன்படுகிறது.''

''ஆண் சிங்கம் வேட்டையாடாதா? பெண் சிங்கம்தான் இரையை வேட்டையாடிக் கொண்டு வருமா?''

''ஒரு கூட்டத்தில் இருக்கும் ஆண் சிங்கம் வேட்டையில் அதிகமாக ஈடுபடாது. பெண் சிங்கமே பெரும்பாலும் வேட்டையாடும். வேட்டைக்கு ஏற்ற வகையில் நேர்த்தியான உடலும், கூரிய பார்வைத் திறனும் இருப்பதால் பெண் சிங்கம் பதுங்கி இருந்தும், இரையைத் துரத்திப் பிடித்தும் எதிரியைக் கொல்லும்.''

''சிங்கத்தை எப்படிப் பிடிப்பது?''



என்றான் சங்கர் கவலையோடு.

''நான் சொல்கிறேன்,'' என்றான் காடன். அவன் ஒரு மலைவாசி. அவர்களுக்குக் குடும்ப நண்பன். அவனும் அவர்களோடு ஜீப்பில் வந்து கொண்டு இருந்தான். அவன் சொன்னான், ''ஆண் சிங்கத்தைப் பிடிப்பது அவ்வளவு எளிதல்ல.' அதனால் நாம் சிங்கக் குட்டி ஒன்றைப் பிடிக்கப் போகிறோம். அதை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் பெண் சிங்கமும் நம்மிடம் சிக்கி விடும்.'

''எப்படி?'' என்றான் சங்கர்.

காடன் உறுதியான கயிறு ஒன்றை எடுத்துக் காட்டினான். அதன் நுனியில் சுருக்கு முடிச்சு போடப்பட்டு இருந்தது. ''இந்தக் கயிற்றை நான் லாவகமாக பெண் சிங்கத்தின் கழுத்தில் போட்டுப் பிடித்துக் கொள்வேன். அப்போது நீயோ, அல்லது சித்தப்பாவோ ஒரு குட்டியை எடுத்துக் கொண்டு வந்து ஜீப்பில் நாம் கொண்டு வந்து இருக்கும் கூண்டில் போட்டு விட்டால் போதும். குட்டியைப் பிரிந்து இருக்க வரும் பாத பெண் சிங்கமும் கூண்டுக்குள் வந்து விடும்,'' என்றான் காடான்.

குட்டியை எடுத்தால் பெண் சிங்கம் பார்த்துக் கொண்டு சும்மாவா இருக்கும்? கடித்துக் குதறிவிடாதா?''

''பெண் சிங்கத்துக்குத் தன்னம்பிக்கை அதிகம். அதை மீறிக் கொண்டு குட்டிகளுக்கு எந்தக கெடுதியும் வராது என்ற தைரியத்தில் பார்த்துக் கொண்டுதான் இருக்கும். அது அருகில் ஓடி வராமல் இருக்கத் தான் கழுத்தில் சுருக்குக் கயிற்றை மாட்டி விடுகிறேனே. எனக்கு இதில் எல்லாம் நிறைய அனுபவம் உண்டு. பொறுத்து இருந்து பார்.''

ஜீப்பை நிறுத்தி விட்டு இறங்கினர். புதருக்கு அருகே மூன்று குட்டிகளுடன் பெண் சிங்கம் ஒன்று படுத்துக் கொண்டிருந்தது. ஒரு குட்டி மட்டும் அங்கிருந்து பத்தடி தூரத்தில் விளையாடிக் கொண்டு இருக்க, தாயின் பார்வை குட்டியின் மீதே லயித்து இருந்தது.

காடன் சுருக்குக் கயிற்றை மிக லாவகமாகச் சிங்கத்தின் கழுத்தில் வீசினான். அதை லட்சியமே செய்யாமல் அது குட்டியை மிகுந்த கவனத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தது.

காடன் தன் கையில் பிடித்து இருந்த கயிற்றின் முனையைப் பக்கத்தில் இருந்த மரத்தைச் சுற்றி வைத்துப் பிடித்துக் கொண்டான். ஒரு வேளை பெண் சிங்கம் பாய்ந்து ஓடினால் தனி மனிதன் ஒருவனால் அதை இழுத்துப் பிடிக்க முடியாதல்லவா?

சித்தப்பா மெதுவாக நடந்து போய் ஒரு குட்டியைக் கையில் எடுத்துக் கொண்டார்.

இதுவரையில் படுத்துக் கொண்டிருந்த பெண் சிங்கம் எழுந்து நின்றது.

''ஓடாதீர்கள். மெதுவாகவே நடந்து செல்லுங்கள் ஓடினால் து ரத்த ஆரம்பித்து விடும்,'' என்றான் காடன்.

சித்தப்பாவின் கையில் இருந்த குட்டியைப் பார்த்துக் கொண்டே அந்தச்சிங்கம் அவர் பின்னால் கம்பீரமாக நடக்க ஆரம்பித்தது. காடன் கயிற்றைத் தளர்வாகப் பிடித்த

வாறே மெதுவாக அதன் பின்னால் நடக்க ஆரம்பித்தான்.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த சங்கருக்கு பயம் விலகியது. ஆகவே, அவனும் ஓடிச் சென்று ஒரு சிங்கக் குட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான். இதைப் பார்த்த பெண் சிங்கம் குபீரென்று சங்கர் மீது பாய்ந்தது.

காடன் கயிற்றை மரத்தைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டு இருந்ததால் சிங்கத்தால் சங்கரை நெருங்க முடியவில்லை. சுருக்குக் கயிறு அதன் கழுத்தை இறுக்கியது. இதனால் சங்கர் தப்பித்தான்.

ஆனால், அதே நேரத்தில் காடனுக்கு ஆபத்து. தன் குட்டியை நெருங்க விடாமல் கயிற்றைக் கட்டி இழுக்கும் காடனின் மீது சிங்கத்தின் கவனம் திரும்பியது. தன் கண்ணுக்கு எதிரிலேயே தனது குட்டிகளை யாரோ எடுத்துச் செல்லுகிறார்கள். அவைகளைக் காப்பாற்ற விடாமல் தடுக்கும் மனிதனின் மீது தாய்க்குக் கோபம் வருவதில் வியப்பு என்ன?

பயங்கரமான உறுமலோடு அந்தப் பெண் சிங்கம் காடனின் மீது பாயத் தயாரானது. காடனே ஒரு நிமிடம் நடுங்கி விட்டான். குட்டிகளுக்காகத் தன் உயிரையும் விடக் கூடிய அளவுக்குப் பெண் சிங்கம் பாசம் மிகுந்தது. குட்டியைக் கவ்விச் செல்ல விரும்பி அருகில் வந்த பெரிய சிறுத்தை ஒன்றைப் பெண் சிங்கம் பயங்கரமாகத் தாக்கிக் கொன்றதைக் காடன் பார்த்திருக்கிறான். எப்படித் தப்பிப்பது? என்று தவிக்கும் நேரத்தில் நல்லகாலமாக சித்தப்பா தன் கையில் வைத்திருக்கும் சிங்கக் குட்டியைப் பெண் சிங்கத்தின் எதிரே தரையில் இறக்கி விட்டார்.

இதனால்,சிங்கத்தின் கவனம் குட்டியின் மீது திரும்பியது. தன் குட்டியைப் பாசத்தோடு பார்த்தவாறே மெல்ல உறுமியது. இதுதான் சமயம் என்று சித்தப்பா குபீரென்று குட்டியைக் கைகளில் எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிச் சென்று கூண்டுக்குள் இறக்கி விட்டார்.

தாய்ச் சிங்கம் எல்லாவற்றையும் ஒரு நிமிடம் மறந்து விட்டுச் சித்தப்பாவை நாலு கால் பாய்ச்சலில் துரத்தவும், காடன் கயிற்றைத் தளர்வாக விட்டு விட்டான். அடுத்த நிமிடம் பெண் சிங்கம் தன் குட்டியோடு கூண்டில் இருந்தது. சித்தப்பா மின்னல் வேகத்தில் கூண்டின் கதவை மூடி விட்டார்.

மிகுந்த அக்கறையோடும், பாசத்தோடும் அந்தத் தாய் தன் குட்டியை முகர்ந்து பார்த்து நாக்கால் அதன் முகத்தை நக்கிக் கொண்டிருந்தது.

ஒரு நிமிட நேரத்துக்குள் நடந்து விட்ட இந்த நிகழ்ச்சியால் வெல வெலத்துப் போனாலும் சங்கர், உடனே சமாளித்துக் கொண்டு அந்தக் குட்டியையும் தூக்கிக் கொண்டு வந்து ஜீப்பில் ஏறிக் கொண்டான். காடனும் ஏறிக் கொள்ள சித்தப்பா ஜீப்பை ஓட்டிக் கொண்டு வந்தார்.

''வெகு எளிதாக அதிக சிரமமே இல்லாமல் சிங்கத்தைப் படித்து விட்டோம்!'' என்றான் சங்கர்.

''நாமா செய்தோம்? அதைச் செய்தது குட்டி தான். குட்டியின் மீது தாய் வைத்துள்ள பாசத்தால் அது தானே வந்து கூண்டுக்குள் அடைபட்டு விட்டது'' என்றார் சித்தப்பா.

''இரண்டு குட்டிகளை நாம் கொண்டு வந்து விட்டோம். மற்ற இரண்டும் தாயில்லாமல் ஏங்குமே?'' என்றான் சங்கர் வருத்தத்தோடு.

''கவலைப்படாதே! தாயைப் பிரிந்த குட்டிகளை, சிங்கக் குடும்பத்தில் இருக்கும் மற்ற பெண் சிங்கங்கள் கவனித்து வளர்க்கும்.'' என்றான் காடன்.


"அப்படியா? இப்போது தான் நிம்மதியாக இருக்கிறது'' என்றான் சங்கர்.



''எந்த ஒரு வேலையினையும் செய்யாமல் உண்டு, உறங்கி வாழ்பவன் மட்டும் சோம்பேறி அல்ல! தற்போது செய்து கொண்டிருக்கும் வேலையை இன்னும் சிறப்பாகச் செய்து முடிப்பதற்குத் தன்னிடம் திறமை இருந்தும், வசதி வாய்ப்புக்கள் இருந்தும், அதனைச் செய்யாமல் இருக்கிறானே, அவனும் சோம்பேறிதான்!''

— சாக்ரட்டீஸ்.

எஸ். மனோகரன்.



உண்மைக் கதை

வீட்டுக்குள் கொண்டு வராதே!

ஹரிசிங்

கோலியஸ் சப்தமின்றி உள்ளே நுழைந்தான். நல்ல வேளை, தந்தை வரவேற்பு அறையில் இல்லை. தன்னுடைய அறையில் விளக்கடியில் ஏதோ படித்துக் கொண்டிருந்தார். அம்மா சமையலறையில் ஏதோ வேலையாக இருந்தாள்.

சமையலறைக்குப் பின்பக்கம்தான் குளியலறை. அதனால், சமையலறையில் எரியும் அடுப்பின் வெப்பம் ஓரளவுக்குக் குளியலறையிலும் இருக்கும். இந்தக் குட்டி நாய்க்கு அது போதும். மார்போடு சேர்த்து அணைத்திருந்த நாய்க்குட்டியை ஆசையோடு இறுக்கிக் கொண்டான் கோலியஸ். அந்த இறுக்க அணைப்பில் இதம் கண்டுவிட்ட குட்டி நாய், 'ம்,ம்' என்று தன்னை மறந்து முனகியது. 'வ்வ்' என்று மெல்லக் குரலெடுத்தது. குட்டி வாலை ஆட்டியது!

கூடத்து சோபாவில் அரைத்தூக்கத்தில் இருந்த பாட்டியை எழுப்பிவிட அந்த இலேசான முனகல் போதுமானதாக இருந்தது! வீட்டுக்குள் நாய் முனகல் என்றால், கண்டிப்பாக அங்கே அவளுடைய அருமைப் பேரன் கோலியஸ் இருப்பான் என்பது பாட்டிக்குத் தெரியாதா என்ன?

கண்களை இடுக்கிக் கொண்டு ''கோலியஸ்'' என்று அடிக்குரலில்

அழைத்தாள்.

அப்பாவையும், அம்மாவையும் தான் கோலியஸ் எண்ணினானே தவிர, இப்படி இந்தப் பாட்டி ஹாலில் இருப்பாள் என்பதை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை! பாட்டிக்குக் கழுகுக் கண்கள்! நாய்க்குட்டியை இவளுக்குத் தெரியாது குளியலறைக்குக்கொண்டுபோவதுபெரியகாரியம்!

''என்ன பாட்டி?'' என்று சாதாரணமாகக் கேட்பது போல் கேட்டான் கோலியஸ்.

''கையில என்னடா வைச்சிருக்கே? நாய்க் குட்டியோட முனகல் சத்தம் கேட்டுதே?''

கோலியஸ் நாய்க்குட்டியை முதுகுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டு, ''நாய்க்குட்டியா..! இல்லையே பாட்டி'' என்றான்.

''கையைப் பின்னாலே வைச்சிருக்கே? இல்லேங்கிறியே! இரண்டு கையையும் ஒண்ணாக் காட்டு'' — பாட்டி உறுதியாகக் கேட்டாள்.

''பந்து பாட்டி'' என்று வேகமாக நழுவ முயன்றான் கோலியஸ்.

''பந்து எங்கேயாவது முனகுமாடா? வாலை ஆட்டுமாடா?'' என்று பெரிதாகக் கேட்ட பாட்டி, ''டெல்லிசா, உன் பையன் மறுபடியும் ஒரு நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறான்'' என்று குரல் கொடுத்தாள்.



அம்மாவும் அப்பாவும் ஓடி வந்தார்கள். கோலியஸ் திருதிருவென்று விழித்தான். அவன் தூக்கி வந்த நாய்க்குட்டி, வந்திருப்பவர்கள் தனது நண்பர்கள் என்ற நம்பிக்கையில் குட்டி வாலை ஆட்டி மகிழ்ச்சியாக முனகியது!

தந்தையின் முகத்தில் கடுமை நிறைந்தது.

''இதை எங்கேயிருந்துடா பிடிச்சே?''

''ஹம்பிள் மாமா வீட்டுக்கு எதிரே... தெருவில்... குதிரை காலில் அடிபட்டுக் காலில் இரத்தம் வந்திருக்கு... பாவமா இருந்தது. தூக்கி வந்தேன்.''

''இப்ப என்ன பண்ணப் போறே?''

''காயத்தைக் கழுவி மருந்து போட்டிருக்கேன். இன்று இரவு மட்டும் நம் வீட்டில்...''

''நம்ம வீட்டிலா...?'' என்று உருமிய அம்மா, ''உன் ரோதனை பெரிய ரோதனையாப் போச்சு. தினமும் அடிபட்ட நாய், பூனை என்று எதையாவது எடுத்துக் கொண்டுதான் நீ வீட்டுக்குள் வர்றே. உனக்குப் பண்ணிப் போடறதோட உன் நாய்களையும் நான் கவனிக்க வேண்டியிருக்கு. என்னால முடியலே,'' என்று சலிப்போடு கடுகடுத்தாள்.

''மற்ற பிள்ளைகளெல்லாம் ஒழுங்காப் பள்ளிக்குப் போய்ப் படிச்சுட்டு வரும் போது, நீ மட்டும் இப்படி ஏதாவது நாயையோ பூனையையோ அடிபட்டுக் கிடந்ததுன்னு தூக்கிக்கிட்டு வர்றியே! போன வாரம் கூட இதுக்காக அடி வாங்கினே இல்லையா? இன்னுமா உனக்குப் புத்தி வரலே? எல்லோரும் உன்னை மாதிரியா இருக்காங்க?'' — என்று வெடித்தார் அப்பா டெல்லிசா.

''நாயோ, பூனையோ அடிபட்டுக் கிடந்தாலோ, அனாதையாகத் திரிந்தாலோ என்னால்பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியலே அப்பா என்னை மன்னிச்சிடுங்க. நான் வீட்டுக்குள் கூட இதை எடுத்துக் கொண்டு வரலே. நம்ம குளியல்



அறையில் இதையும் வைத்துக் கொண்டு இருந்து கொள்கிறேன். எனக்குத் தரும் உணவில் இருந்தே இதற்கும் போடுகிறேன். இதற்காகத் தனியாக நீங்கள் எதுவும் தர வேண்டாம்,'' — கோலியஸ் தந்தையிடம் கெஞ்சினான்.

''அதெல்லாம் முடியாது. அவன் கேட்கிறானே என்று நீங்கள் எதையாவது தலையாட்டாதீர்கள். அந்த நாய் நம்ம வீட்டுக்குள் வரக் கூடாது. அதை எடுத்து வெளியில் வீசிவிட்டு, இவனை இழுத்து அறைக்குள் போட்டுப் பூட்டி வையுங்கள்'' என்று வெகுண்டாள் அம்மா.

''அப்பா வேண்டாம்பா! தெருவிலே போட்டால், ராத்திரி ஒநாய் வந்துதின்றுவிடும்பா.பாவம்,சின்னக் குட்டி. இன்று ஓர் இரவு மட்டும் குளியலறையில் இதை வைத்துக் கொள்ள அனுமதியுங்கள்'' என்று தந்தையின் கால்களைப் பற்றிக் கொண்டு அழுதான் கோலியஸ்.

அங்கே வெடித்துள்ள பூகம்பம் தன்னால் ஏற்பட்டது என்பதை அறியாத நாய்க்குட்டி, தந்தை டெல்லிசாவின் கால்களை முகர்ந்து நட்பு முறையில் வாலை ஆட்டியது! மகிழ்ச்சியாக முனகியது! அக்காட்சி டெல்லிசாவின் மனத்தைத் தொட்டிருக்க வேண்டும்.

''காலையில் என்ன செய்வதாக எண்ணியிருக்கே?'' என்று கேட்டார்.

''அந்தப் பேச்சே வேண்டாம். அந்த நாயோட இவனையும் வெளியே விரட்டுங்க'', என்று இடைமறித்தாள் அம்மா.

கோலியஸ் தந்தையைப் பரிதாபமாக நோக்கினான்.

''பாதிரியார் வீட்டில் இந்த மாதிரி செல்லப் பிராணிகளுக்கு ஒரு கருணை விடுதி இருக்காமே? அதனால்,காலைவரை இருக்க அனுமதியுங்கள் அப்பா.''

டெல்லிசா ஓரக் கண்ணால் மனைவியை நோக்கினார். நடக்கப் போவதுஎன்னவாயிருக்கும்என்பதை ஊகித்துக் கொண்டு, ''எக்கேடோ கெட்டுப் போங்கள்'' என்று கோபத்துடன் மனைவி உள்ளே போனதும், மகனின் தலையைப் பரிவுடன் தடவினார் டெல்லிசா.

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''ரொம்ப நன்றி அப்பா'' என்று கூறிய கோலியஸ், நாய்க்குட்டியை இடுக்கிக் கொண்டு, குளியலறைப் பக்கம் போனான்.

கோலியஸ் வீட்டில் இப்படிப் பலத்த எதிர்ப்புகளுக்கு இடையே ஒரு நாள் இரவு தங்கிய அந்த நாய்க்குட்டி, தொடர்ந்து அங்கேயே இருக்கும்அதிர்ஷ்டத்தைப்பெற்றது! அடுத்த நாள் காலை பள்ளிக்குக் கிளம்பிய கோலியஸ், நாய்க்குட்டியையும் தூக்கிக் கொண்டிருந்தான்.

''போகும் போது, பாதிரியார் வீட்டில் இதைச் சேர்த்து விடுகிறேன் அப்பா'' என்று அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே, சமையலறையிலிருந்து வெளியே வந்தாள் அம்மா.

''கோலி, உன் நாய்க்குட்டி நம்ம வீட்டிலேயேவளரட்டும். இந்தா, அதற்கும் பால் கொண்டு வந்திருக்கேன்'' என்று பால் நிறைந்த கோப்பையைக் கீழே வைத்தாள்.

கோலியஸுக்கு மட்டுமல்ல, டெல்லிசாவுக்கும் கூடப் பேரதிசயமாக இருந்தது.

''என்ன ஆச்சு உனக்கு?''

''நி ஜ மா க வா அம்மா சொல்றே?''

''ஆமாம் கோலியஸ். உன் நாய்க்குட்டி நல்ல அதிர்ஷ்டக் குட்டி! வைரம் பதித்த என் திருமண 'புரோச்' (சட்டையில் குத்திக் கொள்வது) காணாமல் போய்விட்டது. திருமணத்தின் போது போட்டதாச்சே? மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.



அமெரிக்காவில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் முட்டைகளை ஆராய்ந்து ஒரு ஆச்சரியமான முடிவை சொன்னார்கள். அதாவது முட்டைகள் ஒன்றோடு ஒன்று சங்கேத மொழி ஒன்றில் பேசிக் கொள்கின்றன என்பதே அது.

— எம். ஆனந்தன், வந்தவாசி.

இன்று காலை வந்து பார்த்தால், குளியலறைச் சாக்கடையை உன் நாய்க்குட்டி தோண்டிக் கொண்டிருந்தது! அதில் அந்த 'புரோச்' இருந்தது! நாய்க்குட்டி வந்த அதிர்ஷ்டம், காணாமல் போன என் 'புரோச்' கிடைத்தது. நல்ல நாய்க்குட்டி. அதனால், நம்மிடமே இருக்கட்டும்,'' என்று விளக்கினாள் அம்மா. கோலியஸின் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

கோலியஸ் அந்தப் பெண் நாய்க் குட்டிக்கு ''பிரஷ்ஷி'' என்று பெயர் வைத்தான். அது அவனுடன் பந்து விளையாடியது. அப்பாவுக்குக் கடையிலிருந்து நாளிதழ் வாங்கிக் கௌவிக் கொண்டு வந்தது. பாட்டியின் மூக்குக் கண்ணாடி, தாத்தாவின் கைத்தடியை எடுத்து வந்தது! அம்மாவின் சிநேகிதிகளுக்குக் கடிதம் கொண்டு போனது! வீட்டைக் கவனமாகப் பாதுகாத்தது. இப்படி எல்லோரது அன்புக்கும் பாத்திரமாகிச் செல்லமாக வளர்ந்தது பிரஷ்ஷி.

நாட்கள் ஓடின. டெல்லிசாவுக்குப் பதவி உயர்வு கொடுத்து வேறு இடத்துக்கு மாற்றினார்கள். அந்த ஊர் இருபத்தைந்து மைல்கள் தள்ளி இருந்தது. இந்தோனேஷியாவில் அப்பொழுது இருந்த சட்டத்தின்படி நாய்களை ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குக் கொண்டு செல்லக் கூடாது. பிரஷ்ஷியை விட்டுப் பிரிய வேண்டுமே என்ற நினைப்பு எல்லோருக்குமே பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ஆனாலும், வேறு வழி? அதை நண்பர் ஒருவர் வீட்டுக்கு அனுப்பி விட்டு, எல்லோரும் கனத்த மனத்துடன் திரும்பினர். கோலியஸின் அழுகையை யாராலும் நிறுத்த முடியவில்லை!

புது ஊருக்கு வந்து நான்கு நாட்கள் ஓடின. யாருக்கும் எந்த வேலையும் ஓடவில்லை! எல்லோரையும் பாடாகப் படுத்தி வைத்தது பிரஷ்ஷியின் நினைப்புத்தான்.

அன்று காலை, தாத்தா வாசலில் அமர்ந்து செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்தார். மரக் கதவின் வழியாக 'பிரஷ்ஷி' மின்னல் வேகத்தில் உள்ளே ஓடி வந்தது! தாத்தாவின் மடியில் தாவி, முட்டிக் கொஞ்சியது!

''பிரஷ்ஷி வந்துடுத்து!'' என்று தாத்தா மகிழ்ச்சிக் குரல் கொடுத்தார். எல்லோரும் வியப்புடன் ஓடி வந்தனர்.


ஆமாம், அது பிரஷ்ஷியேதான்! உடல் துரும்பாக இளைத்துப் போய், புழுதி படிந்து பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அம்மா ஓடிச் சென்று கோப்பையில் பாலைக் கொண்டு வைத்தாள். அது பாலை இலட்சியம் செய்யவே இல்லை! ஒவ்வொருவரோடும் உரசி, வாலை ஆட்டி, நக்கி, செல்ல முனகல் முனகிக் கண்ணீர் விட்டுத் தன் மகிழ்ச்சியை வெளியிட்ட பிறகுதான் பாலைத் தொட்டது!

வாசலில் ஏதோ சத்தம் கேட்டது. மாற்றலாகி வந்த போது அவர்களது சாமான்களை ஏற்றி வந்த குதிரை வண்டிக்காரர் நின்றிருந்தார். விட்டுப் போன சாமான்களை அவர் எடுத்து வந்திருந்தார்.

''இந்த நாய் உங்களுடையது தானா? இரண்டாவது 'டிரிப்' சாமான்களை ஏற்றிக் கொண்டு கிளம்பிய போது வண்டியின் பின்னாலேயே விடாமல் ஓடி வந்தது! எப்படியோ எல்லைக் காவல் பணியாளர்களையும் ஏமாற்றி விட்டு உங்களிடம் வந்து விட்டதே!'' என்று வியந்து கொண்டார் வண்டிக்காரர்.

குதிரை வண்டி எங்கே போகிறது என்பதைத் தெரிந்து கொண்டு ஒன்றா, இரண்டா, இருபத்தைந்து மைல்கள் 'பிரஷ்ஷி' ஒரே மூச்சில் ஓடி வந்திருக்கிறது! அன்புக்கு தூரம், தொலைவு கூட உண்டா என்ன?

ஏன்? ஏன்? ஏன்?



சாலைகளில் நடக்கும் போது கவனித்திருப்பீர்கள். மிகப் பெரிய பெட்ரோல் டாங்கர்களைச் சுமந்து கொண்டு லாரிகள் போகும். அந்த லாரிகளின் பின்னால் ரோடைத் தொடும்படி, தேய்ந்து கொண்டே போகும்படி ஒரு இரும்புச் சங்கிலி தொங்க விடப்பட்டிருக்கும்.

இரும்புச் சங்கிலியை ஏன் இப்படித் தொங்க விட்டிருக்கிறார்கள்? லாரிக்கு திருஷ்டி படாமல் இருக்கச் செய்திருக்கிறார்களா? அறிவியல் அடிப்படையில் இதற்கு என்ன காரணம்? இது இல்லாமல் இருந்தால் என்ன நிகழும்?

பெட்ரோல் டாங்கி நிறையப் பெட்ரோல் இருக்கிறது. இது டாங்கிக்குள்ளேயே குலுங்கிக் கொண்டும், உராய்ந்து கொண்டும் பயணம் செய்கிறது.

பெட்ரோல் அணுக்களுக்குள், பெட்ரோல் அணுக்கருவும் அதைச் சுற்றியுள்ள வெளிப்பாதையில் (பெட்ரோல்) எலக்ட்ரான்களும் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலாத வேகத்துடன் துள்ளித் துள்ளி ஓடிக் கொண்டிருக்கின்றன. குலுக்கலும் உராய்வும் (பெட்ரோல்) எலக்ட்ரான்களின் வேகத்தை மேன்மேலும் அதிகரித்து, (பெட்ரோல்) அணுக்களை விட்டு எலக்ட்ரான்களை வெளியே சிதறி விட வைக்கின்றன.

எல்லா எலக்ட்ரான்களுக்கும் ஓர் அலகு எதிர் மின் தன்மை உண்டு. இதைக் கொண்டு விளக்கை எரிய வைக்கவோ, வானொலியை இயக்கவோ முடியாது. எனினும், இந்த ஓர் அலகு எதிர் மின் சக்திப் பொறி, பெட்ரோல் டாங்கை வெடிக்க வைக்கப் போதுமானது. அபாயம் ஏதும் விளைவிக்காது இந்த மின் சக்தியைத் தரைக்குள் கொண்டு இறக்கி விடும் அற்புதப் பணியை, லாரிக்குப் பின்னால் பூமியைத் தொட்டுக் கொண்டு போகும் சங்கிலி செய்கிறது.

சேரநம்பி

மூங்கில் இளவரசி

ஜப்பான் நாட்டில் ஒரு சிற்றூர். ஊருக்கு வெளியே மலைப் பிரதேசம். இடையில் ஓர் ஆறு வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. கரையில் மூங்கில் காடு. அங்கே வயது முதிர்ந்த ஒரு கணவனும், மனைவியும் தனியாக வாழ்ந்து வந்தனர். கணவன் தினமும் காலையில் மூங்கில் காட்டுக்குப் போவான். மூங்கில்களை வெட்டிக் கொண்டு வருவான். அவனுடைய மனைவி கெட்டிக்காரி. அவள் மூங்கில்களிலிருந்து புல்லாங்குழல், கூடை, அகப்பை, தட்டு முதலிய பல பொருள்களை மிக அழகாகச் செய்வாள். மாதம் ஒருமுறை பௌர்ணமி இரவன்று அவர்கள் பக்கத்து ஊருக்குப் போவார்கள். காலை கூடும் சந்தையில் தங்கள் பொருள்களை விற்பார்கள்.

பௌர்ணமி நாட்களில் மட்டுமே அவர்கள் மற்ற மக்களைச் சந்திப்பது வழக்கம். நாள் ஆக, ஆக, அவர்களைத் தனிமை வருத்தியது. ''நமக்கு ஒரு குழந்தை இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்று சில சமயம் மனைவி தன் ஏக்கத்தைக் கணவனிடம் சொல்லுவாள்.

''ஆமாம், ஆமாம், ஒரு குழந்தை இருந்தால், நாம் தனியாக இருந்து இப்படிக் கஷ்டப்பட வேண்டாமே,'' என்று அவனும் பதில் சொல்லுவான்.

ஒருநாள் அவன் மூங்கில் வெட்டுவதற்காக வழக்கம் போலக் காட்டுக்குப் போனான். மூங்கில்கள் வானை முட்டிக் கொண்டு ஓங்கி வளர்ந்திருந்தன. ஆனால், ஒரே ஒரு மூங்கில் மட்டும் வில்லைப் போல வளைந்து குனிந்து, "என்னை வெட்டேன்!'' என்று கேட்பது போலத் தலையை ஆட்டி நின்றது! அருகில் சென்றான். அதிகாலை அமைதியைக் கிழித்துக் கொண்டு அந்த மூங்கிலின் அடிப்பாகத்திலிருந்து ஏதோ ஒரு மர்மமான சப்தம் வருவது போலத் தோன்றியது.

ஒரே மூச்சில் அவன் அந்த மூங்கிலை வெட்டிக் கீழே சாய்த்தான். அடிப்பாகத்தை ஒரு சிறு துண்டாக வெட்டி எடுத்தான். அந்த மூங்கில் துண்டை மிக மிக்க கவனமாகப் பிளந்து உள்ளே பார்த்தான்.

ஒரு சின்னஞ் சிறிய அழகுமிக்க பெண் குழந்தை, தன் பிஞ்சுக் கை



களையும், கால்களையும் உதைத்துக் கொண்டு அதற்குள் இருந்தது. அது முல்லைப் பூவைப் போல வெள்ளை நிறம். கன்னங்கரிய அடர்த்தியான தலை மயிர். பளபளக்கும் பட்டுப் பாவாடையையும், பட்டுச் சட்டையையும் அது போட்டுக் கொண்டிருந்தது.

"ஒரு குழந்தைக்காக ஏங்கிக் கொண்டிருந்தோம். புத்த பகவான் அருள் செய்தார். அவர் வாழ்க!" என்று மண்டியிட்டு நன்றி சொன்னான் கணவன்.

வீட்டிற்கு விரைந்தான். குழந்தையைத் தன் மனைவியிடம் கொடுத்தான்.

அவன் மனைவி குழந்தையை ஆவலோடு வாங்கினாள். அணைத்துக் கொண்டாள். அவளுடைய சந்தோஷத்திற்கு அளவே இல்லை. மூங்கிலிலிருந்து கிடைத்ததால் குழந்தையை "மூங்கில் இளவரசி", என்று அழைத்தனர். அதைத் தங்கள் கண்ணைப் போலக் காத்து வளர்த்தனர். 'அது சாதாரணக் குழந்தை அல்ல; தெய்வீகக் குழந்தை.' என்று அவர்கள் நம்பினர். ஆகவே, வழக்கமான அன்பை மட்டும் அல்லாமல், அதற்குரிய மரியாதையை அளித்து, பக்தியுடன் போற்றி வளர்த்தனர்.



குழந்தை வேகமாக வளர்ந்தது. அது வீட்டிற்கு வந்த பௌர்ணமியிலிருந்து, அடுத்த அமாவாசை தினம் வருவதற்குள் அது இரண்டடி உயரம் வளர்ந்து விட்டது! பழைய பட்டுப் பாவாடையும், சட்டையும் அதற்குப் போதவில்லை.

அடுத்த பௌர்ணமி அன்று, குழந்தைக்குக் காவலாகத் தன் கணவனை வைத்து விட்டு, அந்த முதியவள் மட்டும் சந்தைக்குப் போனாள். தான் சேமித்திருந்த காசை எல்லாம் செலவழித்து, குழந்தைக்குப் புதிய ஆடைகளை ஆசையோடு வாங்கி வந்தாள். குழந்தையின் சந்தோஷத்திற்காக அவர்கள் எல்லாக் கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டனர்.

வழக்கம் போல் ஒரு நாள் அந்த முதியவன் மூங்கில் காட்டுக்குப் போனான். 'குழந்தைக்கு நல்லதாக ஆடை அணிகளை வாங்கக் காசு இல்லையே," என்ற வருத்தம் அவனுடைய மனத்தை அழுத்தியது. ஒரு மூங்கிலை வெட்டிச் சாய்த்தான். உடனே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அதிலிருந்து தங்கக் காசுகள் "கலகல"வென்று கீழே கொட்டின! 'குழந்தையைக் கொடுத்த தெய்வம்தான் அதைக் காப்பாற்றுவதற்காக இந்தக் காசுகளையும் கொடுத்துள்ளது,' என்று அவன் நம்பினான். அந்தக் காசுகளைக் கொண்டு குழந்தைக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் அவர்

மூலம் : ஜப்பான் நாட்டுக் கதை
தமிழில் : வாமனன்

கள் வாங்கினர்.

இவ்வாறு தேவைப்படும்போதெல்லாம் மூங்கிலிலிருந்து தங்கக் காசுகள் அவர்களுக்குக் கிடைத்தன. அவற்றைக் கொண்டு குழந்தைக்கு வேண்டிய உணவு, உடை ஆகிய எல்லாவற்றையும் வாங்கி வந்தனர். ஒரு சில அங்குல உயரமே இருந்த அந்தக் குழந்தை, மூன்றே வருஷங்களுக்குள் வளர்ந்து பெரியவளாகி, ஓர் அழகிய பெண்ணாக மாறினாள். தன் வளர்ப்புத் தாய் தந்தையர் சொல்லிக் கொடுத்த விஷயங்களை எல்லாம் அவள் மின்னல் வேகத்தில் கற்றுக் கொண்டாள். அழகில் மட்டும் அல்லாமல், அறிவிலும் பண்பிலும் அவள் சிறந்து விளங்கினாள்.

முதியவர்கள் இருவரும் அந்தப் பெண்ணை ஒரு பொக்கிஷம் போலப் போற்றிக் காத்தனர். மூங்கில் காட்டிலிருந்து கிடைத்த காசுகளை எல்லாம் தங்கள் பெண்ணின் தேவைக்கு மட்டுமே செலவழித்தனர். தங்கள் உழைப்பின் மூலம் கிடைத்த காசுகளை அவர்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தினர்.

தங்களுக்கு ஓர் அதிசயக் குழந்தை கிடைத்த செய்தியை அந்த முதியவர்கள் யாரிடமும் சொல்லவில்லை. இருந்தபோதிலும், அவர்கள் வீட்டில் ஓர் அழகான பெண் இருக்கிறாள் என்ற செய்தி காட்டைத் தாண்டி எப்படியோ ஊர் முழுவதும் பரவி விட்டது.

மூன்றே ஆண்டுகளில் அவள் 'கிடுகிடு'வென்று வளர்ந்து ஒரு பதினேழு வயது பெண்ணைப் போல ஒளி வீசித் திகழ்ந்தாள். அவளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்று அந்த முதியவர்கள் நினைத்தனர். அவர்கள் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''உன் அழகும், பெருமையும் ஊர் முழுவதும் பரவியுள்ளது. புகழ் பெற்ற இளைஞர் பலர் உன் அன்பை வேண்டியும், உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளவும் ஆசைப்படுகின்றனர். உன்னைப் பிரிவது எங்களுக்கு மிக மிகக் கஷ்டமாக இருந்தாலும், எங்களுக்குப் பிறகு உனக்கு ஒரு நல்ல துணை வேண்டுமல்லவா? ஆகவே, அவர்களை இங்கே அழைக்க விரும்புகிறேன். என்ன கூறுகிறாய்? என்று கேட்டனர்.

"நீங்கள் சொல்லும் அந்த இளைஞர்கள் யாரையும் நான் பார்க்க விரும்பவில்லை. நான் ஒரு சாதாரண மானிடப் பெண் அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். எனக்குக் கல்யாணம் வேண்டாம். இருந்தாலும், உங்களைத் திருப்தி செய்வதற்காக இதற்கு ஒப்புக் கொள்கிறேன். மூன்றே மூன்று இளைஞர்களை மட்டும் வரச் சொல்லுங்கள். அவர்களுக்கு ஒரு வேலை கொடுப்பேன். எந்த இளைஞன் அதை ஒழுங்காகச் செய்கிறானோ அவனை நான் நிச்சயமாக மணப்பேன்,'' என்று அவள் உறுதியாகக் கூறினாள்.

வந்திருந்தவர்களிலிருந்து மூன்று சிறந்த இளைஞர்களை அந்த முதியவர்கள் தேர்ந்தெடுத்தனர். மூங்கில் இளவரசியைக் காண்பதற்காக அவர்களை ஒவ்வொருவராக அழைத்தனர்.

முதல் இளைஞன் வந்தான். இளவரசியைப் பார்த்தான். அவளுடைய முகத்தில் வீசிய ஒளியைக் கண்டு அவன் அப்படியே பிரமித்து நின்று விட்டான்.

''புத்த பகவான் பிட்சை எடுப்பதற்குப் பயன்படுத்திய பாத்திரம் எனக்கு வேண்டும். சென்று கொண்டு வாருங்கள்!' என்று பணித்தாள்.

இரண்டாவது இளைஞன் வந்தான். ''சீன நாட்டில் அதிசயமான மர எலிகள் இருக்கின்றன. அவற்றின் தோல் தீப் பிடிக்காது. அந்த மர எலியின் தோல் ஒன்றைக் கொண்டு வாருங்கள்,'' என்று அவனுக்கு வேலை வைத்தாள்.

மூன்றாவது இளைஞன் வந்தான். ''கடற்கரையில் உள்ள சின்னக் கிளிஞ்சல்களைக் கொத்திக் கொண்டு போய்த் தூக்கணாங்குருவிகள் தங்கள் கூடுகளில் ரகசியமாக வைத்திருக்கும். அந்தக் கிளிஞ்சல் சிப்பிகளில் ஒன்றைக் கொண்டு வா!'' என்று அவள் ஆணையிட்டாள்.

மூங்கில் இளவரசி கேட்ட பரிசுப் பொருள்களைத் தேடி, இளைஞர்கள் மூவரும் புறப்பட்டனர். அடுத்தவன்





திரும்பி வருவதற்குள், எப்படியாவது தான் அந்தப் பரிசோடு வந்து விட வேண்டும் என்று ஒவ்வொருவரும் துடிப்பாக இருந்தனர்.

"பாரத நாட்டுக்குப் போய் புத்த பிரானின் பழைய பாத்திரத்தைத் தேடுவது என்பது கஷ்டமான காரியம். உள்ளூரில் உள்ள ஒரு நல்ல குயவனிடம் கேட்டு, அதே மாதிரி ஒன்றை எளிதில் வாங்கி விடலாமே!" என்று முதல் இளைஞன் நினைத்தான். அப்படியே செய்தான். அதை மூங்கில் இளவரசியிடம் சமர்ப்பித்தான்.

"இது புத்தரின் பாத்திரம் அல்ல. போலி. உன் அன்புக்கு நன்றி. ஆனால், நீயே இதை எடுத்துக் கொள். எனக்கு வேண்டாம்" என்றாள் இளவரசி. இளைஞன் மௌனமாக நகர்ந்தான்.

இரண்டாவது இளைஞன் சீனாவுக்குப் போகவில்லை. பதிலாகத் தன் ஊரிலேயே இருந்த ஒரு தோல் வியாபாரியைச் சந்தித்தான். போலியான ஒரு தோலை வாங்கினான். அதை நன்றாக அழகுபடுத்தி மூங்கில் இளவரசியின் முன்பு வைத்தான்.

"இது அசல் இல்லை. பொய்த் தோல். இதை நெருப்பில் போட்டுச் சோதிக்கலாமா?" என்று மூங்கில் இளவரசி கேட்டாள். இளைஞன் பதில் ஏதும் பேசாமல் நடந்தான்.

மூன்றாவது இளைஞன் தூக்கணாங் குருவிக் கூடுகளைத் தேடவில்லை. பதிலாக ஒரு வேடனைத் தேடினான். அவனிடமிருந்து வண்ணத்திலும், வடிவத்திலும் குருவி முட்டையை ஒத்திருந்த ஓர் அழகிய சிப்பியை விலைக்கு வாங்கினான். இளவரசிக்குப் பரிசாகக் கொடுத்தான்.

"இதைத் தூக்கணாங்குருவிக் கூட்டிலிருந்து எடுக்கவில்லை. கடற்கரையிலிருந்து எடுத்திருக்கிறார்கள். ஆனாலும், பரிசுக்கு நன்றி," என்று மூங்கில் இளவரசி சொன்னாள். இளைஞன் தலைக்குனிவோடு திரும்பினான்.

"கல்யாணமே ஆகாவிட்டால், நம் கல்யாணத்திற்குப் பிறகு இந்த இளம் பெண்ணை யார் கவனிப்பார்கள்?" என்று முதியவர்கள் இருவரும் கலங்கினர்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம். விரைவில் இன்னொரு இளைஞன் இங்கு வருவான். அவனையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. அதன் பிறகு நான் என் சொந்த வீட்டிற்கே போய் விடுவேன்," என்று இளவரசி அவர்களை அமைதிப்படுத்தினாள்.

"அப்படியானால், இதை உன் வீடாக நீ எண்ணவில்லையா?" என்று அவர்கள் ஏக்கத்தோடு கேட்டனர்.

"நான் அப்படிக் கூறவில்லை. இது என் மண்ணுலக வீடு. ஆனால், என் சொந்த வீடு இதுவல்ல என்பதைத் தான் தான் கூறுகிறேன்" என்றாள் இளவரசி.

சில நாட்களுக்குப் பிறகு மூங்கில் இளவரசியை மணப்பதற்காக இன்னொரு அழகிய இளைஞன் வந்தான். அவனைக் கண்டு முதியவர்கள் இருவரும் திகைத்தனர். காரணம் அவன் ஜப்பான் நாட்டுச் சக்கரவர்த்தியின் மூத்த மகன்; பட்டத்து இளவரசன்!

''உன்னை மணந்து கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கும் கட்டளையிடு!'' என்று இளவரசன் இளவரசியிடம் பணிவாகக் கேட்டான்.

''என்னுடைய பதில் இந்த ஓலையில் இருக்கிறது. படித்துப் பார்த்து விட்டு இதைத் தீயில் போட்டு விடு. உன்னையும் நான் மணக்க இயலாது' என்று சொல்லிய இளவரசி, ஓர் ஓலைச் சுருளை இளைஞனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கிக் கொண்டு வருத்தத்துடன் அரண்மனைக்குத் திரும்பினான்.

பிறகு மூங்கில் இளவரசி தன் வளர்ப்புப் பெற்றோர்களை அருகில் அழைத்தாள். தன் கதையைச் சொன்னாள்.

''நான் குணக் குன்றாகிய சந்திர தேவனின் செல்ல மகள். ஆனால், அத்தகைய உயர்ந்த நிலைக்கு இருக்க வேண்டிய நல்ல குணங்களுடன் நான் இருக்கவில்லை. சுயநலமாகவும், முரட்டுத்தனமாகவும் இருந்தேன். அப்பா எனக்குத் தண்டனை கொடுத்து, என்னை மிக மிகச் சின்னவளாக்கி அனுப்பி பூவுலகில் ஒரு மூங்கிலின் உள்ளே மறைத்து வைத்தார். என்னுடைய அதிர்ஷ்டம் நீங்கள் என்னைக் கண்டெடுத்தீர்கள். அன்பைப் பொழிந்தீர்கள். தங்கக் காசுகளை எல்லாம் ஒன்றைக் கூட நீங்கள் உங்கள் நலனுக்காக எடுத்துக் கொள்ளாமல், எனக்காகவே செலவழித்தீர்கள். உங்களிடமிருந்து பல நல்ல குணங்களை நான் கற்றுக் கொண்டேன். அதனால்,என்னுடைய இயற்கையான குணம் இப்போது முற்றிலும் மாறி விட்டது. என்னுடைய சுயநலம், முரட்டுத்தனம் எல்லாம் இருந்த இடம் தெரியாது போய் விட்டன. என்னால் உங்களை மறக்க முடியாது. என் அப்பாவும் உங்களை மறக்க மாட்டார். உள்ளம் குளிர்ந்து அவர் உங்களை ஆசீர்வதிப்பார்,'' என்றாள் மூங்கில் இளவரசி.


முதியவர்கள் தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தினர். வாயிலிருந்து வார்த்தை ஏதும் வெளிவரவில்லை.

''இன்று இரவு பௌர்ணமி. நீங்கள் வழக்கம் போலச் சந்தைக்குச் செல்லுங்கள். ஆனால், நீங்கள் திரும்பி வரும் போது நான் இங்கே இருக்க மாட்டேன்,'' என்றாள் இளவரசி.

அவ்வாறே முதியவர்கள் சந்தைக்குச் சென்று திரும்பினர் அதற்குள் மூங்கில் இளவரசி மறைந்து விட்டிருந்தாள்.

வானத்திலிருந்து குளிர்ந்த சந்திர ஒளி சிந்திய ஓர் அழகிய தேர் கீழே இறங்கி வந்தது. அதிலிருந்து வந்த தேவதைகள் மூங்கில் இளவரசியை அழைத்துக் கொண்டு போனார்கள். தேர் வானில் பறந்து மறைந்தது.

பட்டத்து இளவரசன் அந்த ஓலைச் சுருளில் இருந்த முத்து முத்து எழுத்துக்களைப் படித்தான். ஆனால், அதைப் பற்றி யாரிடமும் பேசவில்லை. ஃபூஜி மலை உச்சிக்குப் போய் மூங்கில் இளவரசி சொன்னபடியே அந்த ஓலையை எரித்து விட்டான். அந்தத் தீ எப்போதோ அணைந்து விட்டது. இருந்தாலும், அவ்வப்போது மலை உச்சியிலிருந்து புகை வந்து கொண்டுதான் இருக்கிறது!



ஒரு தபால் கார்டு 24 ஆண்டுகள் பயணம் செய்திருக்கிறது என்ற செய்தியைக் கேட்டால் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள் அல்லவா? நம் நாட்டில் பஞ்சாப் மாநிலத்தில் வசித்து வரும் ஒருவர் 118 மைல்களுக்கு அப்பால் இருக்கும் தம் உறவினர் ஒருவருக்கு 1966 ஆம் ஆண்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். அந்தக் கடிதம் இந்த ஆண்டுதான் வந்து சேர்ந்தது! ஆனால்... அந்தோ பரிதாபம்...! அந்தக் கடிதத்தை வாங்க அந்த நபர் இப்போது உயிருடன் இல்லை!

— கல்லிடை கே. எல். குமணன்.

பள்ளியிலிருந்து திரும்பிய வாசு 'ஷூ'வைக் கூடக் கழற்றாமல் அம்மாவிடம் ஓடி வந்தான்.

''அம்மா! அம்மா! அரை வருடப் பரீட்சையிலும் நான்தானம்மா 'பர்ஸ்ட் ராங்க்'. இதோ பார் 'பிராகரஸ் ரிப்போர்ட்' என்று உற்சாகமாகக் கூவியபடி தன் கையிலிருந்ததை அம்மாவின் முகத்தருகே உயர்த்திக் காண்பித்தான் வாசு.

''அப்படியா! ரொம்ப... ரொம்ப சந்தோஷம் வாசு. இனி வருகிற பரீட்சைகள் எல்லாவற்றிலும் நீதான் 'பர்ஸ்ட் ராங்க்' வாங்க வேண்டும். கண்டிப்பாக வாங்குவாய்...'' என்று அம்மா அவனை அன்போடு அழைத்துக் கொண்டு, ஆசையுடன் முத்த மழை பொழிந்தாள்.



சைக்கிள் எங்கே?

வாசுவின் அப்பா 'பிராகரஸ் ரிப்போர்ட்டை' வாங்கிப் பார்த்து விட்டு முதல் ரேங்க் வாங்கியதற்காக அவனை ரொம்பப் பாராட்டினார்.

வாசுவுக்குப் பெருமையாக இருந்தது.

''அப்பா! நீங்க சொன்னபடி எனக்கு இந்தப் பிறந்த நாளுக்கு சைக்கிள் வாங்கித் தருவீர்களா?'' என்று ஆசையாகக் கேட்டான்.

''இந்தப் பிறந்த நாளுக்கா...?''

''ஆமாம்ப்பா... இருபதாம் தேதி எனக்குப் பிறந்த நாளாச்சே! மறந்துட்டீங்களா?''

''மறக்கலே வாசு. இன்னும் ஒரு வாரம் கூட இல்லையே...'' என்று இழுத்த அப்பா, அம்மாவின் முகத்தைப் பார்த்தார். ''முடியுமா கமலா...?'' என்று கேட்டார்.

அம்மா ஒரு நிமிடம் யோசித்து விட்டு, ''முடியாதுங்க... நீங்க டைபாய்ட் ஜுரத்திலே படுத்து விட்டதில் பாங்கில் இருந்த பணமெல்லாம் செலவாகி விட்டதே! எப்படிங்க வாங்க முடியும்?'' என்றாள்.

''ஆமாம் வாசு. இந்தப் பிறந்த நாளுக்குப் புது டிரஸ் மட்டும் வாங்கிக்கொள். அடுத்த பிறந்த நாளுக்குக் கண்டிப்பாக சைக்கிள் வாங்கிக் கொடுக்கிறேன்,'' என்று சொன்னார் அப்பா.

''அம்மா! அப்பா சொன்னபடி நான் 'முதல் ராங்க்' வாங்கி விட்டேன். அதே போல், அப்பாவும் நீயும் சொன்னபடி கண்டிப்பாக எனக்கு சைக்கிள் வாங்கித் தந்து விட வேண்டும். ஆமாம்... சொல்லிட்டேன்..'' என்று சொல்லி விட்டு உடை மாற்றிக் கொள்ளச் சென்றான் வாசு.

கே.ஜெயலக்ஷ்மி



''போங்கப்பா! சொன்னபடி செய்ய வேண்டும். பொய் சொல்லக் கூடாதுன்னு எனக்கு மட்டும் சொல் றீங்க... நீங்க மட்டும் சொன்னபடி செய்யாமல்...''

''வாசு! அப்படியெல்லாம் பேசக் கூடாதுப்பா. அப்பா உடம்புக்கு முடியாம படுத்து விட்டாரில்லே.. சேமிப்புப் பணம் செலவாயிட்டது. இல்லாட்டி கண்டிப்பாக வாங்கிக் கொடுத்திருப்பார்...'' அம்மாவும் சேர்ந்து கொண்டாள்.

''போம்மா...'' என்று கோபித்துக் கொண்டு வெளியே போய் விட்டான் வாசு.

அன்றிரவும் வாசு சரியாகச் சாப் பிடவில்லை. முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டிருந்தான். அம்மா அப்பாவுடன் பேசவுமில்லை.

மறுநாள் மாலை.

அப்பா ஆபீசிலிருந்து வரும் போது அவனுக்குப் புதுச் சட்டையும் 'பாண்ட்'டும் வாங்கி வந்தார்.

அம்மா அதை அவனிடம் காட்டி னாள்.

''வழக்கம் போல் இருபதாம் தேதி சாயங்காலம் ஐந்து மணிக்கு உன் நண்பர்களையெல்லாம் அழைத்து வா வாசு. டிபன் காப்பி எல்லாம் கொடுக்கலாம் என்ன?'' உற்சாக மாக வினவினாள் அம்மா.

''எனக்குப் பிறந்த நாளும் வேண் டாம். ஒன்றும் வேண்டாம். நான் யாரையும் அழைத்து வரப் போவ தில்லை....'' என்றான் வாசு கோப மாக.

அவன் கோபம் குறையவே இல்லை!



ஸ்கூல் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டான் வாசு.

கொஞ்சம் கொஞ்சமாக எல்லாப் பையன்களும் வந்து அவரவர் இடங் களில் ஏறி உட்கார்ந்து விட்டார்கள். கடைசியாக முருகன் வந்து உட்கார்ந் தான்.

பஸ் புறப்படும் என்று எதிர்பார்த் தான் வாசு. ஆனால், புறப்பட வில்லை.

டிரைவர் கணேசன் கையில் ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு வந்து ஒவ்வொரு பைய னுக்கும் சாக்லேட் கொடுத்தார்.

இன்னைக்கு என் மகன் முருகனுக் குப் பிறந்த நாள். அதனால்தான் உங்களுக்கெல்லாம் சாக்லேட்...'' என்று விளக்கம் தந்தார் கணேசன்.

வாசு ஆவலோடு முருகனைப் பார்த்தான். அவன் பழைய யூனிபார் மில்தான் இருந்தான்.

''டிரைவர் சார்! முருகனுக்குப் புது டிரஸ் எடுக்கலையா?''

''இல்லை வாசு! அதுக்கெல்லாம் ஏது தம்பி எங்களுக்கு வசதி? என்னமோ, இந்த ஸ்கூல் பஸ்ஸுக்கு டிரைவராக இருப்பதால் முருகனுக்கு சம்பளமில்லாமல் இந்த ஸ்கூலில் படிக்க முடிகிறது. அவ்வளவுதான். நீங்களெல்லாம் உங்களுடைய பிறந்த நாளுக்கு எல்லோருக்கும் சாக்லேட் கொடுக்கறீங்க. அதைப் பார்த்துட்டு அவனும் ஆசைப்பட்டான். அதுக்கா கப் பத்து ரூபாய் கடன் வாங்கும்படி ஆயிப் போச்சு. இல்லாட்டி இது கூட நான் வாங்கற பழக்கமில்லை...'' என்றார்.

வாசு தன் பிறந்த நாளையொட்டி தான் நடந்து கொண்ட முறையை



வர்ஜீனியாவைச் சேர்ந்த ராண்டால்ப் தென்னடி பிறக்கும்போதே எல்லாப் பற்களுடன் பிறந்தார். 101—வது வயதில் அவர் இறந்தார். அவர் இறக்கும்போது எல்லாப் பற்களும் ஒன்று கூட விழாமல் அப்படியே இருந்தன.

— எம். ஆனந்தன், வந்தவாசி.

எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

வீட்டிற்குள் நுழைந்ததும் அம்மா மறுபடி கேட்டாள்.

"நாளைக்கு எல்லாரையும் வரச் சொல்லியிருக்கிறாயா வாசு?"

"இல்லையம்மா" என்றான் வாசு சுருக்கமாக.

"இன்னும் உன் கோபம் போக வில்லையா? உன் அப்பாவை விட சைக்கிள்தான் உனக்கு உசத்தியாப் போச்சா?" என்று கேட்டாள் அம்மா.

"எனக்கு ஒண்ணும் கோப மில்லை...." என்று கூறிய வாசு, முருகனைப் பற்றியும்,டிரைவர் சொன்னதையும் பற்றி விவரமாகச் சொன்னான்.

"பாவமாகத்தான் இருக்கிறது. அதற்காக நாம்ப என்ன செய்ய முடியும் சொல்லு"? என்றாள் அம்மா.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது அம்மா!"

"என்ன?"

"என் பிறந்த நாள் அன்று எப்போதும் போல் நிறைய நண்பர்களைக் கூப்பிடப் போவதில்லை. ஒரே ஒரு பையனை மட்டும் கூப்பிட்டுக் கொண்டு வருவேன். அவனுக்கு ஸ்வீட், காரமும் கொடுத்து புதிய டிரஸ்ஸும் வாங்கிக் கொடுக்க வேண்டும். எனக்கு ரொம்ப ஆசையாக இருக்கிறது. அப்பாவும் நீயும் சம்மதிப்பீர்களாம்மா...?" — ஆவலோடு கேட்டான் வாசு.

"நல்ல யோசனை வாசு. அப்படியே செய்யலாம். நாளைக்கு நீ முருகனை மட்டும் அழைத்து வா. நான் அப்பாவிடம் சொல்லி முருகனுக்குப் புது டிரஸ் வாங்கி வரச் சொல்கிறேன்..." என்று மகிழ்ச்சியோடு கூறினாள் அம்மா.

"எங்கம்மா ரொம்ப நல்ல அம்மா" என்று சொல்லிக் கொண்டே அம்மாவின் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டான் வாசு.

மறுநாள் மாலை வாசு முருகனுடன்தான் வீட்டுக்கு வந்தான்.

அம்மா, வாசுவுக்கும் முருகனுக்கும் ஸ்வீட், காரம், காப்பி எல்லாம் கொடுத்தாள்.

அப்பா, ரெடிமேட் டிரஸ் வாங்கி வந்திருந்ததை எடுத்துக் கொடுத்தார். வாசு அந்தப் புதிய உடைகளை முருகனிடம் கொடுத்து அணிந்து கொள்ளச் செய்தான்.


முருகனுக்கு ரொம்ப மகிழ்ச்சி!

"வாசு! நீ படிப்பிலும் கெட்டிக்காரன். குணத்திலும் கெட்டிக்காரன். உனக்கு.. உனக்கு.. ரொம்ப நல்ல மனசு ...டா..." என்று கூறி அவனைக் கட்டியணைத்துக் கொண்டான் முருகன்.

வாசுவுக்கும் ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது.

"அப்பா! இனிமேல் நான் எந்தப் பிறந்த நாளுக்கும் அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்டு உங்களைத் தொந்திரவு செய்ய மாட்டேன். இது போல் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் யாராவது ஒரு ஏழைப் பையனுக்கும் புது டிரஸ் வாங்கித் தரச் சொல்வேன்..." என்றான்.

"நீ கேட்டாலும் கேட்கா விட்டாலும் அடுத்த பிறந்த நாளுக்கு உனக்குக் கண்டிப்பாக சைக்கிள் வாங்கித் தரத்தான் போகிறோம்..." என்றார் அப்பா சிரித்துக் கொண்டே. அம்மாவும் சிரித்தாள். வாசுவும் முருகனும் கூடச் சிரித்துக் கொண்டே விளையாடச் சென்றார்கள்.



நன்மை நாடிய நல்லார்

மறைக் காடெனும் ஊர்க் கடற்கரையில்
    'முப்ப'தில் உப்பது எடுத்தது யார்?
சிறையில் வாடினும் விடுதலைக் காய்
    சிந்தை கலங்காச் சிங்கம் யார்?

தீண்டாதாரென ஒரு சிலரை
    வேண்டாதாரென வெறுப்பதுவா?
தொண்டர் திருக்குல மக்களையே
    தேவாலயத்துள் சேர்த்தது யார்?

கள்ளெனும் அரக்கனை மாநிலத்தில்
    கதறி ஓடச் செய்தது யார்?
கடனில் வீழ்ந்த உழவரையே
    காத்து மகிழ்ந்திடச் செய்தது யார்?


இந்திய நாட்டு இதிகாசம்
    இணையில் லாத நம் செல்வம்
இரண்டையும் எவரும் அறிதற்கே
    எளிதாய்த் தமிழில் எழுதியதார்?

இந்திய நாட்டின் முதல் பதவி,
    இம் மாநிலத்தில் ஒரு பதவி,
எந்தப் பதவி என்றாலும்,
    எல்லாம் ஒன்றே இவருக்கு!


பதவியில் பெருமை பெறமாட்டார்,
    தருவார் பெருமை பதவிக்கே;
உதவியென்றால் உடன் வருவார்
    உத்தமர் இவர்போல் யாருண்டு?


உண்மையின் குரலை அஞ்சாது
ஓங்கி முழக்கிய தீரர் தான்,
நன்மை ஒன்றே நாட்டுக்கு
நாடிய நல்லார் ராஜாஜி!

— ரா.பா. சாரதி.



கடற்கரை ஊரான அழகாபுரியில் டமாரம் அடிப்பவன் ஒருவன் இருந்தான்...
டமாரபாலா!.. குழந்தைக்கு டமாரச்சத்தம் கேட்கணுமாம், கொஞ்சம் அடிச்சுக் காட்டு...
ஓ!
ஓர் இரவு... டமாரபாலன் கடற்கரைப் பாறைகள் மீது உலவி வந்தபோது....
அடடா! எத்தனை அழகான சரிகைச் சால்வைகள்!
மூன்றில் ஒரு சால்வையை எடுத்தான்.
சரிகைப் புள்ளிகளுடன் சல்லாத் துணி மாதிரி எத்தனை அழகு!
கண்ணாடி மலை அழகிகள்
கதை: ஆனந்தி படம்: விஜய்
அப்போது...
என் சால்வையைக் கொடுத்துவிடு!
நீயார்? எப்படி இங்கே வந்தாய்? சொன்னால் கொடுத்து விடுகிறேன்...


நான் காம்போஜ நாட்டு அரசனின் மகள். நானும் என் இரு சகோதரிகளும் கண்ணாடி மலையில் அடைபட்டுக் கிடக்கிறோம்...
ஐயோ பாவம்!
சூனியக்காரி அக்கம்மா எங்களைப் பௌர்ணமியன்று மட்டும் கடலில் நீந்தி விளையாட அனுமதிப்பாள்... அதோ பார்....!
உன் பெயர் என்ன?
மாலினி. என் சகோதரிகள் சாலினி, நளினி.. சால்வையைக் கொடு. அது இல்லாமல் என்னால் திரும்ப முடியாது.
இந்தா... ஆனால் உங்களுக்கு நான் உதவ விரும்புகிறேன்...
கடலைத் தாண்டி, காட்டைக் கடந்து, கண்ணாடி மலையை அடைய வேண்டும். காட்டில் ராக்ஷஸர்கள் இருக்கிறார்கள்... வராதே!
மூன்று பெண்களும் சால்வைகளைப் போர்த்திக் கொண்டதும்....
அட மாயமாய் மறைந்து விட்டார்களே! கண்ணாடி மலைக்குத்தான் திரும்பிப் போயிருப்பார்கள்!


டமாரபாலன் அந்தப் பெண்களுக்கு உதவ எண்ணிப் புறப்பட்டான்...
மூட்டையில் பசியாற்ற அவல் இருக்கிறது; ஊக்கமளிக்கக் கழுத்திலிருந்து டமாரம் தொங்குகிறது; போதுமே!...
துறைமுகத்தில் ஒரு கப்பல் புறப்பட்டுக் கொண்டிருந்தது...
கப்பல் மாலுமிகளுக்கு டமாரமடித்து உற்சாகமூட்டுவேன்...
சரி, ஏறிக்கொள்!
சில தினங்கள் பயணத்துக்குப் பிறகு...
அதோ புஷ்பகத் தீவு! என்னை அங்கே இறக்கி விட்டு விடுங்கள்.
வேண்டாமப்பா! அது பயங்கர ராக்ஷஸர்கள் வாழும் காடு! போனவர் திரும்பியதில்லை!
டமாரபாலன் வற்புறுத்தவே... கப்பல் கரையோரம் நின்றது.
எனக்குப் பயமில்லை, போய் வருகிறேன்!
ராக்ஷஸர்கள் பகலில் தூங்குவார்கள்! அவர்களுக்குப் புத்தி மட்டு. பலத்தால் அவர்களை ஜெயிக்க முடியாது! அறிவால் வெற்றி கொள்ள முயற்சி செய்!
தீவில் இறங்கி, காட்டில் நடந்தான் டமாரபாலன்...
இந்தத் தாவரங்கள், பூக்கள், பறவைகள் எல்லாமே விசித்திரமாய் உள்ளனவே!



வெகு தூரம் நடந்த பிறகு...
ஆகா! ஒரு ராக்ஷஸன்! தூங்குகிறான்!
எழுப்பலாமா? எப்படிச் சமாளிப்பது? தந்திரம் என்ன?
ஒரு முடிவுக்கு வந்தவனாக டமாரபாலன் மிக வேகமாக டமாரம் அடித்தான்...
யாரடா அவன் என் தூக்கத்தைக் கெடுப்பவன்?
என் பின்னால் பெரிய சேனை வருகிறது. அதற்கு வழிகாட்டத்தான் டமாரம் அடிக்கிறேன்!
சேனையா? வரட்டும், எறும்புகளைப் போல் நசுக்கி விடுவோம்! ராக்ஷஸர்கள் பலர் இருக்கிறோம்...
ஹும்! என் சேனையை ஒன்றும் செய்ய முடியாது. என் வீரர்கள் இரும்புக் கவசம் அணிந்து இரும்புக் கோடரிகள் வைத்திருக்கிறார்கள்.
நீங்கள் தூங்கும் போது
ஒவ்வொரு ராக்ஷஸனையும் முப்பது பேர் சூழ்ந்து கொண்டு தீர்த்துக் கட்டி விடுவார்கள்!



ராக்ஷஸன் பயந்துபோய்...
மனிதர்கள் புத்திசாலிகள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்... உனக்கு என்ன வேண்டும்? சொல்!
என்னைத் தூக்கிக் கொண்டு போய்க் கண்ணாடி மலை அருகே விடு!
ராக்ஷஸன் பாலனைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டான்.
என்னால் அவ்வளவு தூரம் போக முடியாது. மூன்றில் ஒரு பங்கு தூரம் கடந்து, என் நண்பனிடம் ஒப்படைக்கிறேன்.
பாலன் டமாரம் ஒலிக்க...
ஐயய்யோ! நிறுத்து! என் காதுக்குள் எதற்காக டமாரம் அடிக்கிறாய்?
இது என் சேனையைத் திரும்பிப் போகச் சொல்வதற்காக. வித்தியாசமான முறையில் அடிக்கிறேன்...
காட்டினூடே செல்கையில்...
விசித்திரமான மரங்கள்; விநோதப் பூக்கள்... இவையெல்லாம் யாருக்குச் சொந்தம்?
எங்கள் எஜமானி ஒரு சூனியக்காரி இருக்கிறாள்... அவளுக்குத்தான் சொந்தம்!
ஓ! அக்கம்மாவா?
ஐயய்யோ, அவளை உனக்குத் தெரியுமா?
ஏன் தெரியாது? அவள் என் அத்தையாச்சே!



அசட்டு ராக்ஷஸன் அதை நம்பி...
உன் அத்தையை நீ பார்க்கும்போது நான் உனக்கு உதவியதை மறக்காம சொல்லணும்.
ஆகட்டும்.
முதல் ராக்ஷஸன் தன் நண்பனான இரண்டாவது ராக்ஷஸனை நெருங்க...
டமடம் டமடம் டமடம்
இதென்ன சப்தம் தாங்கமுடியாமல்?
முதல் ராக்ஷஸன் தன் நண்பனிடம்...
இவர் அக்கம்மாவைப் பார்க்கப் போகிறார். அவள் இவருடைய அத்தையாம்! இவருக்கு நாம் உதவாவிட்டால் கோபிப்பாள். இவனும் டமார -மடித்து சேனையை வரவழைத்து விடுவான்.
இரண்டாவது ராக்ஷஸனும் ஏமாந்துபோய் டமார பாலனைத் தோளில் அமர்த்திக் கொண்டான்.
நானும் மூன்றில் ஒருபங்கு தூரம் அழைத்துப்போய் என் நண்பனிடம் ஒப்படைக்கிறேன்...
...உன் படைகளைத் திரும்பிப்போகச் சொல்லு!
டட்ட டட்ட டம்! டட்ட டட்ட டம்!




மேலும் மூன்றில் ஒரு பங்கு தூரம் சென்றதும் மூன்றாவது ராக்ஷஸன் தென்பட்டான்...
இறக்கிவிடு, டமார மடித்து அவனை எழுப்புகிறேன்!
டமாரபாலன் டமாரமடித்தான்...
டமடம்
டமடம்
டமடம்
இதென்ன இடிச்சத்தமா? தூங்கவே முடியலையே...
இரண்டாவது ராக்ஷஸன்...
இடிச்சத்தம் இல்லை... டமார சத்தம்... அக்கம்மாவின் மருமகன் செய்த காரியம்... தயவு செய்து இவனை, கண்ணாடி மலைக்கு அழைத்துப் போ...
இல்லாவிட்டால் டமார சத்தம் கேட்டு என் சேனை வந்து விடும்! அக்கம்மா அத்தையும் உனக்குத் தண்டனை கொடுப்பாள்!
ஐயோ, வேண்டாம். இதோ அழைத்துப் போகிறேன்...
மூன்றாவது ராக்ஷஸன் தோளில் ஏறிப் பயணப் பட்டான் பாலன்...
டட்டடட்டடம்
டட்டடட்டடம்
இந்த டமாரச் சத்தத்தில் என் படைகள் திரும்பிப் போய்விடும்!


அது சரி, உண்மையைச் சொல்! அக்கம்மா கிழவியையா நீ பார்க்கப் போகிறாய்? இளவரசி கலைத்தானே?
அட! அதெப்படி உனக்குத் தெரிந்தது?
என்னை என்ன முழு மடையன் என்று நினைத்தாயா..? சரி, அதோ கண்ணாடி மலை தெரிகிறது... இறங்கிக்கொள். நான் போய் வருகிறேன்!
டமாரபாலன் இறங்கிக் கொண்டு..
எனக்கு உன் உதவி இன்னும் கொஞ்சம் தேவைப்படுமே!
ஐயோ! அக்கம்மாவுக்குத் தெரிந்தால் என்னை மிருகமாகவே மாற்றி விடுவாள்!
பயப்படாதே! அவளை நான் சமாளித்துக் கொள்கிறேன். டமாரச் சத்தம் கேட்டால் உதவிக்கு வா! உனக்கு விடுதலை பெற்றுத் தருகிறேன்..
ராஜாளியன் பயத்துடன் திரும்பிப் போய்விட, பாலன் கண்ணாடி மலையை நெருங்கி..
இதன்மேல் எப்படி ஏறுவது? வழுக்கி விடுமே? இருந்தாலும் முயன்று பார்க்கிறேன்...



பல தடவைகள் கண்ணாடி மலை மீது ஏற முயற்சி செய்தான் பாலன்...
ஒவ்வொரு முறையும் வழுக்கி விழுந்தான்...
என்ன செய்வது? புரியலையே! நான் ஒரு பறவையாக இருக்கக் கூடாதா? மாலை நேரம் ஆகிவிட்டதே!
அந்தச் சமயத்தில்...
நான்தான் ஏறுவேன்...
முடியாது, நான்தான்...
என்ன சத்தம் அது? யார் அங்கே?
பாலன் புதர்களைக் கடந்து அந்தப் பக்கம் செல்ல...
குள்ளர்களா! இப்படி சண்டை போட்டால் அக்கம்மா கிழவி உங்களைக் கழுதையாக மாற்றி விடுவாளே!


என்பேரில் தப்பில்லை. இவன்தான் பிடிவாதம் செய்கிறான். இந்தக் குதிரைமீது இத்தனை நேரம் சவாரி செய்தான். இப்போது என் முறை. தரமாட்டேன் என்கிறான்.
இந்தப் பொம்மைக் குதிரைக்காகவா சண்டை?
இது மாயக் குதிரை! இதன் மீது உட்கார்ந்து கொண்டு, 'நல்ல குதிரை நீ, நான் சொல்லுமிடம் செல்!' என்று கூறினால், நாம் நினைத்த இடத்துக்குப் பறந்து போகும்!
பாலன் தந்திரமாக...
நிஜமாகவா சொல்கிறீர்கள்? நம்ப முடியவில்லையே?
என்னைப் பொய்யன் என்கிறாயா? வேணுமானால் நீயே பரீட்சித்துப் பார்!
பாலன் குதிரை மீது ஏறி...
நல்ல குதிரை நீ, நான் சொல்லு-மிடம் செல்... கண்ணாடி மலை உச்சி!
குதிரை உடனே பாலனைச் சுமந்து கொண்டு வானில் பறக்க ஆரம்பித்தது...
அதோ! கண்ணாடி மலை உச்சியில் ஒரு வாசல்....!


மலைவாசல் வழியே குதிரை உள்ளே சென்று இறங்கியது...
அதோ, ஒரு மாளிகை.... மாலினியைக் காண்பேனா?
மாளிகையின் கதவைப் பாலன் தட்ட...
யார் நீ? எப்படி இங்கு வந்தாய்?
மாயக்குதிரை ஏறி வந்தேன்... இன்று இரவு உணவும் படுக்க இடமும் தரமுடியுமா?
ஹும்.. ஹும்.. நான் சொல்கிற வேலைகளையெல்லாம் செய்வாயா?
ஓ! எவ்வளவு கஷ்டமானாலும் தயங்க மாட்டேன்!
கிழவி பாலனுக்கு உணவு அளித்தாள்...
சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கு, காலையில் வேலை செய்யலாம்.
மறுநாள் காலை, பாலனை ஒரு ஏரிக்கரைக்கு அழைத்துப் போனாள் கிழவி...
இந்த ஏரிநீர் முழுவதையும் இருட்டுவதற்குள் இறைக்க வேண்டும். இந்தா, குவளை!


கிழவி மாளிகைக்குத் திரும்பிவிட்ட பிறகு...
டமார சத்தம் கேட்டு ராக்ஷஸன் வர...
இந்த ஏரி நீரை இன்று இரவுக்குள் இறைக்க வேண்டும்...
ஐயோ! அது என்னால் கூட முடியாத காரியம்!
அப்போது...
அட, மாலினி
நீ வந்திருப்பதை நேற்று இரவே கவனித்தேன். உனக்கு உதவ வந்தேன்...
மாலினி! என்ன முயன்றும் ஏரி நீரை எங்களால் இறைக்க முடியவில்லை...
கவலைப்படாதே! இருவரும் பழங்கள் சாப்பிடுங்கள்... நான் உதவுகிறேன்.
மாலினி தன் விரலிலிருந்த மோதிரத்தைத் தடவியபடி...
நீரே! பொங்கி எழு! அருவியாகி, ஆறாக ஓடு! பல்லாயிரம் மக்களின் வாழ்வை வளப்படுத்து...!


மறுநாள் காலை வந்து ஏரியைப் பார்த்த கிழவி திடுக்கிட்டாள்.
அட! ஆச்சரியமாயிருக்கே! சரி சரி, அது சுலபமான வேலை. இன்று அதைவிடச் சுலபமான வேலை தருகிறேன்...!
இந்தக் காட்டில் பல ஆண்டுகளாக விழுந்து கிடக்கும் சுள்ளிகளையும், முறிந்து விழுந்து காய்ந்து போன மரக்கிளைகளையும் சேகரித்து மலைபோல் குவிக்க வேண்டும்.
கிழவி தலை மறைந்ததும்...
டமடமடம்
டமடமடம்
ராக்ஷஸன் வந்ததும் பாலன் நடந்ததைக் கூற...
ஐய்யோ! கிழவியின் கட்டளையை ஒரே நாளில் நிறைவேற்றுவது சாத்தியமே இல்லை. காட்டின் கால் -வாசிப் பகுதியைக்கூடத் துப்புரவு செய்ய முடியாது...
...
அப்போது...
நான் மாலினியின் தங்கை சாலினி. நீங்கள் இருவரும் சாப்பிடுங்கள். நான் உதவு -கிறேன்...


சாலினி தன் கழுத்திலிருந்து முத்துமாலையைக் கழற்றி, கானகத்தை நோக்கி ஆட்டிய வாறு...
புயலே, புயலே! உருவாகு! சுள்ளிகள், கிளைகளைத் திரட்டி மலைபோல் குவித்து விடு!
ஒரு புயல் உருவாகி கானகத்தினூடே பாய...
உய்ய்...
ஹோ....
அட, கானகத்தின் தரை பெருக்கித் துடைத்தது போல் ஆகிவிட்டதே!
அதோ பாருங்கள்!
சாலினி சுட்டிக்காட்டிய திசையில்...
மரக்கிளைகளின் மலை!
சாலினி, உனக்கு எப்படி நன்றி கூறுவேன்!
மறுநாள் காலை வந்த கிழவி...
அட! பலே கெட்டிக்காரனாய் இருக்கிறாயே! இன்று அதைவிடச் சுலபமான வேலை தருகிறேன். இது வெறும் கண்ணாடி மலைதான். எளிதாக உடைத்துத் தகர்த்து விடு!


கிழவி சென்றுவிட்டதும்...
டமடம டம்டம்...
டமடமடம்டம்.
ராக்ஷஸனே, சீக்கிரம் வா!
ராக்ஷஸன் வந்து விஸ்வரூபமெடுத்ததும்...
தொலைந்தோம்! கண்ணாடி மலையை உடைத்தால் நம் மீதே சரியும். கண்ணாடிச் சில்லுகள் உடலெங்கும் குத்திக் காயப்படுத்தும். நம்மைக் கொன்றுவிடவே இந்தச் சூழ்ச்சி!
அப்போது...
நீ சாலினியின் தங்கை நளினி -யாகத்தான் இருக்க வேண்டும்...
ஆமாம், நீங்கள் இப்படி ஒதுங்கி உட்கார்ந்து சாப்பிடுங்கள்...
நளினி தன் பாதச் சிலம்பை எடுத்துக் குலுக்கி....
வண்ணம் பலசிந்தும் கண்ணாடி மலையே! கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போ!
ஒரு புகை மூட்டம் எழ...
அடடே! கண்ணாடி மலை ஆவியாகிறதே!
அண்ணா! இந்தச் சிலம்பை வைத்துக் கொள். மாலையில் கிழவி வரும் போது அவள் மீது வீசு!


மாலையில்... கண்ணாடி மலை மறைந்ததைக் கண்ட மாயக் கிழவி வியந்து...
அடேய்! இதை நீயாகவே சாதிக்கவில்லை. உதவியது யார்? சொல்லிவிடு!
குந்தினி தந்த சிலம்பைக் கிழவி மீது விட்டெறிந்தான் பாலன்...
இதுதான் உன் கேள்விக்குப் பதில்!
சகோதரிகள் மூவரும் தோன்ற...
மாயக் கிழவி மறைந்தே போனாளே!
அண்ணா! உன் துணிச்சல் தான் அத்தனையையும் சாதித்தது. நீ பயந்திருந்தால் எங்களுக்கு விடுதலையே கிடைத்திராது.
அப்போது மூன்று இளவரசர்கள் தோன்ற...
நீங்கள் யார்?
இளவரசிகளை மீட்டுப் போக வந்த மூன்று தேசங்களின் ராஜ குமாரர்கள். நாங்கள் பயந்ததால் கிழவி சுலபமாக எங்களை ராக்ஷஸர்களாக மாற்றிவிட்டாள்!
எல்லோரும் ஊர்போல நாடு திரும்ப, இளவரசிகளுக்கும் இளவரசர்களுக்கும் கல்யாணம்... டமார பாலனின் ஆனந்த நடனம்...
டம் டம் டம் டம் டமாரமாம்! டமாரப் பெருமை அபாரமாம்!

ஒரு மரத்துப் பறவைகள் 13

வேகமாகக் கீழே இறங்கி வந்த சந்தோஷ், மீனா போய்க் கொண்டிருப்பதையும், பவித்ரா அவளையே பார்த்துக் கொண்டு வாட்டத்தோடு நின்று கொண்டிருப்பதையும், உதயா கமலம்மாவிடம் சமையலறைப் பக்கம் நின்று ஏதோ விசாரித்துக் கொண்டிருப்பதையும் கண்டு குழம்பினான்.

"பவித்ரா! என்னம்மா... ஏன் மீனா இதுக்குள்ளேயே போயிட்டா?" என்று கேட்டான்.

"எல்லாம் இந்த அம்மா பண்ற கூத்துதான்!" என்று கையில் டிஃபன் தட்டோடு கீழே அமர்ந்து விட்டாள் பவித்ரா.

சந்தோஷ் ஏதோ சொல்வதற்குள், "நீ போடி!" என்று கமலம்மாவிடம் சொல்லி விட்டுப் பவித்ராவிடம் கோபமாக வந்து நின்றாள் உதயா.

"ஏண்டி எனக்குக் கோபம் வராது? அந்த மீனா யாரு?" என்று கத்தினாள் உதயா.

"யாரு... என் சிநேகிதி! உனக்கு அவள் கறுப்பா... ஏழையா... அல்பமாத் தோணலாம். எனக்கு அவள் உயிர்ச் சிநேகிதி. அவள் குணம்... ஒழுக்கம் இதெல்லாம் உனக்குத் தெரியுமா? நீ அப்படி ஒரு பெண்ணைப் பார்த்திருக்கவே மாட்டே...! நான் அவளோடு பழகறதைப் பெருமையாகவே நினைக்கறேன்" என்று பொரிந்து தள்ளினாள் பவித்ரா.

"என்ன நியாயம்டி... உன் நியாயம்...? நம்ம வீட்டுலே வேலை செய்யற கமலம்மா மகள் மீனாவை நீ கூட்டிக்கிட்டு வந்து, சரிக்குச் சரியா சோஃபாவிலே உட்கார வச்சிச் சாப்பிட்டுக்கிட்டிருப்பே. அது தெரிஞ்சும் நான் சகிச்சுக்கிட்டிருக்கணுமா?" என்று உச்சஸ்தாயியில் கூவினாள் உதயா.

கமலம்மாள் கைகளைத் துடைத்துக் கொண்டு சமையல் அறையிலிருந்து வெளியே வந்து நின்றாள். அவள் முகம் கண்டிப் போயிருந்தது.

"உங்களையெல்லாம் வைக்கற இடத்திலே வைக்கணும். எஜமானி பெண்ணும் வேலைக்காரி பெண்ணும் ஒரே பள்ளியிலே படிச்சா.. இப்படியும் நடக்கும். இதுக்கு மேலேயும் நடக்கும்" என்று கொதித்தாள் உதயா.

"நல்ல பள்ளிக்கூடமின்னு கேள்விப்பட்டுதாம்மா. அங்கே என் பொண்ணைச் சேர்த்து, கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கிறேன். நம்ம பவித்ரா அந்தப் பொண்ணோடு பழகறது எனக்குத் தெரியாதும்மா..."

"சரி சரி... இனிமே பழக விடாதே. அப்புறம் இனி உனக்கு இங்கே வேலையிருக்காது"— கண்டிப்பான குரலில் கூறினாள் உதயா. அதுவரை அமைதியாக இருந்த பவித்ரா, மேலும் சகித்துக் கொள்ள முடியாமல், "சும்மாயிரும்மா! என்ன படிச்சே நீ? உன் படிப்பும் உன் பணமும்! பண்பு இருக்க வேண்டாமா? அது நிறைய இருக்கு அவங்களிடத்திலே... அந்த வகையிலே நீ ஏழைதான்... பரம ஏழை... தெரிஞ்சுக்கோ" என்று சினந்து சீறினாள்.

"பவித்ரா! நீ மேலே வா. உன்னோடு கொஞ்சம் பேசணும்!" என்று அழைத்தான் சந்தோஷ்.

"சந்தோஷ்! நல்லாச் சொல்லு. நீ சொன்னாலாவது அவள் கேட்கிறாளா பார்ப்போம். தராதரம் தெரியாமல் பழக ஆரம்பிச்சிடறா. தரித்திரங்கள்!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் உதயா.

"மூடும்மா வாயை!" என்று பவித்ரா சொல்லி வாயை மூடுமுன் 'பளீர்' என்று ஓர் அறை விழுந்தது அவள் கன்னத்தில். அறைந்தவள் அம்மாதான்!

"ஹௌ டேர்! யூ சில்லி கூஸ்! அந்தப் பஞ்சைப் பராரிங்களுக்காக



நீ மிஞ்சி மிஞ்சிப் பேசறியா? அந்த டர்ட்டி பீபுள் சகவாசமே எனக்கு வேண்டாம். தொலைச்சிக் கட்ட றேன்...'' என்று ஆவேசம் வந்தவளைப் போல் கூவினாள் உதயா. பவித்ராவின் கண்கள் மழையென நீரைக் கொட்டின.

''எ ஜமானியம்மா! பாவர்ட்டி இஸ் நாட் எ வீக்னஸ் இன் லைஃப். வறுமையை ஒரு பலம் வாய்ந்த பலஹீனமாக நான் நினைச்சிருந்தால், என் பெண் மீனாவை நான் அந்தப் பள்ளியிலே சேர்த்திருக்க மாட்டேன். படிச்சதை எல்லாம் மூட்டை கட்டி வச்சிட்டு, பத்துப் பாத்திரம் தேய்ச்சிக்கிட்டு வாழ்க்கையிலே எதிர் நீச்சல் போட்டுக்கிட்டிருக்க மாட்டேன். அம்மா! நானும் கான்வென்ட்டில் படிச்சவதான். எனக்கும் இங்கிலீஷ்லே நல்லாப் பேச வரும். பெரிய ஆஃபீஸிலே வேலை செஞ்சிச் சம்பாரிச்சிக்கிட்டிருந்தவதான். எல்லாம் எப்படியோ போச்சு!''

கமலம்மாளின் கண்களில், கண்ணீர் 'குபுகுபு'வெனப் பெருகியது. துக்கம் பொங்கியது.

கமலம்மாள் மீனாவின் அம்மாவா? நன்றாகக் கான்வென்டில் படித்திருந்தும் சமையல் வேலையும் வீட்டு வேலையும் செய்து வாழ வேண்டிய நிலைமை எப்படி வந்திருக்கும்? குழம்பினாள்... குமுறினாள் பவித்ரா.

''உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்பது இதற்குத்தாம்மா!'' என்றாள் பவித்ரா.

''பவித்ரா! அம்மாவைக் கோபிக்காதேம்மா. ஒருவேளை நான் கூட உன் அம்மாவைப் போல் வசதியாக, மற்றவர்கள் கஷ்டமே தெரியாமல் வாழ்ந்து கொண்டிருந்தால் இப்படித்தான் பேசுவேனோ, என்னவோ!'' என்று கூறி விட்டு, உதயாவின் பக்கம் திரும்பி, ''அம்மா! எங்களையெல்லாம் மன்னிச்சிடுங்க. இனிமேல் எனக்கு இங்கே வேலை இல்லை. பரவாயில்லை. காட் இஸ் கிரேட்

''நான் வர்றேம்மா!'' என்று புறப்பட்டாள் கமலம்மாள்.

பவித்ரா அவள் முன்பு ஓடி வழி மறித்தாள். சந்தோஷும் அவள் பக்கத்தில் போய் நின்றான்.

சிறிது நேரம் வரை ஏதுமே செய்யத் தோன்றாமல் திகைத்துப் போய் நின்றிருந்த உதயா தன் அறைக்குள் போய் பலத்த சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள்.

''காட் ப்ளஸ் யூ சில்ட்ரன். அம்மாவைக் கோவிச்சிக்காதீங்க. என் பெண் மீனா நான் என்ன சொன்னாலும் கோபிச்சுக்கவே மாட்டா. என் சொல்லைத் தட்டவே மாட்டா. பவித்ரா! நீ இனிமேல் மீனா உன் சிநேகிதி என்ற நினைப்பே இல்லாமல் இருக்கணும். நானும் அவகிட்டே சொல்லி வைக்கறேன். வேலைக்காரி மகள் என்று தெரிந்த பிறகும் நீங்க ரெண்டு பேரும் சிநேகமா இருக்கிறதை அம்மா தாங்கிக்க மாட்டாங்க. அது மட்டுமல்ல... எனக்காக நீ ஒரு காரியம் செய்யணும்'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டாள் கமலம்மாள்.

''என்னங்கம்மா... சொல்லுங்க!'' என்றாள் பவித்ரா.

''என் மகள் மீனா... உங்க வீட்டுச் சமையல்காரி கமலம்மா மகள் என்ற சங்கதியே உன் ஸ்கூலுக்குத் தெரிய வேண்டாம்மா. தெரிஞ்சா, கூடப் படிக்கிற மற்ற பெண்களும் கிண்டலும் கேலியுமா உங்க ரெண்டு பேரையுமே பேசுவாங்க. கவர்ன்மெண்ட் பரீட்சை எழுதப் போற நேரத்திலே உங்க மனசிலே இப்படியெல்லாம் குழப்பமும் வேதனையும் இருக்கக் கூடாது. ப்ளீஸ் நான்

பூவை அமுதன்

சொன்னது ஞாபகம் இருக்கட்டும்'' என்று சொல்லி விட்டு வேகமாகப் போய் விட்டாள் கமலம்மாள்.

பவித்ராவும் சந்தோஷும் வாயில் வரை வந்து நின்று. கமலம்மாள் சென்று கொண்டிருப்பதை வருத்தத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அம்மா இப்படி எல்லாம் செய்யலாமா? யார் செய்தாலும் தப்பு தப்புத் தானே?'' என்று கேட்டாள் பவித்ரா.

''அம்மாவின் சுபாவம்... எதையும் யோசிக்காமல் சட்டென்று சொல்லி விடுவது. தப்பாகச் சொன்னது தெரிந்த போதும் கூட. தான் பேசியதைவிட்டுக்கொடுத்திடமாட்டாங்க. இது அப்பாவுக்குத் தெரியும். அதனாலே அப்பா தான் விட்டுக் கொடுப்பார். எனக்கும் அதைத்தான் சொன்னார்... ரெண்டு கையும் மோதினால் தானே சத்தம்! ஒண்ணு விலகியாச்சின்னா... மோதலே இருக்காதே! அதுதான் அம்மா சத்தம் போட்டால் அப்பா அடங்கிப் போவார்!''

''அப்பா சத்தம். போட்டால் அம்மா அடங்கணுமே! அப்பாதான் சத்தமே போடறது இல்லையே!''

அதற்கும் சிரித்தான் சந்தோஷ்.

''நீ இப்பவே, அப்பா மாதிரி ஆகிக் கொண்டிருக்கே...''

''ஏன் தாயைப் போலத்தான் பிள்ளையிருக்கணுமோ? தந்தையைப் போல இருக்கக் கூடாதா? தந்தை என்று சொன்னால் அதில் தாயும் அடக்கம். திருவள்ளுவர் கூட மகன் என்றும் இவன் தந்தை என்றும் குறிப்பிடுகிறார். மகனையும தாயையும் கூடச் சேர்த்துச் சொல்வதாகத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றான் சந்தோஷ்.

''வெரிகுட் சந்தோஷ்! இங்கிலீஷ் மீடியத்திலே நீ படிச்சவனாயிருந்தாலும் குறளிலிருந்ததெல்லாம் 'கொட்டேஷன்' கொடுக்கறியே'' என்று சிரித்தாள் பவித்ரா.

''எந்த மீடியத்திலே படித்தால் என்ன...? சொந்தத் தாய் மொழியை விட்டுடுவாங்களா? தாய் மொழிக்குத்தான் தலைமையிடம்... மற்றதெல்லாம் அதற்குப் பின்தான்'' — சந்தோஷ் தொடர்ந்தான்.

''பலே! எங்க காலேஜிலே ஸ்டிரைக்! அதிலே நியாயம் இருக்கோ இல்லையோ? அநியாயமா... காலம் வீணாப் போகுது. படிப்புப் பாழாப் போகுது. கடைசியிலே பரீட்சையையே தள்ளி வைக்கச் சொல்லி ஒரு போராட்டம் வரும்...! இதெல்லாம் நம்மைப் பாதிக்காது. ஆனால்...?''

''ஆமாம்... வசதியிருக்கிறவர்களைப் பாதிக்கப் போவதில்லை. ஆனால், ஆசை ஆசையாப் படிக்கணுமின்னு காலேஜிலே சேர்ந்த ஏழை வீட்டுப் பிள்ளைகளை எவ்வளவு தூரம் பாதிக்கும்!'' என்று பெரிய மனுஷியைப் போல் பேசினாள் பவித்ரா.

''அதைத்தான் சொல்ல வந்தேன். நான் மாலை நேரத்திலே, முடியறபோதெல்லாம் குடிசைப் பகுதிகளுக்குப்போய், அங்கே சில பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறதை வழக்கமா வச்சிருக்கேன்.''

''வெரிகுட் அண்ணா!'' என்று சந்தோஷத்தால் அவன் கையை உதறி விட்டு ஒரு துள்ளல் துள்ளினாள் பவித்ரா.

''ஹாஸ்டலிலிருந்து வெளியே போகச் சொல்லி விட்டதனால நான் எங்கே தங்கியிருந்து கொண்டு அந்த ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க முடியும்? அதை நினைத்தால் கஷ்டமாயிருக்கு. பல பேருக்கு இப்போ பரீட்சை நேரம்.''

தன் அண்ணனின் இளகிய மனத்தையறிந்து தனக்குள் பூரித்துப் போனாள் பவித்ரா.

ஏதோ கார் வரும் சப்தம் கேட்டது. வந்தது ஒரு டாக்ஸி.

அவர்கள் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, திவ்யாவும் அவள் அம்மாவும் டாக்ஸியிலிருந்து இறங்கி வந்தார்கள்.

''திவ்யா! வா வா! ஆன்ட்டி வாங்க வாங்க!'' என்று அழைத்துக் கொண்டு எதிரே ஓடினாள் பவித்ரா.

''வாங்க ஆன்ட்டி! வாம்மா வாயாடி!'' என்று அவர்களை வரவேற்றான் சந்தோஷ்.

''என்னப்பா... நீ எப்போ வந்தே? காலேஜ் லீவா?'' என்று கேட்டுக்



கொண்டே ஹாலுக்குள் நுழைந்தாள் திவ்யாவின் தாய் ஹேமா.

அந்தக் குரலைக் கேட்டுத் தன் அறையிலிருந்து வெளியே வந்து வரவேற்றாள் உதயா.

''ரொம்ப தூரம் வந்திருக்கீங்க...?'' என்று சிரித்தாள் உதயா.

''ரொம்ப தூரம் எங்கே? பக்கத்திலேதானே! இதே ஊரிலே இருக்கோம். அடிக்கடி பார்த்துக் கொள்ளத்தான் முடியறதில்லே'' என்றாள் புன்னகையோடு ஹேமா.

''நம்ம பெண்ணுங்க பார்த்துக்கறாங்க இல்லே? ஒரே ஸ்கூல்... ஒரே கிளாஸ்...'' என்றாள் உதயா.

''இருந்தும் என்ன...? உன் பெண்ணுதான் என் பொண்ணோட ஒட்டறதே இல்லையாமே...?'' என்றாள் ஹேமா.

''ஆமாம்... நான் என்ன ஐ.எஸ்.ஐ. முத்திரை பொறித்த பிசினா என்ன?'' என்று சிரித்தாள் பவித்ரா.

''நீ என்னமோ திவ்யாவை விட மத்தவங்கதான் ஒசத்தி மாதிரி கண்ட பொண்ணுங்களோடு அப்படியே ஒட்டிக்கிறியாம். இவளைக் கண்டாலே... என்னமோ தீண்டத்தகாதவ மாதிரி எண்ணிக்கிட்டு எட்டியெட்டிப் போறியாமே...''

''அப்படியெல்லாம் இல்லை ஆண்ட்டி. திவ்யா ஒரு வாயாடி. தூக்கி எரிஞ்சிப் பேசிடுவா. இது உங்களுக்கே தெரியுமே!'' என்று குழைந்தாள் பவித்ரா.

''என்ன தெரிஞ்சதோ? எனக்குத் தெரியறது இருக்கட்டும், உனக்கு ஒண்ணு தெரியணும். உன்னாலே இப்போ, உங்க ஹெட்மிஸ்ட்ரஸ் மிஸஸ்.ஜெயலட்சுமிகிருஷ்ணமூர்த்தி வேலையை விட்டுட்டுப் போகப் போறாங்க!''

''என்னது? எங்க ஹெட்மிஸ்ட்ரஸா?''— அதிர்ந்து போய்க் கேட்டாள் பவித்ரா.

''ஆமாம். உன்னாலேதான். நீ ஏதோ பெரிய ஜான்ஸி ராணி மாதிரி போராட்டம் கீராட்டமுன்னு ஆரம்பிச்சிட்டியாமே... அதனாலேதான்...''

''புரியும்படி சொல்லுங்க ஆன்ட்டி...!''

> ''என்ன இது! நம்ம கிளினிக் முன்னாடி ஏராளமா நாய்ங்க நிக்குது!''
>
> ''எல்லாவித நோய்க்கும் மருந்து தரப்படும்னு எழுதறதுக்குப் பதிலா, 'எல்லாவித நாய்க்கும் மருந்து தரப்படும்'னு போர்டு போட்டிருக்கீங்களே!''
>
> — சா. இரா. மணி, வந்தவாசி.

''என்ன புரியணும் உனக்கு? நீ மற்ற ஸ்கூல் பிள்ளைகளையெல்லாம் கூட்டிக்கிட்டு அந்தத் தலைவரை வழி மறிச்சது. சைக்கிள் விழாவை நடக்க ஒட்டாமே பண்ணது. அதுவுமில்லாமே அதுக்கு முன்னாடியே கூட நீ கல்வி அதிகாரி டி. ஈ. ஓ. முன்னாடியே எல்லாரும் எதிரேயிருக்கப்பவே, பள்ளிக்கூடத்திலே இது அநியாயம்.. இது அக்ரமம்ம்...' அது சரியில்லே... இது சரியில்லே... அது வேணும்... இது வேணுமின்னு பேசினியாமே! இதெல்லாம் உனக்குத் தேவையா? அதிகப்பிரசங்கித்தனமில்லே?'' என்று சற்றுச் சூடாகவே கேட்டாள் ஹேமா.

''நான் ஒண்ணும் தப்பாப் பேசிடல்லே ஆன்ட்டி!'' என்றாள் பவித்ரா.


''உன் தப்பு உனக்குத் தெரியாதும்மா. பெரியவங்க சொன்னா எடுத்துக்கணும்...'' என்றாள் உதயா.

''யார் சொன்னாலும் நல்லதாயிருந்தால், நான் நிச்சயமா எடுத்துக்குவேன். சொன்னவங்க யாருன்னு பார்க்கமாட்டேன். சொல்ற விஷயம் என்னன்னுதான் பார்ப்பேன். இது என் பாலிசி'' என்றாள் பவித்ரா அழுத்தமாக.

''இதுக்குள்ளே உனக்கென்ன... பாலிசி கீலிசின்னு பெரிய மனுஷித்தனம்...'' என்று ஆரம்பித்தாள் ஹேமா. சந்தோஷ் அந்தப் பேச்சையே பிடிக்காதவன் போல் முகத்தைச் சுளித்துக் கொண்டு தோட்டத்துப் பக்கம் போய் விட்டான்.

''திவ்யா... வாடி என் ரூமுக்குப் போகலாம்'' என்று அழைத்தாள் பவித்ரா. திவ்யா அவள் தாயின் முகத்தைப் பார்த்தாள்.

''இரு பவித்ரா... போயிடாதே.



முக்கியமான விஷயம். கேள்விப்பட்டுச் சொல்ல வந்தேன். அதை என்னன்னு கூட நீ தெரிஞ்சுக்க விரும்பலையா? குற்றமுள்ள நெஞ்சு... அதான் காதிலே போட்டுக்காமே போயிடணுங்கிறே'' என்று கேலி கலந்த குரலில் பேசினாள் ஹேமா.

''என்ன விஷயம்... சொல்லுங்க ஹேமா'' என்றாள் உதயா.

''பள்ளிக்கூடத்திலே பவித்ரா இது மாதிரியெல்லாம் நடந்துக்கறது மேனேஜ்மெண்ட்டாருக்குப் புடிக்கல்லே. இவளைச் சஸ்பெண்ட் பண்ணச் சொன்னாங்களாம். முதல்லே... பள்ளிக்கூடத்தை விட்டே டி. சி. கொடுக்கணுமின்னு சொன்னாங்களாம். ஹெட்மிஸ்ட்ரஸ் ஜெயலட்சுமி கிருஷ்ணமூர்த்தி சம்மதிக்கலையாம். அப்புறம்தாம் ஒரு வாரத்துக்குச் சஸ்பெண்ட்டாவது பண்ணுங்கன்னு கரஸ்பாண்டென்டும் சேர்மெனும் கேட்டிருக்காங்க. அதுக்கும் ஒத்துக்கலையாம் மிஸஸ் ஜெயலட்சுமி. ரொம்பவும் வற்புறுத்தியிருக்காங்க. கண்டிப்பா முடியாதுன்னிட்டாங்களாம். அதனாலே கடைசியிலே வேலையையே ராஜினாமா பண்ணிட்டுப் போயிடறதா ஹெட்மிஸ்ட்ரஸ் முடிவு எடுத்திருக்காங்களாம்...'' என்று மூச்சிரைக்கப் பேசினாள் ஹேமா.

''இதெல்லாம் எனக்குத் தெரியாதே...!'' என்று வருத்தமாகச் சொன்னாள் பவித்ரா.

''நீ பெரிய மனுஷி... உனக்கு இதெல்லாம் தெரியணுமா? உன்னாலே ஒரு நல்ல ஹெட்மிஸ்ட்ரஸ் வேலையை விடும்படியா ஆயிடுச்சே! இது நல்லதா? யோசனைப் பண்ணிப் பாரு!'' என்று எரிந்து விழுந்தாள் ஹேமா.

''ஸ்கூல்லே மாணவிகள் யாருக்குமே இது தெரியாது போல! அந்தக் கரஸ்பாண்டென்டுக்கு வேண்டியவங்க வந்து அம்மாகிட்டே சொல்லியிருக்காங்க. நாளைக்கு நம்ம ஸ்கூல்லே இலக்கிய மன்றக் கூட்டம் இருக்கு இல்லே, நம்ம ஹெட்மிஸ்ட்ரஸ்தானே தலைமை..? அப்போ... நம்மகிட்டே இந்த அதிர்ச்சியான விஷயத்தை அறிவிக்கப் போறாங்களாம். இதை நம்ம ஓவிய ஆசிரியை அம்மாவிடம் சொல்லியிருக்காங்க. அம்மாவும் ஓவிய ஆசிரியையும் ஒண்ணாப் படிச்சவங்க'' என்றாள் திவ்யா.


பவித்ராவுக்கு விஷயம் அப்போது தான் தெளிவாகப் புரிந்தது. தமிழாசிரியை எழில்வதனி குறிப்பிட்ட அதிர்ச்சி தரும் சேதி இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். அவளுக்குத் தாங்க முடியாத வேதனையாகி விட்டது. அழுகையே வந்து விடும் போலிருந்தது. பள்ளி நிர்வாகிகள் எப்படிப் பட்டவர்கள் என்பது அவளுக்குத் தெளிவாக விளங்கியது.

''வேண்டுமானால் எனக்கு டி. சி. தரட்டும். பள்ளிக்கூடத்தை விட்டே அனுப்பிடட்டும். அல்லது சஸ்பெண்ட் பண்ணட்டும். ஒரு நல்ல ஹெட்மிஸ்ட்ரஸை அநியாயமா வேதனைப்படுத்துவது என்ன நியாயம்? இதை நான் இப்படியே விட்டு விட மாட்டேன்'' என்று அழுது கொண்டே மாடிக்குத் தன் அறைக்கு ஓடினாள் பவித்ரா.

அவள் அறையிலிருந்து விம்மியழும் சப்தம் கேட்டு, சந்தோஷ் அங்கே சென்று பார்த்தான். படுக்கையில் குப்புற விழுந்து அழுது கொண்டிருந்த பவித்ராவை அன்போடு கேட்டு, விஷயத்தைத் தெரிந்து கொண்டான் அவன்.

''பவி! உன் பள்ளியிலே பெற்றோர் ஆசிரியர் சங்கம் இருக்கு இல்லையா? நான் ஒரு வழி சொல்கிறேன். கவலைப்படாதே'' என்று அவளிடம் ஏதோ மெதுவாகக் கூறினான். அதைக் கேட்கக் கேட்க, அவள் முகத்தில் மலர்ச்சி கூடியது.

(தொடரும்)


சிரிப்...
தாத்தாவை முதியோர் கல்வியில் சேர்த்தது பெரிய தப்பாப் போச்சு!
ஏண்டா?
அடிக்கடி பாட விஷயமாச் சந்தேகம் கேட்டுத் தொந்தரவு பண்றார்!
எஸ். நாகராஜன் தஞ்சாவூர்
பாப்பா! அழுகையை நிறுத்தினா பத்து பைசா தருவேன்!
ஊஹும். ஒரு ரூபா தாங்க!
எதை வெச்சு எங்க வகுப்பில் நாற்பது பேர் படிக்கிறாங்கன்னு கரெக்டா சொன்னீங்க?
நீ வாங்கியிருக்கிற ரேங்கை வெச்சுதான்!
மருந்து சாப்பிட எட்டணா கொடுத்தேனே, என்ன பண்ணினே?
நாலணாவுக்கு மிட்டாய் வாங்கினேன். எனக்காகக் கசப்பு மருந்து சாப்பிட்ட அந்தப் பயல் சோமுவுக்கு நாலணா அழுதேன்!
என். நீலா கொட்டாரம்
"காப்பி" கெடுதலானது. கரெக்டா?
கரெக்ட் தான், சார்.
எப்படிச் சொல்றே?
பலமுறை அடிச்சி மாட்டிகிட்டிருக்கேனே!
ஏம்மா சட்னி அரைக்கப் போறியோ?
ஏன் கேட்கிறே?
என்னாச்சும் 'ஹெல்ப்' பண்ணணுமா?
ஒண்ணும் வேண்டாம். 'தேங்காய் துருவல்' கொஞ்சம் தான் இருக்கு...
க. இராமலிங்கம் புதும்பேட்டை
செல்வம்



உதவ ஓடிவா!

சுரேஷிற்கும் அவன் தங்கை ரமாவிற்கும் பிராணிகளிடத்தில் பிரியம் அதிகம். ஒரு எறும்பிற்குக் கூடத் தீங்கு செய்ய மாட்டார்கள். துன்பப்படும் ஏதாவது பிராணியையோ, இறந்த பிராணியையோ பார்த்து விட்டால் அன்று சரியாகச் சாப்பிட மாட்டார்கள். படிப்பிலோ இருவரும் அவரவர் வகுப்பில் முதலிடத்தில் இருந்தார்கள்.

குழந்தைகளுக்காக வீட்டில் ஏதாவது செல்லப் பிராணிகளை வளர்க்கலாமா என்று யோசித்தனர் சுரேஷின் பெற்றோர்.

''கலர் மீன் வளர்க்கலாம், அம்மா!'' என்றாள் ரமா.

''ஒரு வெள்ளை நாய்க்குட்டி வளர்க்கலாமே!'' என்றான் சுரேஷ்.

குழந்தைகள் கேட்ட இரண்டையுமே வாங்கி வந்து விட்டார் சுரேஷின் அப்பா. குழந்தைகளுக்கு அளவிலா மகிழ்ச்சி.

சுரேஷும், ரமாவும் வெள்ளை நாய்க்குட்டிக்கு ''ஜிம்மி'' என்றும் கலர் மீனுக்கு ''கிட்டி'' என்றும் பெயர் வைத்தார்கள்.

அவை இரண்டையும் அவர்களே கவனித்துக் கொண்டனர்.

ஜிம்மி மிகவும் அறிவுள்ள நாய். வீடு முழுவதும் சுற்றும். ஆனால், ஒரு இடத்தையும் அசுத்தப்படுத்தாது. அயல் மனிதர் யாராவது வந்தால் மட்டும் பலமாகக் குரைக்கும்.

கிட்டியை மாடி ஹாலில் ஒரு மேசை மீது திறந்த கண்ணாடித் தொட்டியில் விட்டிருந்தனர். அதில் சுற்றிச் சுற்றி நீந்திக் கொண்டிருக்கும். தொட்டியில் தண்ணீர் குறையாது கவனித்துக் கொள்வான் சுரேஷ். தினமும் காலையில் எழுந்தவுடன் பழைய நீரைக் கொட்டி விட்டுப் புதிய தண்ணீர் விடுவான். நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் திடீரென்று ஜிம்மிக்குக் கிட்டியுடன் பேச வேண்டுமென்று தோன்றியது. கிட்டியின் மேசைக்

கமலா நாகராஜன்



கருகில் போய் நின்று ''ஹலோ!'' என்றது.

''ஓ, ஜிம்மியா? வா, வா!'' என்றது கிட்டி. மேலும் ''நான் உன் குரலைக் கேட்டிருக்கிறேன். ஆனால் உன்னைப் பார்த்ததில்லை. அருகில் வாயேன்,'' என்றது.

ஜிம்மி மேசை மீது தாவி ஏறிக் கொண்டது. கிட்டியும், ஜிம்மியும் ஒன்றையொன்று நன்றாகப் பார்த்துக் கொண்டன.

''நீ மிகவும் அழகாய் இருக்கிறாய்,'' என்றது கிட்டி.

''நீயும்தான். நான் வெள்ளை நிறம். நீயோ பல வர்ணங்களுடன் பிரகாசிக்கிறாய்,'' என்றது ஜிம்மி.

''நீ வீடு முழுவதும் சுற்றுகின்றாய். நான் இந்தத் தொட்டியிலேயே சுற்றிச் சுற்றி வருகிறேன்!'' என்றது கிட்டி.

''வெளியில் வாயேன்! விளையாடலாம்,'' என்றது ஜிம்மி.

''தண்ணீரை விட்டு வெளியே வந்தால் நான் இறந்து விடுவேன். இந்தத் தொட்டிக்குள்தான் என் ஆட்டமெல்லாம்! அது சரி, நீ ஏன் உன் வாலை அடிக்கடி ஆட்டிக் கொண்டிருக்கிறாய்?'' என்றது கிட்டி.

''நான் மகிழ்ச்சியடையும் போது வாலை ஆட்டுவேன். இப்போது உன்னோடு இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. அதனால்தான் வாலாட்டுகிறேன். ஆமாம், உன்னுடைய வாலும்தான் இப்பொழுது ஆடிக் கொண்டிருக்கிறது. உனக்கும் மகிழ்ச்சிதானே?'' என்றது ஜிம்மி.

''மிகவும் மகிழ்ச்சிதான்! ஆனால் அதற்காக நான் வாலாட்டவில்லை. என்னுடைய வாலையும் சிறகுகளையும் ஆட்டினால்தான் என்னால் தண்ணீரில் நீந்தவும், அசையாமல் நிற்கவும் முடியும்'' என்றது கிட்டி.

''உன்னால்தான் தொட்டியை விட்டு வர முடியவில்லை. நானாவது தினமும் இங்கு வருகிறேன். சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போம்,'' என்று கூறிய ஜிம்மி யாரோ வரும் சப்தத்தைக் கேட்டுக் குரைத்துக் கொண்டே வாசற்புறம் ஓடிற்று.

கிட்டியும், ஜிம்மியும் நெருங்கிய நண்பர்களாகி விட்டன. ஒரு நாள் நண்பகல் நல்ல வெய்யில். சுரேஷும், ரமாவும் பள்ளிக்குச் சென்றிருந்தனர். அம்மா வீட்டைப் பூட்டிக் கொண்டு பக்கத்து வீட்டிற்குச் சென்றிருந்தாள். வீட்டில் ஜிம்மியும் கிட்டியும் மட்டும்தான்.

திடீரென்று ஜிம்மிக்கு ஒரே தாகம். தன்னுடைய தண்ணீர்க் கிண்ணத்திற்கு ஓடியது. அது காலியாக இருந்தது. வீட்டில் வேறு எங்கும் ஜிம்மிக்கு எட்டும்படியாகத் தண்ணீர் இல்லை. ஜிம்மியின் தொண்டை வரண்டது. என்ன செய்வதென்று தெரியாது கிட்டியிடம் வந்தது.

ஜிம்மியின் நிலையறிந்த கிட்டி, ''என்னுடைய தொட்டியில் உள்ள நீரில் கொஞ்சம் குடித்துக் கொள்,'' என்றது.

''வேண்டாம், கிட்டி! தண்ணீர் குறைந்தால் உனக்கு மூச்சு விட முடி

யாதே!'' என்றது ஜிம்மி.

''பரவாயில்லை. குறைவாகக் குடித்துக் கொள். நான் சமாளித்துக் கொள்வேன். அதிகம் குடித்து விடாதே!'' என்றது கிட்டி.

''தாகம் தாங்காத ஜிம்மி அரை மனதுடன் கிட்டியின் தொட்டியி லிருந்து சிறிது நீரைப் பருகியது. தாகம் தணிந்தவுடன் நன்றியுடன், ''இந்த உதவியை நான் மறக்க மாட்டேன், கிட்டி!'' என்றது.

''ஆபத்தில் உதவாத நட்பினால் என்ன பயன்?'' உனக்கு உதவியதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி,'' என்றது கிட்டி.


''இதே போல் உனக்கு உதவ எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்ட வேண்டும்'' என்று கூறிற்று ஜிம்மி.

அந்த வாய்ப்பு ஜிம்மிக்கு விரைவிலேயே கிட்டிற்று. ஒரு நாள் இரவு வீட்டில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர். ஜிம்மியும் வழக்கம் போல் கிட்டியின் மேசைக் கடியில் படுத்து அரைத் தூக்கத்தில் இருந்தது.

திடீரென்று கிட்டியின் தொட்டியில் சப்தம் கேட்டவுடன் ஜிம்மி திடுக்கிட்டு விழித்துக் கொண்டது. மேசையின் மீது தாவிற்று.

கிட்டி வாலை அடித்துக் கொண்டு தொட்டியில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

ஜிம்மியைக் கண்டவுடன் கிட்டி நின்றது.



''என்ன கிட்டி! ஏன் இப்படிப் பரபரப்புடன் சுற்றி வருகிறாய்? உனக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டது ஜிம்மி.

''நண்பா, இன்று காலையில் சுரேஷ் என் தொட்டித் தண்ணீரை மாற்றவில்லை. என்னால் மூச்சு கூட தாராளமாக விட முடியவில்லை. வெகு சீக்கிரம் நான் இறக்கப் போகிறேன்,'' என்றது கிட்டி.

சுரேஷுக்கு அன்று ஜுரம். ரமா தண்ணீரை மாற்ற மறந்து விட்டாள்.

நண்பனின் துன்பத்தைக் கேட்ட ஜிம்மி, ''சிறிது நேரம் சமாளித்துக் கொள் கிட்டி, இதோ வருகிறேன்,'' என்று மேசையினின்று கீழே குதித்து சுரேஷின் அப்பாவின் அறைக்கு ஓடிற்று. அவரது காலை நக்கி விட்டு லேசாகக் குரைத்தது.

உடனே விழித்துக் கொண்ட அப்பா, அறையின் விளக்கைப் போட்டார். அம்மாவும் விழித்துக் கொண்டாள்.

ஜிம்மி குரைத்துக் கொண்டே அறையை விட்டு வெளியேறவே, அம்மாவும், அப்பாவும் அதைத் தொடர்ந்தனர். ஜிம்மி நேராக கிட்டியின் மேசையை அடைந்தது. பின்பற்றி வந்த அப்பா விளக்கைப் போட்டவுடன், அம்மாவும் அப்பாவும் கிட்டியின் நிலையைக் கண்டனர்.

அப்பா வேகமாகச் சென்று வாளியில் புதிய தண்ணீரைக் கொண்டு வந்தார். கிட்டியை எடுத்து வாளியில் விட்டார். கிட்டிக்கு ஒருவழியாக உயிர் வந்தது.

பின்னர் அப்பா தொட்டியில் இருந்த தண்ணீரை நிதானமாக மாற்றினார். கிட்டியை மீண்டும் தொட்டியில் விட்டார். கிட்டி அவரை நன்றியுடன் பார்த்தது.


அப்பா ஜிம்மியைத் தூக்கித் தடவிக் கொடுத்தார். அம்மா அதன் நெற்றியில் லேசாக முத்தமிட்டாள்.

''நல்ல காரியம் செய்தாய் இன்று நீ'' என்று பாராட்டி விட்டுத் தூங்கச் சென்றனர் இருவரும்.

ஜிம்மி மேசையின் மீது தாவியது. கிட்டியை அன்புடன் பார்த்தது.

''என் அருமை ஜிம்மி! உயிர் காப்பான் தோழன் என்பதை நீ நிரூபித்து விட்டாய். உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?'' என்றது கிட்டி.

''நான் செய்தது, நீ எனக்கு முன்பு செய்த உதவிக்குக் கைம்மாறுதான்'' என்றது ஜிம்மி வாலை ஆட்டியவாறே.



"மம்மி! ஏதாவது 'தப்பு' செய்தா அதுக்கு 'சாரி'ன்னு சொன்னா அதன்பின் அடிக்கவோ, திட்டவோ செய்ய மாட்டாங்க இல்லே?"

"ஆமா. அதுக்கென்ன இப்போ?"

"சாரி மம்மி! நான் பந்து விளையாடும் போது அது பட்டு நம்ப டி.வி. கண்ணாடி உடைஞ்சு போச்சு!"


— உதய்.

"'சிடுமூஞ்சி'ன்னா என்ன அர்த்தம் மாமா?"

"ஏன்... எதுக்குக் கேட்கிறே?"

"நீங்க இல்லாத போது எங்கப்பா உங்களை அப்படித்தான் சொல்லுவார்!"

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.





சிலந்திகள்

ஆழி


இந்த உலகில் வசித்து வரும் பழமையான உயிரினங்களில் சிலந்தியும் ஒன்று. சிலந்தி 30 கோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி, இன்னமும் இருந்து வருகிறது!

சிலந்திகளில் சுமார் 1000 வகைகள் இருக்கின்றன. 'ட்ராஞ்சலா' என்று ஒரு சிலந்தி இருக்கிறது. இது சுமார் 8 செ.மீ. வரை வளரும். 25 ஆண்டுகள் கூட உயிர் வாழும்! 2½ ஆண்டுகள் வரை எந்த இரையும் இல்லாமல் இதனால் இருக்கமுடியும்!






'டார்டிக்ராடா' என்னும் சிலந்தி 5 ஆண்டுகள் கூட இரை இல்லாமல் உயிர் வாழும்! இது ஈரமான நிலத்தில் வாழ்கிறது. நிலம் உலர்ந்ததும் இதுவும் உலர்ந்து விடும். ஆனால் சாகாது! நிலம் ஈரமானதும், இது உயிர்த்து எழுந்துவிடும்!




சிலந்தி, முழு இரையையும் அப்படியே விழுங்கிவிடுவதில்லை. தன் வலையில் மாட்டிக்கொள்ளும் இரையைக் கழித்து, அந்த இடத்தில் விஷத்தையும் சீரண நீரையும் செலுத்துகிறது. பிறகு, வலையுடன் பிணைத்து அப்படியே கிடக்க விட்டுவிடுகிறது. சிலந்தியின் சீரண நீரால் இரையின் உள் உறுப்புகள் சீரணித்து விடுகின்றன. அதன் பிறகு அந்த இரைக்குள் இருக்கும் சாற்றை உறிஞ்சி விடுகிறது!




அமேசான் காடுகளில் உள்ள 'பறவை தின்னிச் சிலந்தியின் உடல் 7 செ.மீ. கால்கள் ஒவ்வொன்றும் 20 செ.மீ. இதன் இரை: பறவைகள், தவளைகள், பல்லிகள்!



இணை கூடிய பிறகு, பெண் சிலந்தி, ஆண் சிலந்தியைக் கொன்று தின்றுவிடும்!




சிலந்தி, மாத்திரை வடிவில் உள்ள வட்டமான வெள்ளைப் பையில் முட்டைகள் இடுகிறது. அவை குஞ்சாகிற வரையில் முட்டைப் பையைத் தன் வயிற்றில் அணைத்தபடியே தூக்கிக்கொண்டு போகும்!




சிலந்தியின் நூல் என்பது என்ன? சிலந்தியின் வயிற்றுப் பகுதியில் உள்ள துவாரங்கள் வழியே வெளிவிடப் படுகிற திரவம்தான் காற்றுப் பட்டதும் நூலாக மாறுகிறது! ஒரு சிலந்தி, தன் ஆயுளில் உண்டாக்கும் நூலின் நீளம் நூற்றுக் கணக்கான கிலோ மீட்டர்கள் கூட இருக்கும்!


சிலந்தி வலையின் நூல், மெல்லியதானாலும் உறுதியானது. சிலந்தியின் நூலைக் கயிறு போல் திரித்தால், அதே தடிப்புள்ள இரும்புக் கம்பி தூக்கும் எடையை விட அதிகமான எடையைத் தூக்கும்!




சிலந்திக்குக் கால்களைப் போலவே கண்களும் எட்டு.




சிலந்தி, தன் வலையில் தானே எப்படி மாட்டிக்கொள்ளாமல் இருக்கிறது? சிலந்தியின் வலையில் இரண்டுவிதமான இழைகள் இருக்கின்றன. ஒரு வித இழை ஒட்டும்; மற்றொருவித இழை ஒட்டாது. அந்த இரண்டு வித இழைகளும் சிலந்தியின் வெவ்வேறு இடங்களில் உற்பத்தி செய்யப் படுகின்றன. ஒட்டாத இழையின் மேல்தான் சிலந்தி நடக்கும்..... இதில் மாறுபட்ட கருத்துக்களும் உண்டு. சிலந்தியின் 8 கால்களில் 4 கால்கள் மட்டும் வலையில் சிக்கிக் கொள்ளுவதில்லை. வலையின்மேல் அந்த 4 கால்களால் நடக்கிறது சிலந்தி..... சிலந்தியின் கால்களில் இருந்து கசியும் ஒருவித எண்ணெய்ப் பசையினால் சிக்கிக்கொள்ளாமல் நடக்கிறது..... ஆனாலும் ஆராய்ச்சி தொடர்கிறது!



சிலந்திகளில் வலை பின்னாத சிலந்தியும் உண்டு. பூமியில் குழி பறித்து, மேலே ஒரு மூடியும் போட்டு விடுகிறது. இந்த மூடியைத் தன் நூல் இழையையும் மண்ணையும் கலந்து தயாரிக்கிறது. குழிக்குள் ஏதாவது இரை வரும்போது, குழிக்குள் இருந்து மூடியை திறந்து இரையை இழுத்துக் கொள்ளும். அமெரிக்காவிலும் ஜமைக்காவிலும் இந்த வகைச் சிலந்திகள் உள்ளன.




ஆஸ்திரேலியாவில் உள்ள 'அஸ்ஸானியன் சிலந்தி', ஒவ்வோர் இரவும் புதிதாக வலை பின்னும். மறுநாள் காலையில் அதை அழித்துவிடும். சில சமயம், அந்த வலையைத் தானே தின்று விடும்!



சிலந்திநூல், பட்டை விட மிக மெல்லியது. அதன் குறுக்களவு ஓர் அங்குலத்தில் லட்சத்தில் ஒரு பங்குதான்! இவ்வளவு மெல்லிய இழையை விஞ்ஞானிகளால் உருவாக்க முடியவில்லை. எனவே, மைக்ராஸ் கோப்புகளில் இரு நுட்பமான பகுதிகளை இணைக்கச் சிலந்தியின் இழையைப் பயன்படுத்துகிறார்கள்.


சிலந்தியின் விஷத்தைக் கொண்டு, டிப்தீரியா, ஜுரம், டைபாய்டு, பிளேக், தொழுநோய் முதலிய வியாதிகளைக் குணப்படுத்தலாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்காக 4000 சிலந்திகளை பிரேஸிலில் உள்ள புட்டான்டன் ஆராய்ச்சி நிலையத்தில் வளர்க்கிறார்கள்.






ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியில் உள்ள சிலந்தி, ஒரு கல்லைப் பிடித்துக்கொண்டு நீரில் மூழ்குகிறது. நீரின் அடியில் போய், கிடைக்கும் இரையைத் தின்றவுடன் அந்தக் கல்லை விட்டு விடும். கனம் குறைந்ததும் நீரின் மேல்மட்டத்திற்கு வந்து விடும்!


சிலந்திகளில் 'கறுப்பு விதவைச் சிலந்தி' கெட்ட சகுனமாகக் கருதப்படுகிறது. இதை உயிர்க்காட்சி சாலையில் கூட வைத்துக் கொள்ளுவதில்லை. கடுமையான விஷம் கொண்ட இது வியட்நாமில் அதிகம்.





ஆஸ்திரேலியாவில் உள்ள சிவப்பு முதுகுச் சிலந்தி தன் விஷத்தைச் செலுத்தி ஒரு புலியைக் கூடக் கொன்று விடும் சக்தி கொண்டது!

திருடன் எங்கே?



வழக்கம் போல அந்த வருடமும் மாதவன் கோடை விடுமுறையைக் கழிக்க கிராமத்தில் உள்ள தாத்தாவின் வீட்டிற்கு வந்து விட்டான். அவனைப் பார்த்ததில் எல்லோரையும் விட அவன் அத்தை கங்காவிற்குத்தான் அதிக மகிழ்ச்சி. மாதவனுக்கும் கூட தன் அத்தை கங்காவை மிகவும் பிடிக்கும்.

அம்மா செய்து கொடுத்த பட்சணங்களைப் பாட்டியிடம் கொடுக்கும் போது பாட்டி அவனுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னாள். அவன் அத்தை கங்காவுக்கு அடுத்த மாதம் கல்யாணம்.

"அப்படியா! கங்கா அத்தைக்கு கல்யாணம். டும்.. டும்..." என்று மேளம் கொட்டுவது போல் பாவனை செய்து அவளுக்கென்று வாங்கி வந்திருந்த புத்தகங்களை அவள் கையில் கொடுத்தான்.

ஆயிற்று! மாதவன் வந்து பதினைந்து நாட்கள் ஆகி விட்டன. கங்காவின் கல்யாணத்திற்கான காரியங்கள் நடந்து கொண்டிருந்ததால் மாதவனுக்கு விடுமுறை நாட்கள் போர் அடிக்காமல் வேகமாக ஓடுவது போல் தெரிந்தது.

அன்று ஒரே வெயில். எனவே, இரவில் புழுக்கம் தாங்க முடியவில்லை. மாதவன், தாத்தா, பாட்டி, கங்கா எல்லோரும் மொட்டை மாடியில் படுத்துக் கொண்டனர். இன்னும் கல்யாணத்திற்கு ஒரு மாதமே இருந்ததால் அதைப் பற்றிப் பேசியபடியே அனைவரும் கண் அயர்ந்து விட்டனர்.

நடு இரவிற்கு மேல் வேலைக்காரன் 'திருடன் திருடன்' என்று கத்தும் சத்தமும், அதைத் தொடர்ந்து நாய் குரைக்கும் ஒலியும் கேட்டது. முதலில் தாத்தாதான் கண் விழித்தார். அதன் பிறகு பாட்டி கண் விழித்து மகளையும், பேரனையும் எழுப்பவே நான்கு பேரும் மாடியை விட்டு வேகமாகக் கீழே இறங்கி வந்தனர்.

அங்கு கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிட வைத்தது.

பீரோ திறந்து கிடந்தது. பீரோவில் கங்காவின் கல்யாணத்திற்காகச் செய்து வைத்திருந்த முப்பது பவுன் நகைகளையும், வைரத் தோட்டையும், ரொக்கம் பத்தாயிரத்தையும் காணவில்லை. வேலைக்காரன் வாசல் பக்கம் காலில் ரத்த காயத்துடன் அடி பட்டு மூர்ச்சையாகிக் கிடந்தான். தெரு நாய் ஒன்று வாசலில் விடாமல் குரைத்துக் கொண்டிருந்தது. அதன் வாயிலும் கூட ரத்தம்!



முதலில் மூர்ச்சையாகிக் கிடந்த வேலைக்காரனுக்கு மாதவன் முதல் உதவி செய்தான்.. கண் விழித்த அவன் பெரியவரைப் பார்த்து, ''ஐயா! நடுராத்திரி இருக்கும். ஓர் ஆள் என்னை எழுப்பி, எங்கம்மாவுக்கு நெஞ்சு வலி வந்து கஷ்டப்படுவதாகவும், என்னை உடனே வரச் சொல்லி அனுப்பியிருப்பதாகவும் சொன்னான். மாடியில் தூங்கும் உங்களைத் தொந்திரவு செய்ய வேண்டாம் என்று நினைத்துக் கதவைப் பூட்டிக் கொண்டு தோப்புக்குள்ளே இருக்கும் என் வீட்டுக்கு ஓடோடிப் போனேன். அங்கே போனால் வழக்கம் போல எங்கம்மா கயிற்றுக் கட்டிலில் படுத்துத் தூங்கிட்டிருந்தாங்க. என்னை யாரோ வேண்டும் என்றே ஏமாத்தியிருக்காங்கன்னு நெனச்சு வேகமா நம்ப வீட்டுக்கு வந்தேனுங்க. அப்பத்தானுங்க ஒரு திருடன் நம்ப வீட்டுக்குள்ளேயிருந்து ஒரு மூட்டையுடன் வெளியே வந்தது இருட்டிலே அரைகுறையா தெரிஞ்சுது. இவன் தான் நம்மை ஏமாற்றி விட்டுத் திருடிக் கொண்டு போகிறான் என்ற ஆத்திரத்தில் 'திருடன் திருடன்' என்று கத்திக் கொண்டே அவன் மீது பாய்ந்தேன். ஆனால், அவனோ.. கையில் உள்ள குண்டாந்தடியால்

ந. ஜானகி

ஈஃபில் டவர்

என் காலில் நன்றாக அடித்து விட்டு ஓட ஆரம்பித்தான். என்னால் எழுந்திருக்கக் கூட முடியவில்லை. தினம் ராத்திரி மட்டும் சாப்பாடு போடுவோமே, அந்தத் தெரு நாய்தான், கேட்டு கிட்டே நின்று கொண்டு திருடன் கேட்டைக் கடக்கும் போது அவனை 'வெடுக்'கென்று கடித்து விட்டது. நாய் கடித்த வேதனை தாங்காது வலியோடு அவனும் வேகமாக ஓடி விட்டான். அப்புறந்தானுங்க நீங்களும் அதோ.... எதிர்த்த வீட்டுக்காரங்களும் முழிச்சுக்கிட்டு வந்திருக்கிங்க,'' என்றான்.

தன் அன்புக்குரிய அத்தையின் நகைகளும் வைரத்தோடும் திருட்டுப் போனதை அறிந்து மாதவன் மிகவும் மனம் வருந்தினான். யார் எடுத்திருப்பார்கள்? எப்படியும் திருடனைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்ற வைராக்கியம் அவன் உள்ளத்தில் எழுந்தது. பீரோ அருகில் சென்று ஏதாவது தடயம் கிடைக்கிறதா என்று அலசி ஆராய்ந்தான். ஒன்றும் கிடைக்கவில்லை.

என்ன செய்வது? சிந்தனையோடு கேட் அருகில் வந்தான். தெரு நாய் பாவம் வெறிபிடித்தாற்போல் இன்னமும் கத்திக் கொண்டிருந்தது.

வானில்பொழுது புலர்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதற்குள் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களும் முழித்துக் கொண்டு ஆளுக்கு ஒரு ஆலோசனையை உதிர்க்க ஆரம்பித்தனர்.

தெரு நாய் இன்னும் விடாமல் வெறியோடு கத்திக் கொண்டிருந்தது.

அதையே உற்றுக் கவனித்த மாதவனின் சிந்தனையில் பளிச்சென்ற ஒரு மின்னல்.

அடிபட்டுக் கிடந்த வேலைக்காரனுக்கு வைத்தியம் செய்ய அருகில் இருந்த நாட்டு வைத்தியரை வரவழைக்க ஏற்பாடு செய்தான். தெருவில் கூடியிருந்த கும்பல் இன்னும் கலையவில்லை.

''தெரு நாய்க்கு வெறிபிடித்து விட்டது. ஆகையால் தயவு செய்து அது உங்களைக் கடிக்காமல் இருக்க கவனமாக இருங்கள்'' என்று சொன்னான்.

மறுவிநாடியே அங்கிருந்த கும்பல் கலைந்தது. தெரு நாய்க்கு வெறிபிடித்திருக்கும் செய்தி அந்தக் கிராமம் முழுவதும் பரவ ஆரம்பித்தது.

வருத்தத்தோடு திண்ணையில் அமர்ந்திருந்த தாத்தாவிடம் வந்த மாதவன், ''தாத்தா! நீங்க கவலைப் படாதீங்க. இன்று மாலைக்குள் திருடனைக் கட்டாயம் கண்டுபிடித்து விடுவோம். அதற்கு நீங்களும் எனக்கு உதவி செய்யணும்'' என்று கூறித் தாத்தாவின் காதில் ஏதோ இரகசியமாகக் கூறினான். தாத்தாவின் முகம் மலர்ந்தது.

கங்காவிடம் வந்து, ''அத்தை! நீங்க கவலையை விட்டுடுங்க. நகையும் கிடைத்து விடும். உங்க கல்யாணமும் 'ஜாம், ஜாம்னு' நடக்கும். முதல்லே எனக்கும் தாத்தாவுக்கும் காப்பி டிபன் செஞ்சு கொடுங்க. வெளியிலே எங்களுக்கு கொஞ்சம் வேலை இருக்கு'' என்றான்.

''என்னடா சஸ்பென்ஸ்... சொல்லேண்டா மாதவா.''

''நோ.. அத்தை. அதெல்லாம் சாயந்திரம்தான்'' என்று சிரித்துக்

ஈபில் டவர் — உலகப் பிரசித்தி
பெற்றது. பாரிசில் உள்ள இது கட்டப்பட்ட
வருடம் 1889. பாரிசுக்குச் செல்லும் பயணி
கள் எவரும் இந்த இரும்புக் கோபுரத்தைப்
பார்க்காமல் திரும்புவதில்லை. 300 மீட்டர்
உயரமும், 7000 டன்கள் (அதாவது 70
லட்சம் கிலோ கிராம்) எடையும் உள்ள
இதன் உச்சியில் டெலிவிஷன் அமைந்துள்
ளது. மொத்தம் 1652 படிக்கட்டுகள் உடை
து. இதை அமைத்தவர் பிரான்ஸ் நாட்டு
ஞ்சினியரான அலெக்ஸாண்டர் ஈபில்.
தனால் இவருடைய பெயராலேயே ஈபில்
வர் என்று அழைக்கப்படுகிறது.

— தா. ஷேக்உசேன், செஞ்சி.

கொண்டே சொன்னான்.

சொன்னபடி அன்று மாலையே திருடன் கண்டுபிடிக்கப்பட்டான். அவன் வேறு யாரும் இல்லை. இரண்டு வருடத்திற்கு முன்னால் தாத்தாவின் வயலில் வேலை செய்துவிட்டு நின்றுகொண்ட செங்கோடன் தான். திருட்டுப் போன பொருட்களை எல்லாம் பத்திரமாகப் பாட்டியிடம் கொடுத்தான் மாதவன். வியப்பில் ஆழ்ந்த பாட்டி, "எப்படி நீ திருடனைக் கண்டுபிடிச்சே?" என்று பேரனைக் கேட்டாள்.

தொண்டையைக் கனைத்து விளக்கமாகக் கூற ஆரம்பித்தான் மாதவன்.

"பாட்டி! முதலில் திருடன் நம் வீட்டு விஷயம் தெரிந்த உள்ளூர் ஆளாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவனால்தான் நம்ப வீட்டு வேலைக்காரனைப் பற்றியும் நம்மைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும் என்று நினைத்தேன். இரண்டாவது — திருடனை நாய் கடித்து இருக்கிறது. அது வெறி நாய் என்று நான் ஊர் முழுவதும் செய்தியைப் பரப்ப விட்டேன். வெறிநாய் கடித்தால் வைத்தியம் செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து என்பதைத் திருடன் கட்டாயம் உணர்ந்திருப்பான். அதற்கு வைத்தியம்செய்து கொள்ளப் பத்து மைல் தள்ளி இருக்கும் டவுனுக்குப் போகணும். இல்லாவிட்டால் நாய்க் கடிக்கு வைத்தியம் செய்யும் நாட்டு வைத்தியரிடம் போகணும். இன்னிக்குத் தமிழ்நாடு முழுவதும் ஸ்ட்ரைக். ஒரு பஸ்கூம் ஓடாது. நம்ப கிராமத்துக்குக் காலையும் மாலையும் மட்டும் வரும் பஸ் கூட இன்னிக்கு வராதுன்னு திருடனுக்குத் தெரிஞ்சிருக்கும். இந்த ஊரில் நாய்க்கடிக்கு வைத்தியம் செய்பவர், கைராசிக்காரர் என்று பெயர் பெற்றவர், வைத்தீஸ்வரன் என்ற வைத்தியர்னு கேள்விப்பட்டேன். அவர் இங்கேயிருந்து ஐந்து மைல் தள்ளி இருக்கே நந்தவனம் என்கிற கிராமம். அங்கே இருக்கார். அவரைப் பார்த்து விஷயத்தை அவர்கிட்டே சொன்னோம். அவரும் எங்களுக்கு உதவுவதாக ஒப்புக் கொண்டார்.


எதற்கும் முன் எச்சரிக்கையாக தாத்தாவை சைக்கிளில் அனுப்பி டவுன் ஆஸ்பத்திரியிலே இருக்கச் சொன்னேன். ஒருவேளை திருடன் யாரோடவாவது சைக்கிளின் பின் சீட்டில் அமர்ந்து கொண்டு வரலாம். இல்லையா?

நான் வைத்தீஸ்வரன் வைத்தியர் வீட்டில் மறைவாக உட்கார்ந்திருந்தேன். எதிர்பார்த்தபடி திருடன் வந்தான் காலில் தானே ஏதோ கட்டுப்போட்டுக்கொண்டு. முதலில் ஒப்புக் கொள்ள மறுத்து விட்டான். "நீ திருடிய உண்மையைச் சொன்னால்தான் வைத்தியம் செய்ய முடியும். இல்லாவிட்டால் நீ செத்துத் தொலை" என்று வைத்தியர் கூறவே உண்மையை ஒப்புக் கொண்டு விட்டான். தாத்தாவிடம் மன்னிப்புக் கேட்டான். இப்பொழுது அவனுக்கு வைத்தியம் 'ஜாம் ஜாம்' என்று நடந்து கொண்டிருக்கிறது. நாய்க்கும்தான்" என்று கூறி முடித்தான் மாதவன்.

மாதவனின் அறிவுக் கூர்மையைக் கண்டு பாட்டி மகிழ்ந்தாள். அத்தை சந்தோஷப்பட்டாள். தாத்தா வியந்தார்.

பிருந்தாவனக்





குட்டிக் குட்டி கண்டெலி
குதித்துத் தாவும் கண்டெலி.
குட்டிக் கரணம் போட்டிடும்,
கொரித்துக் கொரித்துத் துருவிடும்!

பானை சட்டி உருட்டிடும்
பாய்ந்து ஓடிக் கவிழ்த்திடும்.
பூனை வந்து விட்டாலோ
பதுங்கி மறைந்து ஒளிந்திடும்!

— ஆர். ரத்தினசாமி.

குவா குவா வாத்து...




குவா குவா வாத்து
குள்ள மான வாத்து
எவரும் விரும்பிப் பார்க்கும்
எங்கள் ஊரு வாத்து.

வெள்ளை வண்ண வாத்து
வியக்கும் நீள மூக்கு.
தொல்லை என்று கண்டால்
தலையை நீட்டி ஓடும்!


பூச்சி புழுவைக் கொத்தும்
கரிய நிற வாத்து.
கத்திக் கத்தித் தெருவை
கலங்க வைக்கும் வாத்து.

படகு போலக் காலால
பாய்ந்து நீந்தும் வாத்து!
நடக்கும் போது வாலை
நெளித்து ஆட்டும் வாத்து!

— தா. பிரபாகரன்.



வள்ளுவன்





வள்ளு வராம் வள்ளுவர்
வையம் போற்றும் வள்ளுவர்
தென்னு தமிழில் அமுதமாய்த்
தீங்குறள் தந்த வள்ளுவர்.

அறத்துடன் நல்ல பொருளையும்
அவனிக் களித்த வள்ளுவர்
சிறப்புடன் விரும்பும் இன்பமும்
சேர்த்தே அளித்த வள்ளுவர்.


வள்ளுவர் வழங்கிய குறளையே
வாழும் வாழ்வில் ஓதுவோம்!
குறளின் வழியே செல்லுவோம்.
குவல யத்தில் உயருவோம்!



பிறந்த நாட்டிற் கென்றுமே
பெருமை தேடித் தந்தவர்
பிறநாட் டாரும் மெச்சிடும்
பெருமைக் குரிய வள்ளுவர்.

— க. கோகிலவாணி, சங்கலமங்கலம்.

குட்டிப் பையா..



குட்டிப்பையா குட்டிப்பையா
எங்கே போகிறாய்?
குட்டியானை காட்டுக்குள்ளே
பார்க்கப் போகிறேன்.

சின்னப்பையா சின்னப்பையா
எங்கே போகிறாய்?
கண்ணைச் சிமிட்டும் நட்சத்திரம்
எண்ணப் போகிறேன்.

செல்லப்பையா செல்லப்பையா
எங்கே போகிறாய்?
சொல்லெடுத்து பாட்டு ஒன்று
பாடப் போகிறேன்.

கட்டிப்பையா கட்டிப்பையா
எங்கே போகிறாய்?
கட்டிக்கயிற்றால் பெரிய மலையை
இழுக்கப் போகிறேன்.

துடுக்குப்பையா துடுக்குப்பையா
எங்கே போகிறாய்?
துள்ளி ஒடும் புள்ளிமானைப்
பிடிக்கப் போகிறேன்.

அழகுப்பையா அழகுப்பையா
எங்கே போகிறாய்?
அழகுநிலா அருகில்போயி
பார்க்கப் போகிறேன்.

— த. பரசுராமன், புதுவை.

விளையாட்டுக்கே வரமாட்டார்..


வேண்டாம் வேண்டாம் என்கின்றார் — அட
விடுடா வழியை என்கின்றார்;
தாண்டிப் போக முடியாமல் — என்
தயவில் நின்று தவிக்கின்றார்.

கணக்குப் போடத் தெரியாதா? — எனக்
காதைத் திருகிய தொரு காலம்!
மணலில் தோப்புக் கரணங்கள் — நான்
மருண்டு போட்டது ஒரு காலம்!

பட்டா சென்றால் பயப்படுவார் — அந்தப்
பாபு மாமா அகப்பட்டார்!
விட்டால் போதும் என்கின்றார் — இனி
விளையாட் டுக்கே வரமாட்டார்!

— இளையவன்.

எருமையார்




பெரிய கொம்பு எருமையார்
பொறுமை மிக்க எருமையார்
கரிய உடம்பு எருமையார்
களைத்து நடக்கும் எருமையார்.

பாதையை அடைக்கும் எருமையார்
பார்த்தவர் மருளும் எருமையார்.
வாலைச் சுழற்றும் எருமையார்.
வல்லமை மிகுந்த எருமையார்.

பாதையின் குறுக்கே படுத்திடுவார்!
பாங்காய் அசையும் போட்டிடுவார்!
வாதம் எதுவும் பயனில்லை!
வளைத்து போவோம் வாருங்கள்!

— தாராபுரம் கருமணியன்,



கவியரங்கம்

கோழித் தாய்





சின்னச் சின்னக் குஞ்சுகள்
சேர்ந்து வாழும் குஞ்சுகள்
குப்பை மேட்டை நம்பியே
குடி யிருக்கும் குஞ்சுகள்.

கோழி செல்லும் இடமெலாம்
கூட்ட மாக ஓடுமே!
குப்பை தன்னைக் கிளறியே,
கூடச் சேர்ந்து உண்ணுமே!

கொடுங் கழுகு குஞ்சினை
கொள்ளை கொண்டு போகவே,
இட்டம் போட்டு வானிலே
வட்டம் போடக் கண்டதும்,
கூரை ஏறி கோழியும்
கூ... கூ... வென்று கூவுமே.
தரையை நோக்கித் தாவுமே
தாவிக் காக்க ஓடுமே!

நமனாய் வந்த கழுகினை
நன்றாய்க் கொத்தி விரட்டுமே!
இமயம் போன்ற பாசத்தால்
இனிய வீரம் நாட்டுமே!

— மீ. ப. நாராயணன், மதுரை.

யானையோ யானை!




மாலைநேரம் சாலையில்
யானை ஒன்று போகுது!
யானை காணும் ஆசையில்
சிறுவர் கூட்டம் சேருது!


கடைவீதி மாலையில்
கலகலத்துப் போகுது!
கடையில் தரும் பழத்தையே
யானை வாயில் போடுது!
யானைப்பாகன் கூடவே
யானை விரைந்து போகுது!
யானைப் பாகன் கையிலே
காசை வாங்கிப் போடுது!
சாலை எல்லாம் அதிரவே
யானை நடந்து போகுது!
யானை நன்றாய் அசையவே
மணிகள் பலவும் ஆடுது!

குழந்தை தலையில் தும்பிக்கை
குவித்து ஆசி கூறுது!
அன்னை மனத்தில் நம்பிக்கை
அதுவே மகிழ வைக்குது!

— டி. ஜீவானந்தன், சோமனூர்.



மயிலே வா..




அழகிய மயிலே ஓடி வா!
அசைந்து அசைந்து ஆடி வா!
அழகிய தோகையை விரித்து வா!
அச்சம் இன்றி அருகில் வா!

கால்கள் நீண்ட மயிலே வா!
கழுத்து(ம்) நீண்ட மயிலே வா!
கொல்லி மலை மயிலே வா!
கொடுப்பேன் சோளம், தின்ன வா!

நாட்டியம் ஆட இங்கே வா!
நாங்கள் பார்த்து மகிழ வா!
நாட்டுப் பறவை மயிலே வா!
நாங்கள் விரும்பும் மயிலே வா!

கண்ணைக் கவரும் மயிலே வா!
காலைத் தூக்கி ஆட வா!
வண்ண மயிலே பறந்து வா!
வழியில் யாரும் இல்லை வா!

— புதுக்கோட்டை அழகுநிலவன்.



பாடம் சொல்லித் தரேன்!

கிருங்கை சேதுபதி

வந்திருந்த பிறந்த நாள் வாழ்த்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் சுந்தர். எல்லாம் அவனுக்கு அறிமுகமான கையெழுத்துக்கள். வாழ்த்து மடல்களில்தான் எத்தனை வகை! தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், தெய்வங்கள், பறவைகள் அப்பாடி! எத்தனை வகைகள்! அந்தக் குவியலில் தனித்திருந்த ஒரு வாழ்த்து அவன் கவனத்தைக் கவர்ந்தது!

முத்துக்களைக் கோர்த்து வைத்தது போலிருந்தன எழுத்துக்கள்! அதை யார் அனுப்பி இருப்பார்கள்?

உடனிருக்கும் நண்பர்களிலிருந்து, பிரிந்திருக்கும் நண்பர்கள் வரை அவர்களது கையெழுத்தை வைத்தே, இன்னாரென்று கண்டுபிடித்து விடும் சுந்தரால் அந்தக் கடிதத்துக்குச் சொந்தக்காரரை ஊகிக்க முடியவில்லை...!

யார் அனுப்பி இருப்பார்கள்...?

சற்றும் ஆவல் குறையாமல், கடிதத்தைப் பிரித்தான்...! அழகான படம்...!

"ஒரு விளக்கிலிருந்து இன்னொரு விளக்கிற்கு ஒளி ஏற்றிக் கொண்டு இருக்கும் ஒரு கை...!" — அவ்வளவு தான் படம்.

அனுப்பியது யாரென்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் படத்தை விரித்தான். உள்ளிருந்து நான்காக மடிக்கப்பட்டிருந்த ஒரு முழுத்தாள் கீழே விழுந்தது. எடுத்துப் படித்தான்! குமரன், பெருமாள், கருப்பன், வள்ளி, சுந்தரி — வேலங்குடி...!

"அன்பு... அண்ணன், ஆசான் சுந்தருக்கு...

அந்தப் பெயர்களைப் படித்த மறு நிமிடமே அவனது மனம் தாத்தாவின் ஊரான வேலங்குடியை நோக்கிப் பறந்தது...!

முப்புறமும் மலைகள் சூழ்ந்திருக்கப் பச்சைப் பசேலென்ற வயல்களும், வாழைத் தோட்டங்களும், தென்னந் தோப்புகளும், மாந் தோப்புகளுமாக.... அந்தப் பசுமையான காட்சிகள் அவனது மனத்தில் வலம் வர ஆரம்பித்தன!!

ஒருநாள் முழுக்கத் தாத்தாவுடனும், தங்கை சுமதியுடனும் பயணஞ் செய்து கொட்டாம்பட்டியை அடைந்து, அங்கிருந்து 'ஜல் ஜல்' என்று மணிகள் ஒலிக்கும் மாடுகள்

பூட்டிய வண்டியில் ஏறி உட்கார்ந்து இருபுறமும் வேடிக்கை பார்த்தபடியே வேலங்குடி வந்து சேர்ந்தார்கள்.

நெருக்கமான, பல மாடிக் கட்டிடங்களைக் கொண்ட நகர்ப் புறங்களிலே திரிந்த சுந்தருக்கு, அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிதறி விடப்பட்டிருக்கும் பொம்மைகளைப் போல... ஒழுங்கின்றிக் கிடந்த குடிசைகள் வியப்பை அளித்தன...!

புழுங்கிப் போன ஃபேன் காற்றையே சுவாசித்துச் சோர்ந்து போன நாசிகளுக்கு, மணமிக்க மலைக் காற்று சுகத்தைத் தந்து கொண்டிருந்தது.

''தாத்தா... உங்க ஊரு ப்யூட்டிஃபுல்லா இருக்கு...!'' — மகிழ்ச்சியை வார்த்தைகளாகக் கக்கினாள் சுமதி.

''அததே... போயப் பிள்ளியளா.. வாங்க... வாங்க...!'' என்று வாய் நிறைய வெற்றிலையும், காதுகளில் கம்மலுமாக, அள்ளி முடிந்த நரை முடியுடன், விழுந்தது போக எஞ்சியிருந்த ஒருசில காவிப் பற்களையும், பொக்கை வாயையும் திறந்து காட்டியபடி வரவேற்ற பாட்டியைப் பார்க்கப் பார்க்கச் சுந்தருக்குச் சிரிப்பாக வந்தது...!

''என்னளா... பேளாண்டி... அப்புயிப் பாக்குயே...? சுமதி கைக் கொயந்தையா... இளுக் கையில... நீ ஒனுு வயசுப் புள்ளே... அப்ப இங்கே வந்தியே... மயந்து போச்சா...?''

வெற்றிலையைப் போலவே வார்த்தைகளும் பாட்டியிடம் என்ன பாடுபடுகிறது...!

அந்தக் கிராமத்தை அப்பொழுது தான் முதன் முதலாகப் பார்ப்பது போலத் தோன்றியது...! ஒவ்வொன்றும் ஒவ்வொரு அதிசயமாக இருந்தது...!

மறுநாள், ''பட்டணத்துப் புள்ளே... பச்சைத் தண்ணி உங்க உடம்புக்குச் சேராது... வெந்நித் தண்ணி வச்சுத் தாரேன், வீட்டிலேயே குளிராகா...?'' என்ற பாட்டி சொல்லையும் மீறித் தாத்தாவுடன் வயலுக்குக் கிளம்பினான் சுந்தர்.

சுமதி பாட்டிக்கு அடங்கிப் போனாள்.

அகன்ற ரோடுகளில் செருப்புக் களுடன் நடந்த சுந்தருக்கு, குறுகலான புற்கள் நிறைந்த வரப்பில் நடப்பது வித்தியாசமான சுகத்தையும், சந்தோசத்தையும் தந்தது.

அதைவிட ஆச்சரியம்.. இடுப்பில் துண்டோடு சேறுமிக்க வயல்களில் நாற்றுப் பிடுங்கிக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்ததுதான்...!

''யோவ்... தாத்தா... இது... பட்டணத்துப் புள்ளியா...?'' — மிரள மிரள விழித்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அவர்களில் சற்றுத் துணிச்சலான குமரன் கேட்டான்..!

''ஆமாடா... கொமரா... இது எம் பேரப் புள்ளே...!'' — முகத்தில் பெருமை கொப்பளிக்கத் தாத்தா சொன்னதும், வைத்த கண் வாங்காமல் எல்லோரும் அவனையே பார்த்தார்கள்...!

அந்தச் சூழல் கொஞ்சங் கூட வஞ்சனை — ஒளிவு மறைவு இல்லாத அந்த உள்ளங்களில் வெள்ளையான வார்த்தைகள் — சுந்தரை மிகவும் கவர்ந்து விட்டது.

அடுத்தடுத்து அவனது தாத்தா சொன்ன செய்திகள் அவனை மேலும் அதிர்ச்சிக்குள்ளாழ்த்தியது.

அந்த ஊரில் பள்ளிக்கூடமே இல்லையாம்...! வயல்களில் வேலை



பார்க்கவும், மாடு மேய்க்கவுமே அவர்களுக்குப் பொழுது சரியாகிப் போய் விடுமாம்! அவர்கள் படிக்கத் தெரியாமல் இருப்பது சுந்தருக்கு என்னவோ போல் இருந்தது...!

வயற்புறத்தில் இருந்த பம்ப் செட் கிணற்றுத் தொட்டியில் வெகு நேரமாய் ஆசை தீரக் குதித்துக் குதித்து விளையாடி விட்டு.. தாத்தாவுடன் வீடு திரும்பினான் சுந்தர்.

மாலைப் பொழுது வந்தது...! பட்டணத்துப் பிள்ளையான சுந்தரைப் பார்க்க அந்தச் சுட்டிப் பயல்கள் பூராவும் வந்திருந்தனர்.

சுந்தரும் கொஞ்சங் கூட அலட்டிக் கொள்ளாமல், சகஜமாகப் பேசிப் பழகி.. அவர்களுள் ஒருவனாகவே மாறி விட்டான்!

"ஆமா... குமரன்.. நீங்கள்ளாம் படிக்கறதுக்கு ஒரு பள்ளிக் கூடம் கூட இல்லையாமே...?" சுந்தர் கேட்டான்!

"ஆமாப்பா... எங்களுக்கும் படிக்க ஆசைதான்..! ஆனா சொல்லிக் குடுக்கத்தான் ஆளு இல்லியே...!" குமரன் பதில் தந்தான்.

"அப்படின்னா... நானே உங்களுக்குப் பாடம் சொல்லித் தரட்டுமா...?" என்று சுந்தர் கேட்டதும்.. எல்லாரும் அவனையே ஆச்சரியம் மேலிடப் பார்த்தார்கள்.



"நீயா.. நீ... எங்களுக்கு வாத்தியாராகப் போறியா...?"— சுந்தரி கேட்டே விட்டாள்...!

"ஏன் ஏன் ஆகக் கூடாது...? பட்டணத்துல படிச்ச புள்ளே... அழகாச் சொல்லித் தரும்...! நீ சொல்லிக் குடுப்பா...?" என்று நமரன் சொல்ல, எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள்...!

"சரி... நீங்க நோட்டுக், பென்சிலெல்லாம் வச்சிருக்கீங்களா...?" — என்று கேட்ட சுந்தரை அவர்கள் அனைவரும் புரியாமல் பார்த்தனர்.

சுந்தர் புரிந்து கொண்டான்..!

"சரி இன்னிக்கு மாதிரியே நாளைக்குச் சாயந்திரம் சீக்கிரமா வந்துடுங்க...!" என்று சுந்தர் சொன்னதும், அத்தனை பேரும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினர்.

அன்றே வீடு குருகுலமானது. சுமதியும் சுந்தரும் ஆசிரியர்களாகப் பணியாற்ற அத்தனை பேரும் ஆவல் பொங்கக் கற்க ஆரம்பித்தார்கள்.

நாட்கள் நகர்ந்தன...! சுந்தரின் முயற்சி பலித்து விட்டது. அவர்கள் அத்தனை பேருமே தேறி விட்டார்கள்...! இப்பொழுதெல்லாம் எவ்வளவு கடினமான வார்த்தைகளாக இருந்தாலும் சரி... "கடகட" என்று வாசித்துத் தள்ளி விடுகிறார்கள்...!

"இன்னும் படிக்கணும்... படிக்கணும்" என்று வேறு நச்சரிக்க ஆரம்பித்து விட்டார்கள்...!

சுந்தரும் தான் படிப்பதற்காகக் கையோடு கொண்டு வந்திருந்த "பாலர் கதைகள்" புத்தகங்களையும், கோகுலப் புத்தகங்களையும் கொடுத்து அவர்களது அறிவுப் பசியைப் போக்கிக் கொண்டு இருந்தான்.

இந்த நேரத்தில்தான், கோயம்புத்தூரிலிருந்து, "உடனே வரச் சொல்லி"க் கடிதம் வந்திருந்தது. இன்னும் இரண்டு நாட்களில் பள்ளி திறக்கப் போகிறார்களாம்...!

இதை அவன்து மாணவர்களிடம் சொன்ன பொழுது... அவர்கள் அழுத அழுகை... சுந்தரின் நெஞ்சை நெகிழ வைத்து விட்டது.

மறுநாளே புறப்படத் தயாரா

னான்...! அவனிடம் படிக்கக் கற்றுக் கொண்ட மாணவர்களெல்லாம் அவனை வழியனுப்பி விடுவதற்காகத் தமது பெற்றோருடன் வந்திருந்தனர்...!

"தம்பீ... நீ என்னைக்கும் நல்லாயிருக்கணும்... எங்க பிள்ளைகளுக்கு கல்விக் கண்ணைத் தெறந்து வச்சிருக்கே... உனக்கு ஒரு குறையும் வராமக் கடவுள் காப்பாத்தட்டும்...!" ஊர்ப் பெரியவர் ஒருவர் ஆசிர்வாதம் பண்ணினார்.

அத்தனை குழந்தைகளும் தமது அன்பின் காணிக்கையாக — குரு காணிக்கையாக, கொய்யா, பலா.. மாம்பழங்களோடு நுங்குச் சுளைகளையும், வறுத்த வேர்க் கடலையையும் கொண்டு வந்து குவித்தனர்.


அவர்களின் அன்பிற்கும், பாசத்திற்கும் ஆட்பட்ட சுந்தரின் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சரமாரி பொழிந்தன..!

சுந்தரையும் சுமதியையும் பட்டணத்திற்கு அழைத்துச் செல்ல தாத்தா மாட்டு வண்டியோடு வந்தார்...!

ஒருவழியாக அவர்களிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு கிளம்பினாலும் அவர்களது மனம் என்னவோ.. அதை விட்டு நகர மறுத்தது...!

அம்மா யானை: பையன் 'ஷவர் பாத்'லதான் குளிப்பேன்னு அடம் பிடிச்சான்... அதான் அவர் தும்பிக்கையால உறிஞ்சி அவனுக்கு ஊற்றிக்கிட்டு இருக்கார்!

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.



எப்படி விரைந்து விட்டது நாட்கள்...! மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்தான்.

"அன்பு நண்பா,

நீ வந்து விட்டுப் போன பின்பு... நாங்களாகச் சேர்ந்து, சிறுவர் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாங்கிப் படித்து வருகிறோம்...! அதை விட ஒரு மகிழ்ச்சியான செய்தி...

இந்த ஆண்டு குடியரசு தினத்தன்று, வேலங்குடியில் புதிய துவக்கப் பள்ளியை... எங்களது மாவட்டக் கலெக்டர் அவர்கள் திறந்து வைக்க இருக்கிறார்கள்...! இந்த ஆண்டு விடுமுறைக்கு நீயும் சுமதியும் அவசியம் வாருங்கள்...! உங்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

உனது,

அன்பு மாணவ, மாணவிகள்!"

கண்கள் ஆனந்தத்தால் பனித்தன...! தன்னிடம் படித்த மாணவன் ஒருவன் கலெக்டராகி வருவதைக் காணும் ஆசிரியர் அடையும் மகிழ்ச்சியைப் போல... அந்தக் கடிதம்.. சுந்தருக்கு மகிழ்ச்சியைத் தந்தது...!

மீண்டும் அந்தப் படத்தைப் பார்த்தான். ஒரு அகல் விளக்கிடம் இருந்து இன்னொரு விளக்கிற்கு ஒளியைப் பெற்றுத் தருகிற ஒரு கை...!

கல்வியும் அப்படித்தானே...! கல்வி கற்ற ஒருவர், கல்லாத இன்னொருவருக்குக் கற்றுத் தருவதால் அவரது கல்வி எந்த விதத்திலும் குறைவதில்லையே...? மாறாக அறியாமை இருளையல்லவா அகற்றி வைக்கிறது...!

அப்படி ஒரு விளக்கை ஏற்றி வைத்த பெருமையில் அவன் முகம் மலர்ந்திருந்தது. இவனைப் போலவே, படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் படிக்காத மற்றவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவதானால்... நாட்டின் கல்வித்தரம் எவ்வளவு உயரும்...?

மாறாத மகிழ்ச்சியை மனத்திற்குள் சுமந்து கொண்டு, அந்தப் பிறந்த நாள் வாழ்த்தை அப்பாவிடம் காட்டுவதற்காக எடுத்துச் சென்றான் சுந்தர்.



பாரத ரத்னா நெல்சன் மண்டேலா

1990 பிப்பிரவரி 11 ஆம் நாள். அன்று ஞாயிற்றுக்கிழமை. பிற்பகல் நேரம். நிமிடங்கள் நகர நகர, உலகம் முழுதும் ஒரு பரபரப்பு. மூன்று மணி எப்போது அடிக்கும் என்ற துடிப்பு. அதே நேரத்தில், தென்னாப்பிரிக்கா முழுவதிலும் ஒரு மகிழ்ச்சிப் பெருக்கு. ஏதோ ஒரு பெரிய திருவிழா தினம் போன்ற உல்லாசம்.

'பேர்ல்' என்னுமிடத்தில் உள்ள 'விக்டர் வேர்ஸ்டர்' சிறைக்கு எதிரில் அற்புதக் காட்சி. சாலையின் இரு மருங்கிலும்.... வீடுகளின் மாடிகளில்..... மரங்களின் உச்சியில்.... எங்கு பார்த்தாலும் பச்சையும், பொன் நிறமும், கருமையும் உள்ள ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் கொடிகள், சின்னதும் பெரியதுமாகக் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம்.

மாலை 4 மணி 14 நிமிடம். சிறைச்சாலையில் அந்தச் சிறிய அறையின் கதவு திறக்கப்பட்டது. அதில் தான் டாக்டர் நெல்சன் மண்டேலா அடைபட்டுக் கிடந்தார். 27 ஆண்டுச் சிறைவாசம்! உள்ளே நுழையும் போது நடுத்தர வயதினர். அப்போது 44 வயது. அறையிலிருந்து விடுதலையாகி வெளிவரும் போது முதுமைக் கோலம். 71 வயது! அந்தச் சிறைக் கதவு அவரை மட்டும் வெளியுலகுக்குத் திறந்து விட வில்லை. அவருடன் கூட, மக்கள் சக்தியும் கூடத் திறந்து விடப்பட்டது. சம உரிமைக்கும் நிரந்தர அமைதிக்கும் கூட அந்த நிமிடம் முதல் சுதந்திரம்தான். தென்னாப்பிரிக்க வரலாற்றில் அந்த ஒரு கணம் மிகவும் அபூர்வமானது. லட்சக்கணக்கான ஜோடிக் கண்கள்,

'ஜெயராம்ஜி'



குருவுக்கே வழிகாட்டி!

கிரேக்க ஞானி அரிஸ்டாட்டிலும், அவரை எப்பொழுதுமே பின்பற்றி நடக்கும் அவரது சீடன் அலெக்ஸாண்டரும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

இப்படி இவர்கள் நடந்து செல்கையில் ஒரு காட்டாறு குறுக்கிட்டது.

உடனே அலெக்ஸாண்டர் குருவை முந்திக் கொண்டு ஆற்றிலே இறங்கி நடக்கலானார். அவரைப் பின்பற்றியே ஆசான் செல்ல வேண்டியதாயிற்று.

அக்கரையை அணுகியதும் ஆசான் கேட்டார் கோபமாக.

"குருவாகிய நான் வழிகாட்ட, மாணவனான நீ பின்னால் வர வேண்டியவன். இப்போது நிலை பிறழச் செய்து விட்டாய்! இது முறையல்ல!"

அவருடைய குரலில் கடுமை தெரிந்தது.

"ஆசிரியப் பெருமானே! என்னைப் பொருத்தருள வேண்டுகிறேன். தங்களுக்கு முன்னால் நான் ஆற்றிலே இறங்கி நீரின் ஆழம், சுழி, தெளிவு, விரைவு ஆகியவற்றைக் கண்டு சென்றதாலேயே தாங்கள் எளிதாக என் பின்னால் வர இயன்றது" என்றார் அலெக்ஸாண்டர்.

"நீ எனக்கு முன்னால் சென்று அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டார் அரிஸ்டாட்டில்.

"ஐயனே! முன்னால் சென்ற இந்த அலெக்ஸாண்டரை ஆற்று நீர் அடித்துச் சென்றிருந்தால், கேடு ஒன்றுமில்லை. என்னைப் போன்ற பல அலெக்ஸாண்டர்களை நீங்கள் உருவாக்க முடியும்! ஆனால், தங்களை ஆற்று நீர் அடித்துச் சென்றிருந்தால், நாட்டுக்கு எவ்வளவு பெரிய கேடு? எவ்வளவு அலெக்ஸாண்டர்கள் கூடி முயன்றாலும், தங்களைப் போன்ற ஒருவரைப் படைத்து விட முடியுமா?" என்று கேட்டுப் பணிவுடன் நின்றார் அலெக்ஸாண்டர்.

அருமை மாணவனின் தெளிவுரை கேட்டு, வியந்து வாயடைத்து நின்றார் அரிஸ்டாட்டில்.

— எஸ். குருமூர்த்தி,
காட்டாங்குளத்தூர்.

தமது அரும்பெரும் தலைவரைக் கண்ணாறக் கண்டு திருப்திப்பட்டன. உலகம் முழுவதிலுமிருந்து அங்கு வந்து குழுமியிருந்த பத்திரிகையாளர்களும் புகைப்படக்காரர்களும் மன நிறைவோடு அவரைச் சூழ்ந்து கொண்டனர். அதையடுத்து ஒரு மாபெரும் பேரணி! அதில் மண்டேலா உரை நிகழ்த்தினார். அப்போது அவர், தான் விஜயம் செய்ய விரும்பும் நாடுகளில் இந்தியாவுக்கு முதலிடம் என்று குறிப்பிட்டார். அந்த வாக்கை அவர் இப்போது காப்பாற்றி விட்டார். கடந்த அக்டோபர் 15 முதல் நம் நாட்டில் ஐந்து நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார். அவருடைய இந்திய வருகை, நமது பாரதத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சி! ஏன் தெரியுமா?

ஒருவர் சிறப்பாகப் பணியாற்றினால், அவருக்கு நாம் பரிசும் பாராட்டும் வழங்கி, அவரை நாம் கௌரவிக்கிறோம். அந்தப் பரிசும் பாராட்டும், அவரை மேலும் சிறப்பாகத் தொண்டாற்றத் தூண்டுகின்றன. அப்போது, அவரை நாடி மேலும் பல பரிசுகள் வந்து குவிகின்றன. தொண்டிற்காகப் பரிசு. பரிசினால் தொண்டு.... இப்படி இரண்டும் மாறி மாறிச் சிறப்படைவதால், அவர் புகழ் இமாலய அளவு உயர்கிறது. நெல்சன் மண்டேலாவும் அத்தகைய ஒருவர்தான். 'சிறையில் வாடும் தலைவருக்குப் பெரிய பெரிய விருதுகள்' என்ற தலைப்பில் அவரைப் பற்றி ஏற்கனவே ஒரு தடவை கோகுலத்தில் படித்திருக்கிறீர்கள். அதில் கூறப்பட்ட பல பரிசுகளின் தொடர்ச்சியாக இன்னும் பல பரிசுகள் அவரை நாடி வந்துள்ளன. அவர் நம் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, நமது நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது. இந்தியா அவருக்கு விருது வழங்குவது, இது இரண்டாவது தடவை. முன்பு, 1980 நவம்பர் 14 ஆம் நாள், குழந்தைகள் தினத்தன்று நாம் அவருக்கு 'நேரு நல்லெண்ண விருது' வழங்கினோம்.



* குடியரசுத் தலைவரும் இந்தியப் பிரதமரும் வரவேற்கிறார்கள்.

அப்போது அவர் சிறையில் இருந்த தால், அவர் மனைவி வினி மண்டே லாவை நாம் அழைத்தோம். ஆனால், தென்னாப்பிரிக்காவின் பிரிட் டோரிய அரசு அவரை அனுமதிக்க வில்லை. அவருக்குப் பதிலாக, தென் னாப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ஆலிவர் டோம்போ வந்து அவ்விருதைப் பெற்றுச் சென்றார். இப்போது மண்டேலா விடுதலையாகி விட்டார். எனவே, நேரில் வந்து, கடந்த அக்டோபர் 16 ஆம் நாள், அவரே அந்த 'பாரத ரத்னா' விரு தைப் பெற்றுச் சென்றார். இந்தியப் பிரஜை இல்லாத வெளி நாட்டுத் தலைவர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுவது, இது இரண்டாவது தடவை. முன்பு, 1987 ஆம் ஆண்டு கான் அப்துல் கஃபார்கானுக்கு வழங்கப்பட்டது. அவர் இந்திய விடு தலைப் போரில், காந்திஜியுடன் சேர்ந்து போராடியவர். இப்போது நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப் பட்டுள்ளது. இவர் தென்னாப்பிரிக் காவைச் சேர்ந்தவர். அங்குள்ள வெள்ளையர்களிடம் அடிமைப்பட்டு அடங்கிக் கிடக்கும் கருப்பர்களின் தலைவர். அதே கருப்பு இனமக்கள் மற்றும் அங்கு வாழ்ந்த இந்தியரின் உரிமைகளுக்காகத்தான், முன்பு ஒரு சமயம் நமது தேசபிதா காந்திஜி போராடினார். 1894 இல் நேட்டால் இந்தியக் காங்கிரசை ஏற்படுத்தி, 'சத்தியாக்கிரகம்' என்ற புதுமை யான அகிம்சைப் போராட்டத்தை நடத்தினார் காந்திஜி. அதே அற வழியை, இன்று மண்டேலாவும் கைக் கொண்டு, தனது மக்களின் விடு தலைக்காகப் போராடி வருகிறார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உரத்த குரல் எழுப்புகிறார். அங்கு நிலவும் நிற வெறியைப் போக்கி, மக்கள் அனைவரும் சமம் என்பதை நிலை நாட்ட அல்லும் பகலும் தொண் டாற்றி வருவதைப் பாராட்டித்தான். 'பாரத ரத்னா' விருது அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

படத்தில் ஒளிந்திருக்கும் நண்பன்

இந்த பகுதிகளை சரியான வண்ணங்களினால் நிரப்பி
ஓர் அழகான, அன்பான, நம்பகமான, கனிவான நண்பனை
நீங்கள் பெற முடிகிறதா என்று பாருங்கள்.



ஹான்டிபாயேதான்!

R — சிவப்பு
O — ஆரஞ்சு
B — கருப்பு
DB — கரும் நீலம்
LB — இளம் நீலம்
G — பச்சை
Y — மஞ்சள்

புள்ளியிட்ட கோட்டினூடே கத்தரிக்கவும்.



குற்றம் செய்யும் ஒருவனைப் பார்த்து, 'கேடி' என்று சொல்கிறோம் அல்லவா?, அந்த 'கேடி'க்கு விளக்கம் என்ன தெரியுமா? **Known Depredator** என்பதுதான். அதாவது தமிழில் "கைதேர்ந்த கள்வன்" என்பது பொருளாம்!


— மொரப்பூர் அ. நவ்சாத்.



உலகத்திலேயே அதிக அளவில் விற்பனையாகும் பத்திரிகை "ஆசாஹி ஷிம்பான்" என்ற ஜப்பானியப் பத்திரிகையாகும். இது நாள் ஒன்றுக்கு ஒரு கோடியே இருபது லட்சம் பிரதிகளை விற்கிறது. இந்தப் பத்திரிகைக்கு 172 ரோட்டரி இயந்திரங்களும் 30 ஆப்செட் இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. செய்திகளை விரைந்து சேகரிக்க வசதியாக 3 விமானங்கள், 4 ஹெலிகாப்டர்கள், 125 கார்கள், 82 மோட்டார் சைக்கிள்கள், 53 ரேடியோ பொருத்தப்பட்ட ஜீப்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உலகில் வேறு எந்தப் பத்திரிகைக்கும் இவ்வளவு வசதிகள் இல்லை.

— ஆறுபாதி புகழேந்தி.



'குவிஸ்' (Quiz) என்றால் உண்மையான அர்த்தம் தெரியுமா? 'ஒன்றுமே இல்லை' என்பதுதான் இதன் பொருள். ஓர் ஐரிஷ்காரர் கண்டுபிடித்த அர்த்தமில்லாத சொல் இது. 1780 ஆம் வருடம் டப்ளினில் ஒரு தியேட்டர் மானேஜர் ஒரே நாளில் ஒரு புதிய வார்த்தையைக் கண்டுபிடித்துப் பேசும் மொழியில் புகுத்தி விடுவேன் என்று பந்தயம் கட்டினார். சிலர் இது முடியாத காரியம் என்று கேலி செய்தனர். மானேஜர் சில வாண்டுப் பசங்களை வைத்துக் கொண்டு இரவோடு இரவாக 'Quiz' என்ற வார்த்தையை (எழுத்துக்களை) டப்ளின் நகரத்தின் தெருச் சுவர்களிலெல்லாம் இருக்கி வைக்கச் சொன்னார். வாண்டுகளும் பணம் வாங்கிக் கொண்டு நகரத் தெருக்களில் ஒரு சுவர் பாக்கி இல்லாமல் எழுதி விட்டனர். மறுதினம் எல்லா மக்களின் முகத்திலும் வியப்பு. கேள்



விக்குறி விவாதம்.'குவிஸ்' என்றால் என்ன? என்று மண்டையை உடைத்துக் கொண்டும் புரியவில்லை. புரியாதது 'குவிஸ்' ஆயிற்று.

— எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி — 14.



உலகப் புகழ்பெற்ற உருதுக் கவிஞர் இக்பால், மாணவனாக இருக்கும்போது, ஒரு நாள் வகுப்புக்குத் தாமதித்துச் சென்றார்.

"ஏன் இவ்வளவு தாமதம். இக்பால்?" என்று கேட்டார் ஆசிரியர்.

""இக்பால்" காலதாமதமாகத்தான் வரும்" என்று கூறினார் இக்பால். இக்பால் என்ற வார்த்தைக்குப் புகழ் என்று அர்த்தம்.

— எம். ஆனந்தன், வந்தவாசி.



தங்க ஆட்டு உரோம நாடு — ஆஸ்திரேலியா.
உதய சூரியன் நாடு — ஜப்பான்
நள்ளிரவுச் சூரியன் நாடு — நார்வே
ஆயிரம் ஏரி நாடு — பின்லாந்து
உலகின் சர்க்கரைச் சுரப்பி — கியூபா
வெள்ளை யானை நாடு — தாய்லாந்து

— செ. தியாகராசன், திருக்கடையூர்.



ஆம்ஸ்டிராங், எட்வின் ஆல்டரின், மிக்கேல் காலின்ஸ், ஆகியோர்கள் நிலவில் காலடி வைத்தது எல்லோருக்கும் தெரிந்த கதை.


நிலவுக்கு போகிற செலவு எவ்வளவு என்று தெரிந்து கொள்ளுங்கள். ரூபாய் 1,65,000 கோடிகள். இமாலய செலவு என் பார்களே....! அதுவா?

— ஆறு. அண்ணாதுரை,
பஞ்சலிங்கபுரம்.

இராணுவ தினம் தெரியுமா?

நமது நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 15 ஆம் தேதி இராணுவ தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஏன் தெரியுமா? இந்தியாவின் முதல் இந்திய இராணுவ தளபதியாக கே. எம். கரியப்பா ஜனவரி 15 ஆம் தேதிதான் பதவி ஏற்றார். அதற்கு முன்னர் பிரிட்டிஷ்காரர்களே தளபதிகளாக இருந்து வந்தனர். இதைக் கொண்டாடும் விதத்தில்தான் ஜனவரி 15 ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.

— ஆறுபாதி புகழேந்தி.



புகையிலை போடுபவர்களின் முகத்தில் கரி பூசியும், அவர்களின் உதடுகளை துண்டிக்கவும் சட்டம் இயற்றினார். ஜஹாங்கீர்.

— எம். ஆனந்தன், வந்தவாசி.



கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

சி. சுமதி. ஈரோடு.

மஞ்சள் காமாலை வருவது எதனால்? அதன் அறிகுறிகள் எப்படி இருக்கும்?



சுமதித் தங்கையே! முதலில் மஞ்சள் காமாலை (Jaundice) என்பது ஒரு தனிப்பட்ட நோயல்ல; அது ஒரு நோயின் அறிகுறி என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். அடுத்து மஞ்சள் காமாலை வருவதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன. ஹெபடைட்டிஸ் வைரஸ் (Hepatitis Virus) நம் கல்லீரலைத் தாக்கினால் காமாலை வரும். பித்தநீர் குடலுக்கு இறங்கும் குழாய்களில் (Bile Ducts) கல் உண்டாகி, அல்லது புற்றுநோய் போன்ற கட்டிகள் காரணமாக அடைப்பு ஏற்பட்டாலும் காமாலை வரும். இரத்த வியாதிகளில் சிவப்பு இரத்த அணுக்கள் மிக அதிகமாகச் சேதமுற்றாலும் காமாலை உண்டாகும். வெகு அபூர்வமாக சில மருந்துகளினாலும், சுகாதாரமற்ற முறையில் ஒருவருக்கு இரத்தம் செலுத்தப்படும் போதும் காமாலை உண்டாகலாம். எனவே, காமாலை வந்தவர்கள் மருத்துவர் உதவியுடன் காரணம் அறிந்து சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்.

சரி, உன் கேள்வியில் இணைந்து கொண்டிருக்கும் துணைக் கேள்விக்கு வருகிறேன். பிலிருபின் என்ற பித்த நிறமி காமாலை நோயில் அதிகமாக உண்டாகி இரத்தத்திலும், சிறுநீரிலும் கலப்பதால் கண்கள், சிறுநீர் போன்றவை மஞ்சள் நிறமடைகின்றன. அத்தோடு வாந்தி, குமட்டல், பசியின்மை, உடல் சோர்வு, லேசான காய்ச்சல் போன்ற அறிகுறிகளும் காமாலையில் தெரிய வரும்.


இருக்கட்டும். இது பண்டிகை சீசனல்லவா? அதனால் உனக்கு சில போனஸ் செய்திகள். நாம் சாதாரணமாகப் பார்க்கும் காமாலை, வைரஸ் கிருமிகள் கல்லீரலைத் தாக்குவதால் வரக் கூடியது. இது அசுத்தமான தண்ணீராலும் சுகாதாரமற்ற முறையில் தயாராகும் உணவினாலும் வருகிறது. இது தொற்று வியாதியும் கூட. எனவே, இவ் வகைக் காமாலையைத் தவிர்க்க நாம் தண்ணீரைக் காய்ச்சி ஆற வைத்துச் சாப்பிட வேண்டும். சுகாதார முறைப்படி சமைக்கவும் சாப்பிடவும் தெரிந்து கொள்ள வேண்டும். செய்வாயா, சுமதி?

நா. ஸ்ரீவித்யா லட்சுமி. தியாகராஜபுரம்.

சாராயம் சாப்பிட்டால் உடலுக்குக் கெடுதல் என்று என் தோழியிடம் கூறினேன். அவள், கள்ளை மரத்திலிருந்து இறக்கிய



வுடன் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது எனக் கூறினான். இது சரியா?



சரியாப் போச்சு! படிக்கிற காலத்தில் வேறு எதையாவது உருப்படியாக ஆராய்ச்சி செய்யக் கூடாதா? பாழாய்ப் போன கள்ளும் சாராயமும்தானா கிடைத்தது? சரி. விஷயத்துக்கு வருவோம், வித்யாலட்சுமி!

உன் தோழிக்குக் கள்ளுக்கும் பதநீருக்கும் வேறுபாடு தெரியவில்லை என நினைக்கிறேன். பனைநீரை மரத்திலிருந்து இறக்கி சுண்ணாம்பு சேர்த்து விட்டால், பதநீராகி விடும். அதே பனைநீரில்,வேறு சில பொருட்களைச் சேர்த்துப் புளிக்க வைத்துத் தயாரிப்பது கள். இதில், கள், சாராயத்தைப் போலவே உடலுக்குத் தீங்கு செய்யும் போதைப் பொருள். ஆனால், பதநீர் அப்படியில்லை. அது உடம்புக்கு நல்லது. பதநீரில் மாவுச் சத்து, புரதச் சத்து, இரும்புச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் சி, வைட்டமின் பி – ஒன் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளன. எனவே, பதநீர் சாப்பிடுவதால் நமக்கு நன்மையே! ஆனால் கள்? மூச்! அதைப் பற்றி நினைப்பதே பாவம்!

அ. தவ்சாத், **மொரப்பூர்.**


'டான்சில்' வியாதியை ஆரம்பத்திலேயே குணப்படுத்த என்ன செய்ய வேண்டும்?



வாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வெதுவெதுப்பான நீரில் சிறிது சமையல் உப்பைப் போட்டு அதனால் வாயைக் கொப்பளித்து சுத்தப்படுத்த வேண்டும். ஐஸ், ஐஸ்கிரீம், மற்றும் குளிர் பானங்களை அடிக்கடி சாப்பிடக் கூடாது. எச்சில் பண்டங்களை சாப்பிடக் கூடாது. சொத்தைப் பல் இருந்தால் அகற்றி விட வேண்டும். அடிக்கடி சளி, ஜலதோசம் பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும். வெந்நீரை, குடிநீராகப் பயன்படுத்த வேண்டும். மேற் சொன்ன சுகாதார முறைகளைக் கையாண்டால் 'டான்சில்' எனப்படும் தொண்டைச் சதை அழற்சி நோயை (TONSILLITIS) ஆரம்பத்திலேயே குணப்படுத்தி விடலாம்!

எஸ். டெலிமா, **மன்னார்குடி.**

பல்லியின் எச்சம் உடம்பில் பட்டால் விஷமா? அதன் மூலம் ஏதாவது நோய்கள் அணுகுமா?



பயப்படுமளவிற்கு பல்லியின் எச்சத்தில் விஷமில்லை. அதில் உள்ள அமிலத்தன்மை காரணமாகப் பல்லியின் எச்சம் படும் இடங்களில் ஒரு படை போல் வட்டமாகத் தோல் உரியும். இது சில நாட்களில் மறைந்து விடும். சிலருக்கு ஒவ்வாமை (ALLERGY) காரணமாக பல்லியின் எச்சம் பட்ட இடத்தில் சிறு சிறு கொப்புளங்கள் தோன்றலாம். இதைக் கண்டும் நாம் பயப்படத் தேவையில்லை; தகுந்த களிம்புகளைத் தடவி குணப்படுத்தி விடலாம். பல்லியின் எச்சம் பட்ட இடத்தை உடனே குளிர்ந்த நீரால் கழுவி விட்டால் எந்தத் தொந்தரவும் வருவதில்லை என்ற செய்தி உனக்குத் தெரியுமா, டெலிமா?

சு. ஐயப்பன், **தெற்கு காருகுடி.**

பாதங்களில் பித்த வெடிப்பு ஏற்பட்டு வலி எடுக்கிறது. இதைப் போக்க என்ன வழி?



பொதுவாக, பித்த வெடிப்புகளில் அழுக்கு சேர்ந்து கிருமிகள் தொற்றிக் கொண்டால்தான் சீழ் பிடித்து வலி எடுக்கும். எனவே, பித்த வெடிப்பு உள்ளவர்கள் பாதங்களில் அழுக்கு ஏறாமல் பார்த்துக் கொள்வதோடு, அடிக்கடி வெதுவெதுப்பான நீரில் பாதங்களைக் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். **'OLAMIN'** என்ற களிம்பை தினமும் காலையிலும் இரவிலும் தடவி வந்தால் பித்த வெடிப்பு மறையும். பித்த வெடிப்பில் கிருமித் தொற்று இருக்கும் பட்சத்தில் மருத்துவர் ஆலோசனையின் பேரில் 'ஆண்டி பயாடிக்' மருந்துகளையும், வலி நிவாரணிகளையும் உட்கொண்டால் வலி குறையும்; பித்த வெடிப்பு விரைவில் குணமாகும். மென்மையான காலணிகளை அணிந்து கொள்வது, உடல் எடையை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது, பாதங்களை எப்போதுமே சுத்தமாக வைத்திருப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தினால் பித்த வெடிப்பை வராமல் தவிர்க்கலாம்!

டி. வேலுமணி, குண்டடம்.

காய்ச்சல் வரும் போது வெந்நீர் சாப்பிடுவது நல்லதா? குளிர்ந்த நீர் சாப்பிடுவது நல்லதா?



வெந்நீர் சாப்பிடுவதே நல்லது. வெந்நீரால் நமக்கு இரண்டு நன்மைகள் கிடைக்கின்றன. ஒன்று — வெந்நீரில் கிருமிகள் இருப்பதில்லை. இரண்டு — காய்ச்சலின் போது நாம் சாப்பிடும் மாத்திரைகள் வெந்நீரில் சீக்கிரம் கரைந்து விடுமாதலால், அம் மாத்திரைகள் உடனே இரத்தத்தில் கலந்து வேகமாக வேலை செய்யும். இதனால் நமக்குச் சீக்கிரம் குணம் உண்டாகும்.

எம். இரமேஷ், மதுராந்தகம்.

புற்று நோய் நம் உடம்பில் எவ்வுறுப்புக்களைப் பாதிக்கிறது? அதன் அறிகுறிகள் யாவை?



புற்றுநோய் என்பது பெரியவர்களுக்கான விஷயம். இருப்பினும், தம்பி ரமேஷ் அறிய ஆசைப்படுகிறான். தடுப்பானேன்? புற்றுநோய் (Cancer) நம் உடம்பில் எவ்வுறுப்பையும் பாதிக்கலாம். இருந்தாலும் ஆண்களுக்கு வாய், நுரையீரல், இரைப்பை, பெருங்குடல், சிறுநீர்ப்பை, இரத்தம், தோல், கணையம், நிணநீர்க் கட்டிகள் போன்ற உறுப்புக்களில் புற்றுநோய் வரக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். பெண்களுக்கு மார்பிலும், கர்ப்பப் பையிலும் புற்றுநோய் வருகிறது.

எந்த உறுப்பைப் புற்றுநோய் பாதிக்கிறதோ அதற்கேற்பவே அதன் அறிகுறிகளும் அமையும். எனினும் புற்றுநோய்க்கென சில பொதுவான அறிகுறிகள் உள்ளன. அவற்றை இங்கே வரிசைப்படுத்துகிறேன்.

1. உடம்பில் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் வீக்கம் அல்லது கட்டி, 2. இரண்டு வாரங்களுக்கு மேல் ஆறாத புண், 3. உடம்பில் ஏற்கெனவே இருந்த வீக்கமோ கட்டியோ திடீரென வளர்ச்சியடைதல், 4. உடம்பில் உள்ள மச்சங்களில் (Mole) ஏற்படும் திடீர் மாறுதல் அல்லது வளர்ச்சி, 5. உடம்பிலிருந்து இரத்தம் வெளிப்படுதல் — சளியில், வாந்தியில், மலத்தில், சிறுநீரில் இரத்தம் தோன்றுதல், 6. திடீரென உடல் எடை குறைதல், 7. இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்றவை.

மேலே சொன்ன அறிகுறிகள் புற்றுநோய்க் காரணமாகவும் தோன்றலாம்; சில சாதாரண நோய்களிலும் கூடத் தோன்றலாம். எனவே, இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று தோன்றினாலும் உடனடியாக மருத்துவரிடம் காண்பித்து, காரணம் அறிந்து மருத்துவம் வேண்டியது அவசியம்!

1000 மைல் கால்வாய்!

மன்னர் ஷீஹூவாங் தம்முன் தலைகுனிந்து நின்ற அமைச்சர் குவான்யாங்கை எரிச்சலோடு நோக்கினார்.

"மங்கோலியர்கள் இந்த முறை கொள்ளையடித்துக் கொண்டு போன சொத்துக்கள் எவ்வளவு?"

"ஐம்பது ஒட்டகங்கள், இருநூறுக்கும் மேற்பட்ட கழுதைகள். நூறு வண்டி பட்டுத் துணிகள், தங்க வெள்ளிப் பொருள்கள். அதோடு நூற்றுக் கணக்கான கோபுரங்கள், மாளிகைகள் சேதமாகி விட்டன."

"நான் கொடுங்கோலனாக இருக்கலாம். அதற்காக என் மக்களை; என் நாட்டை வெளிப் பகைவர்கள் இப்படி அடிக்கடி வந்து கொள்ளையிடுவதை இனியும் என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எவ்வளவோ நூற்றாண்டுகளாக நடைபெற்று வரும் இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு காண்பதே என் இலட்சியம்" என்று கூறிய மன்னர், "உடனே நிதி அதிகாரி, பொறியாளர்கள், தரைப் படைத் தளபதி ஆகியோரை இங்கு வரவழையுங்கள். புவி இயல் நிபுணர்களையும் வரவழையுங்கள்" என்று கட்டளையிட்டார் மன்னர்.

பல்துறை நிபுணர்களின் கூட்டம் உடனே கூடியது. அரசர் ஷீஹூவாங் தாமே தலைமை தாங்கினார்.

"சீனாவின் வடக்குப் பகுதியிலிருந்து ஆண்டுதோறும் முரட்டு மங்கோலியர்கள் படையெடுத்து நமது மக்களைக் கொன்று, அடிமைகளாக்கி, ஏராளமான செல்வத்தையும் கவர்ந்து போகிறார்கள். நமது மக்களின் பொருளாதாரம், பண்பாடு எல்லாம் பாதிக்கப்படுகிறது. இவர்கள் படையெடுப்பைத் தடுக்க ஒரு பலமான மதிற்சுவர் கட்ட வேண்டும்."

"மதிற் சுவரா!"

"ஆமாம். ஷான் ஹிகுவானிலிருந்து கன்சு – சிங்குமன் வரை ஒரு வலுவான மதிற் சுவரைக் கட்ட வேண்டும்."


"பள்ளத்தாக்குகள், காடு, மலைகள் எல்லாம் குறுக்கிடுமே!"

"இரண்டாயிரம் மைல்களுக்கும் மேல் கட்ட வேண்டியிருக்குமே?"


"பல ஆண்டுகள் கட்டும்படி இருக்குமே? ஏராளச் செலவாகுமே?"


"உண்மைதான். இதெல்லாம் எனக்குத் தெரிந்ததுதான். ஆனாலும், எப்படியாவது இதைச் செய்தாக வேண்டும். மற்ற பணிகளையெல்லாம் நிறுத்தி வையுங்கள். இதை முழுமூச்சாக முடியுங்கள். நமது சந்ததியினர் வாழ்த்துவார்கள்."

கொடுமைக்குப் பெயர் போன ஷீஹூவாங் மன்னரின் ஆணைப்படி சுவர் கட்டும் பணி தொடங்கப்பட்டது. நாலரை முதல் ஒன்பது மீட்டர் உயரமும், சுமார் இரண்டாயிரத்து எழுநூறு கி. மீ. நீளமும் கொண்ட அற்புதமான சீனத்து மதிற் சுவர் எழுந்தது. இடையிடையே நூற்றுக்கணக்கான காவற் கோபுரங்கள் அமைக்கப்பட்டன. கி. மு. 221 இல் தொடங்கப்பட்ட கட்டுமானப் பணிகள் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேல் தொடர்ந்து நீடித்தது. சீன மக்களின் வியக்கத்தக்க புவி – பொறி









ஹாரிஸ்

இயல் துறை அறிவுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி உலக அதிசயங்களில் ஒன்றாகியது. சந்திர மண்டலத்திலிருந்து பார்த்தால் தெரியக் கூடிய ஒரே ஒரு பொருள் என்ற பெருமையையும் பெற்றது!

மதிற் சுவரை எழுப்பியது போலவே சீனத்து மக்கள் முற்றிலும் புதுமையான ஒரு கால்வாயை அமைத்துள்ளனர். இது மஞ்சள் நதி, யாங்ட்சு நதிகளுக்கிடையே கட்டப்பட்டது. இதன் நீளம் ஆயிரத்து அறுநூறு கி. மீக்கு அதிகம்! உலகப் புகழ்பெற்ற பனாமா கால்வாய் 80 கி. மீ. நீளமே! சூயஸ் கால்வாயின் நீளம் 164 கி. மீ. நீளம் தான்! சீனக் கால்வாய் மன்னரது படகுப் பயண உல்லாசத்திற்காகக் கட்டப்பட்டது. சீன மக்களின் பொறியியல் அறிவுக்கு எடுத்துக்காட்டாக அமைக்கப்பட்ட இதன் பெரும்பகுதி அழிந்து விட்டாலும், மிஞ்சியுள்ள பகுதி உள்நாட்டுப் போக்குவரத்துக்கு இன்னும் பயன்பட்டு வருகிறது. சீனச் சுவருக்கு இணையான பெருமைக்கு உரியது தான் இக்கால்வாயும். மனிதரால் வெட்டப்பட்ட இதன் சாதனையை யாரும் வெற்றி கொள்ளவில்லை!



பிருந்தாவனக் கதையரங்கம்

முல்லாவின் சட்டை

ஒருநாள் முல்லாவின் மனைவி தனது வீட்டுக் கொல்லையில் வேலை செய்து கொண்டிருந்த போது திடீரென்று ஏதோ ஒன்று 'டமார்' என்று விழுந்த சத்தம் மாடியிலிருந்து கேட்டது. உடனே ''என்ன அங்கே சத்தம்?'' என்று மாடியிலிருந்த முல்லாவிடம் கேட்டாள்.

முல்லா அதற்கு, ''வேறு ஒன்றும் இல்லை. என் சட்டைதான் கீழே விழுந்து விட்டது'' என்று கூறினார்.

முல்லாவின் மனைவியோ ''விழுந்தது சட்டை என்கிறீர்களே! ஆனால், சத்தமோ பலமாக இருந்ததே?'' என்று மீண்டும் கேட்டாள்.

''சட்டைக்குள் நான் இருந்தால் சத்தம் கொஞ்சமாகவா கேட்கும்? என்று முல்லா அமைதியாகப் பதிலளித்தார்.

— எஸ். அரவிந்தன், ஆற்காடு.



வேறுபாடு



குரு ஒருவரிடம் சிஷ்யன் ஒருவன் வந்து, ''குருவே! அறிவுக்கும், புத்திசாலித்தனத்திற்கும் என்ன வேறுபாடு?'' என்று கேட்டான்.

அதற்குக் குரு சிஷ்யனை நோக்கி, ''அதோ இருக்கிறாரே ஒரு கிழவர், அவரிடம் சென்று 'இங்கிருந்து பக்கத்துக் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்' என்று கேட்டு வா!'' என்றார்.

சிஷ்யனும் அந்தக் கிழவரிடம் சென்று, ''ஐயா! பெரியவரே, இங்கிருந்து பக்கத்துக் கிராமத்தைச் சென்றடைய எவ்வளவு நேரமாகும்?'' என்று கேட்டான்.

அதற்குக் கிழவர் பதிலேதும் கூறவில்லை. சிஷ்யன் மீண்டும் ஒருமுறை கேட்டுப் பார்த்தான். அப்போதும் அந்தக் கிழவர் பதில் கூறாததால், ஒருவேளை அவருக்குக் காது கேட்காதோ என்று நினைத்து, வந்த வழியே திரும்பிச் சில அடிகள் எடுத்து வைத்தான்.

அந்தக் காலடிகளைப் பார்த்துக் கொண்டிருந்த கிழவர் சிஷ்யனை அழைத்து, ''நீ

பத்து நிமிடங்களில் கிராமத்தை அடையலாம்'' என்றார்.

''தாங்கள் ஏன் இந்தப் பதிலை நான் கேட்டதுமே கூறியிருக்கக் கூடாது?'' என்று கேட்டான் சிஷ்யன்.

அதற்கு அக் கிழவர், ''நீ எவ்வளவு வேகமாய் நடக்கிறாய் என்பதைக் காணாமல் எப்படியப்பா நீ கிராமத்தை அடையும் நேரத்தைக் கூற முடியும்?'' அதனால்தான், உன் நடையைக் கண்டபின் கூறினேன்!'' என்றார்.

சிஷ்யன் பதில் எதுவும் கூறவில்லை. நடந்ததைக் குருவிடம் வந்து கூறினான். அதற்கு குரு, ''அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்!'' என்றார்.

— எஸ். குருமூர்த்தி,
காட்டாங்குளத்தூர்.

சொல்லும் செயலும்



ஒரு கிராமத்தில் பசியோடு உணவு தேடி அலைந்து கொண்டிருந்த ஒரு ஓநாய் கிராமத்தின் கோடியில் இருந்த குடிசைப் பக்கமாக வந்தது.

அந்தக் குடிசையின் உள்ளே ஒரு சிறு பையன் அழுது கொண்டிருந்தான். ஒரு கிழவி அவனை அதட்டி, ''நீ அழுகையை நிறுத்து. இல்லாவிடில் உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட்டு விடுவேன் என்று பயமுறுத்தினாள். அதைக் கேட்டு ஓநாய் மேலும் நடந்து அலையாமல் குடிசைக்கு வெளியிலேயே படுத்துக் கிடந்தது. கிழவி பையனை எப்போது வெளியே எறிவாள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இரவு நேரம் ஆகிவிட்டது. ஓநாய் காத்துக் கொண்டே இருந்தது. குடிசையினுள்ளிருந்து குரல் கேட்டது.

''என் தங்க ராஜா! அழாதே! உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட மாட்டேன். கிழட்டு ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும். அதை அடி, அடி என்று அடித்துக் கொன்று விடுவோம்'' என்றாள்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஓநாய், ''இங்கே மக்கள் பேசுவது ஒன்று, செய்வது வேறாக இருக்கிறது!'' என்று எண்ணியபடி எழுந்து வேறு திசையை நோக்கிப் போய் விட்டது.

— நல்லாலம் காசிதாசன்,
கீழ்கொவளவேடு.

உங்கள் நூலகம்

நாவற் பழம்:


(பூதலூர் முத்து — பக். 102 — ரூ. 9/— கங்கை புத்தக நிலையம், சென்னை — 17)

அருமையான பத்துக் கதைகளின் தொகுப்பு. எல்லாமே புதிய கதைக் களங்கள். புதுப் புதுத் திருப்பங்களுடன் பெரியவர்களும் கூடப் படித்து மகிழத்தக்க படைப்பு. ஒவ்வொரு கதையும் ஒரு ஆத்திச் சூடி. 'பரிசு'க் கதை ஏற்கெனவே 'வேண்டாமே பரிசு வேட்டை!' என்ற தலைப்பில் கோகுலத்தில் வந்து, பலராலும் பாராட்டப் பட்டது. 'குப்பையில் வைரங்கள்' தினமணி வெள்ளி மணியில் சந்தித்தெருப்பெருக்கும் சாத்திரம்' என்ற தலைப்பில் வெளியாகிக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் மாதத்திய சிறந்த கதையாகி'ப் பரிசு பெற்றது.

பாப்பா பாட்டு பிறந்த கதை

(பி. வி. கிரி. பக் 78 — ரூ. 9.30 — பழனியப்பா பிரதர்ஸ், சென்னை — 14)

குழந்தைகளுக்காக எழுதியுள்ள கவிஞர்களைக் கொண்டே அவர்களது புகழ்பெற்ற பாடல்கள் எந்தச் சூழ்நிலையில் உருவானவை என்பதைக் கேட்டு, கோகுலத்தில் தொடர்ந்து வெளியிடப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. தொடராக வெளிவந்த போதே நல்ல வரவேற்பைப் பெற்றது. குழந்தை இலக்கியத்தின் படைப்பிலக்கிய இயல்' பிரிவுக்கு அழகு செய்ய வல்ல பயனுள்ள நூல் — ரே.



படம் இங்கே, கதை எங்கே? போட்டி

படத்தைப் பார்த்தீர்களா? கவனமாக இன்னொரு முறை பாருங்கள். வண்டி போய்க் கொண்டிருக்கிறது. ஒரு சிறுவன் அதில் இருக்கிறான். சற்றுத் தூரத்தில் இன்னொரு சிறுவன் வண்டியைத் துரத்திக் கொண்டு வருகிறான். வண்டியில் இருக்கும் சிறுவன் அவசரத்தில் எதையாவது மறந்திருப்பானோ? இல்லையேல் வேறு ஏதாவது அவசரச் செய்தி கொண்டு வருகிறானோ? அது என்னவாக இருக்கும்? உங்கள் கற்பனைக் குதிரையைத்தான் சற்றுத் தட்டி ஓடவிடுங்களேன்! படத்திலுள்ள காட்சிக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். கதை கோகுலத்தில் 2 பக்கங்களுக்கு மேல் போகக் கூடாது. காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். கூப்பனை அவசியம் அனுப்ப வேண்டும். பரிசு பெறாதவை/தேர்ந்தெடுக்கப்படாதவை திருப்பியனுப்பப்பட மாட்டாது. எனவே, தபால்தலை வைக்க வேண்டாம். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032.

கூப்பன்...

கதை எங்கே போட்டி

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

பின் கோடு ....

முடிவு தேதி: 15.12.90

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: ஆ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

பாரீஸ் பிஸ்கட்டுகள்

"வாழ்க்கை சுவையாக இருக்கவேண்டும்"
இதைச் சொல்லப் பல வழிகள் உண்டு...



வாழும் வாழ்வில் சுவை இருக்கவேண்டும். மனத்துக்கினிய மணம் இருக்கவேண்டும். அதற்கு பாரீஸ் காட்டும் வழி: ☐ சாறுள்ள பைனாப்பிள் கிரீம் ■ சாறு செறிந்த ஆரஞ்சு கிரீம் ■ கெட்டியான சாக்லேட் கிரீம் ■ புத்துணர்ச்சி தரும் கார்டமம் கிளாஸிக் ■ சத்து நிறைந்த குளுக்கோஸ் ☐ உடல்நலத்திற்கு மில்க் பிஸ்கட்டுகள் ■ எந்நேரத்திற்கும் ஏற்ற மாரி வாழ்வில் சுவை கூட்ட இவை எல்லாம் சேர்ந்து சிறந்த சுவையை அள்ளித் தருகின்றன.

பாரீஸ் – அனைவரும் விரும்பும் தரமான பிஸ்கட்டுகள். மிட்டாய்கள்

PARRYS

Parry's
FRESH & CRISP BISCUITS